லை : 20.00
ங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

ebsite : www.valampurii.lk
mail: valampurii@yahoo.com

கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 03 செவ்வாய்க்கிழமை (16.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கைக்கான அமெரிக்க உதவி இருபது சதவீதத்தால் குறைப்பு!

## இராஜாங்கச் செயலர் முன்மொழிவு

(வாஷிங்டன்)

இலங்கைக்கான அமெரிக்காவின் உதவியில் 20 சதவீதம் குறைக்கப்பட வேண்டும் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் ஹெரி முன்மொழிந்துள்ளார். மனித உரிமைகள், மீள்கட்டுமானம், அரசியல் ஒன்றிணைவு ஆகியன தொடர்பாக உண்டாகியுள்ள கசப்புணர்வை பிரதிபலிக்கும் வகையில் இலங்கைக்கான அமெரிக்காவின் உதவியில் குறைப்பினை மேற்கொள்வதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ..க்கில் இராணுவ பிரசன்னம் அதிகம் ..ங்கள குடியேற்றம் உண்மையில்லை

### அமைச்சர் வாசுதேவ கருத்து



(கொழும்பு)

வட பகுதியில் இராணுவப் பிரசன்னம் அதிகம் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குற்றச்சாட்டில் நியாயமுள்ளது.

ஆனால் அங்கு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதாகக் கூறுவதில் உண்மையில்லை என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜனநாயக இடது (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன்!



### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆலோசனை

(கொழும்பு)

வடக்குமாகாண சபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பொது முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நிறுத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடத்தப்படுமென்று அரசு உறுதியளித்துள்ளது. திட்டமிட்டபடி தேர்தல் இடம் பெறுமென்று அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, டலஸ் அழகப்பெரும போன்றோர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே தமிழ்த் தேசியக் (20ஆம் பக்கம் பார்க்க)

## ..ரினா கடற்கரையில் ..ம்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

..லைநகர் கசூரினா கடற்கரை ..மர்மமான முறையில் குடும் ..ர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ..கோண்டாவில் ஸ்ரேசன் வீதி ..னச் சேர்ந்த வேலாயுதபிள்ளை ..குரு (வயது 32) என்பவரே இவ் .. உயிரிழந்துள்ளார்.

..ஆட்டோ சாரதியான இவர் ..றையதினம் காரைநகர் கசூரினா ..கரையில் குளிப்பதற்காக சென் ..ளார்.

..எனினும் பி.ப.3.30 மணியள .. இவர் இப்பகுதியில் சடலமாக ..துள்ளார்.

..சடலம் மூளாய் வைத்தியசாலைக்கு ..ண்டு செல்லப்பட்டு பின்னர் ..த பரிசோதனைக்காக யாழ். ..தனா வைத்தியசாலையில் ..டைக்கப்பட்டுள்ளது.

..இது தொடர்பான விசாரணை ..ள ஊர்காவற்றுறை பொலி ..ம், யாழ்.போதனா வைத்திய ..ல விசாரணைப் பிரிவு பொலி ..ம் மேற்கொண்டு வருகின்ற (எ-4,6)

## கொங்ஹொங்கில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர் இருவருக்கு அடைக்கலம் கொடுத்த நீதிமன்றம்

(கொங்ஹொங்)

தமிழர்களின் உலகளாவிய எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஒரு உந்துவிசையாக கொங்ஹொங் மேல்நீதிமன்றம் ஒன்று இரு தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததுடன் இலங்கையில் சித்திரவதை அமைப்பு ரீதியாகக் கையாளப்படுகிறது என்று உறுதி செய்துள்ளது.

அவர்கள் இருவரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால், அவர்கள் சித்திரவதை செய்யப்படுவதற்கும், கொல்லப்படுவதற்கும் வாய்ப்புள்ளது என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட அந்த இருவரின் பெயர் (20ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலியாவுக்கு அகதிகள் படகு சென்றது

(சிட்னி)

புகலிடக் கோரிக்கையாளர் படகொன்று அவுஸ்ரேலியாவை சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்கு அவுஸ்திரேலிய நகரமொன்றான புரூமிற்கு புகலிடக் கோரிக்கையாளர் படகொன்று சென்றுள்ளது. இந்தப் படகில் சுமார் 72 பேர் பயணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பேர்த் நகரிற்கு அருகாமையில் உள்ள துறைமுகமொன்றை இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் படகு சென்றடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்கு அவுஸ்திரேலியா பொலிஸ் குறித்த படகுப் பயணிகளை கைது செய்துள்ளனர்.

இந்தப் படகு பயணிகளில் சிலருக்கு புரூம் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் ஏனைய (19ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் இல்லத்தில் இருந்த 16 சிறுமிகளை காணவில்லை

### சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 16 சிறுமிகள் காணாமல் போயுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. நேற்று முற்பகல் 11 மணியளவில் குறித்த சிறுவர் இல்லத்திலிருந்து வெளியேறிய 16 சிறுமியர்களும் எங்கு சென்றுள்ளனர்? என்ன காரணத்திற்காக விடுதியை விட்டு வெளியேறினர்? என்பது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரும், குறித்த சிறுவர் இல்லத்தின் பொறுப்பதிகாரிகளும் உறுதிப்படுத்தவில்லை. அத்துடன் மாறுபட்ட தகவல்களையும் வழங்கியிருந்தனர்.

விடுதியிலிருந்த 10 சிறுமிகள்தான் வெளியேறியிருந்தனர் எனவும் இவர்கள் 18 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் குறித்த சிறுவர் இல்லத்தின் பொறுப்பதிகாரி எனத் தன்னை அறிமுகப்படுத்தியவர் தெரிவித்தார்.

இதேவேளை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் பதில் பொலிஸ் பரிசோதகர் ராஜசிங்கவிடம் குறித்த சிறுவர் இல்ல விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்ட போது, முறைப்பாடு பதியப்பட்டுள்ளது எனவும் இது தொடர்பாக பொலிஸ்மா அதிபரிடம் தெரியப்படுத்தியுள்ளோம். எமக்கு ஊடகங்களுக்குத் தகவல் கொடுக்கும் அதிகாரங்கள் இல்லை எனவும் கூறி முழுமையான தகவல்களை வழங்க மறுத்துவிட்டார்.

இருப்பினும் ஒரு சில தகவல்களை மட்டும் உறுதிப்படுத்தியிருந்தார். அதாவது குறித்த விடுதியில் இருந்து (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

# சிப்பாயை தாக்கிய குடும்பஸ்தர் கடற்படையால் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்டைதீவில் கடற்படையினை சேர்ந்த சிப்பாய் ஒருவரினைத் தாக்கிய குடும்பஸ்தர் ஒருவர் கடற்படையினரால் மோசமாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் மண்டைதீவினைச் சேர்ந்த ஜெ.காண்டீபன் (வயது-29) எனும் குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் ரோந்து சென்ற படையினரை தாக்கினார் என்ற குற்றச்சாட்டிலேயே கடற்படையினரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

எனினும் பிரஸ்தாப குடும்பஸ்தரின் உறவினர் ஒருவரை பிரஸ்தாபச் சிப்பாய் பலாத்காரம் செய்ததாகவும் அதனாலேயே சிப்பாய் மீது குடும்பஸ்தர் தாக்குதல் மேற்கொண்டதாகவும் இணையத்தளச் செய்திகள் குறிப்பிடுகின்றன. (எ-4, 6)

## லெனின் நினைவு தினம்

இவர் பிறந்தது 22.04.1870. இறந்தது 21.01.1924. ரஷ்யாவில் இவர் ஏற்படுத்திய ஆட்சியில்தான் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமஅந்தஸ்து, சமவாய்ப்புக் கிடைத்தது. அந்த ஆட்சி 14 பால்டிக் குடியரசுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு சோவியத் யூனியன் ஆக வளர்ந்தது. இந்த ஆட்சி 1991 இறுதி வரை நீடித்தது.

தகவல்: சி.குமாரலிங்கம்

(2378)

## காணி, வீடு விற்பனைக்கு

காணி — **யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டர் சந்திக்கு அண்மையில் 11/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. NRE/L/o21

காணி — **திருநெல்வேலி**
திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு வடக்குப் பக்கமாக 10 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. NRE/L/o13

காணி — **தெல்லிப்பழை**
மல்லாகம் சந்திக்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கும் இடையில் கே.கே. எஸ் வீதியில் 2 பரப்புக் காணி விற்னைக்குண்டு. NRE/L/o20

காணி — **கரவெட்டி**
கரவெட்டி செயலகத்திற்கு அண்மையில் 14 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தென்னைகள், பனைகள் உள்ள காணி. NRE/L/o19

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810

# மீன்பிடித் தடைக் காலத்தில் தீர்வு காணக் கோரிக்கை

(சென்னை)

மீன்பிடித் தடை காலத்தின்போது இரு நாட்டுக் கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என இராமேஸ்வரம் கடற்றொழிலாளர்கள் இந்திய மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

கடல் மீன் வளத்தை பேணுவதற்காக நேற்றிலிருந்து மே மாதம் 29 ஆம் திகதி வரை மீன்பிடித் தடை அமுல்படுத்தப்படவுள்ளது. இதன் பின்னர் இலங்கை கடற்படையின் பயமுறுத்தலுக்கு மத்தியில் தமது தொழிலை தொடர முடியாமா என்பதையிட்டு இராமேஸ்வரம் மீனவர்கள் முடிபெடுக்க முடியாமல் உள்ளனர்.

இந்த மீன்பிடித் தடை காலத்தின்போது தமது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் அல்லது தமது வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தை ஈட்ட மாற்றுவழி வழங்கப்பட வேண்டுமென தமிழ்நாட்டு கடற்றொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் பி.சேசுராஜா கூறினார். (எ-4)

பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 15 |
| 04 | 04 |
| 1951 | 2013 |

**திரு.சிவப்பிரகாசம் சாம்பசிவம்**

141, இராசாவின் தோட்டம், நல்லூர், யாழ்ப்பாணம்.
ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தில் பணியாளராக கடமையாற்றும் சா.சிந்துஜாவின் அன்புத் தந்தையார்.

**சிவப்பிரகாசம் சாம்பசிவம்** அவர்களின் திடீர் மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைவதோடு அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

527, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

தியாகி அறக்கொடை நிறுவனம்,
ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்
பணிப்பாளர்,பணியாளர்கள்.

(2379)

WESTERN UNION

MONEY TRANSFER

சித்திரைப் புத்தாண்டிற்கு வெளிநாட்டிலிருந்து வெஸ்டன் யூனியன் மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக்கொண்டு அளப்பரிய பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

இச்சலுகை ஏப்ரல் 10 முதல் 20 வரை

ஸ்ரீ முருகன்

தொலைத் தொடர்பு நிலையம்
303, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 0212225392- 0212222670.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு- 06.04.1939

உதிர்வு - 28.04.2012

திதி: 17.04.2013

**திருமதி சிவரூபராணி செந்திவடிவேலு**

அம்மா என்று அழைப்பதன் அர்த்தத்தின் முழுவுருவமாய் வாழ்ந்தீர்கள்
அன்பான கணவனுடன் தமிழ் பண்புடன் பெண்ணாய் வாழ்ந்தீர்கள்
ஆறு பிள்ளைகள் பெற்று பாசத்துடன் குறையேதுமின்றி வளர்த்தீர்கள்
இன்று எல்லோரையும் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்
வாழும் காலமெல்லாம் உங்கள் நினைவுடன் வாழும்

**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

எமது அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்தி கிரியைகள் நாளை (17.04.2013) புதன் கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்தி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாதர் வளவு,
மல்லிஓடை ஒழுங்கை,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

**N.செந்திவடிவேலு**
கணவர்

(2374)

## மரண அறிவித்தல்



**நந்தகுமார் அமிர்தகுமாரி ( பபி அக்கா )**

குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நந்தகுமார் அமிர்தகுமாரி ( பபி அக்கா ) அவர்கள் 10.04.2013 அன்று காலமானார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.04.2013 இன்று காலை 9 மணிக்கு ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.
தொ.பே. 0213006424 , 0776314229

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எறும்பின் கர்வம்

ஒரு சமயம் இவ்வுலகில் உள்ள எறும்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு மகா நாடு நடத்தியது. அந்த மகாநாட்டின் பெயர் அகில உலக எறும்புகள் மாநாடு.

அதிலே ஒரு எறும்புத் தொண்டர் உரையாற்ற ஆரம்பித்தார்.

"எறும்புச் சகோதர்களே! சகோதரிகளே!

இந்த உலகத்திலே நமக்குப் பெரிய எதிரி எது என்று கேட்டால், அது யானைதான்.

நாம் எல்லோரும் சேர்ந்து கூட்டமாக எங்கேயாவது சென்று கொண்டிருப்போம். அப்போது திடீரென ஒரு யானை வந்து எம்மீது காலை வைக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். என்ன நடக்கும்? ஆயிரக்கணக்கான நமது தோழர்கள் மாண்டு போவோம். இதைத் தடுத்து நிறுத்த என்ன வழி என்பது பற்றி நாம் சற்று யோசிக்க வேண்டியுள்ளது" என்றார்.

அதனைத் தொடர்ந்து ஒரு எறும்பு பிரதிநிதி பேச முன் வந்தார்.

"நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது எதிரியான யானையைக் கொல்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்" என்று கூறி விட்டு அமர்ந்து கொண்டது.

கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தார்கள். அவர்களுக்குள்ளே ஒரு அகில உலகத் தலைவரைத் தேர்ந்தெடுத்து அந்தத் தலைவர் கடவுளைத் தவம் செய்து அவரிடமிருந்து ஒரு வரம் பெறுவது. அதாவது "**நாம் யானைகளைக் கடித்தால் அது சாக வேண்டும்**" அப்படியென்ற வரம். இதுதான் அவர்கள் எடுத்த முடிவு.

உடனே அத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அதன்பின்னர் ஏகப்பட்ட போட்டிக்கு நடுவில் ஒரு தலைவர் தேர்தெடுக்கப்பட்டார். தலைவரான உடனே அந்த எறும்புக்கு ஆணவம் வந்து விட்டது.

"எறும்புகளே! உங்களின் ஒரே தலைவன் நான்... கடவுளிடம் வரம் வேண்டி கொடுப்பது என் கடமை... எப்படியான வரம் வாங்கப் போகிறேன் என்பதை சற்று பொறுத்திருந்து பாருங்கள்" என்றது.

நீண்ட காலமாகத் தலைவன் எறும்பு தவம் இருந்தது.

ஒருநாள் கடவுள் காட்சி கொடுத்து "எறும்பே! உன் தவத்தை மெச்சுகிறேன். என்ன வேண்டும் கேள்" என்றார்.

உடனே எறும்பு; "**நான் கடித்தால் சாக வேண்டும்**" அவ்வளவு தான் கேட்டது.

"சரி தந்தேன்" என்று கடவுள் சொல்லி விட்டார்.

வரம் வாங்கியதில் எறும்புத் தலைவனுக்கு மிகவும் மகிழ்ச்சி.

இருந்தாலும் வாங்கிய வரம் பலிக்குதா என்பதை பரிசோதிக்க வேண்டுமல்லவா... யாரை கடிக்கலாம் என்று யோசனை செய்தது.

எதிரில் வரம் கொடுத்த கடவுள் தான் நின்று கொண்டிருந்தார். அதுதான் வரம் வாங்கி முடிந்ததே... இனிமேல் இவர் எதற்கு... என்று யோசனை செய்தது.

உடனே அவரை ஒரு கடி கடித்தது.

அவர் "பட்"டென்று கையாலே ஒரு தட்டுத் தட்டினார். எறும்பு "அப்பாடா"வென்று கத்திக் கொண்டே வலி தாங்க முடியாமல் சுருண்டு விழுந்தது.

"என்ன இது? வரம் பலிக்கவில்லையே... நீங்கள் சாக வேண்டுமே... இப்போது நானல்லவா செத்து விடுவேன் போல இருக்கிறது?" என்று எறும்பு கூறியது.

கடவுள் சிரித்தபடி சொன்னார்;

"நீ என்ன வரம் கேட்டாய்; **நான் கடித்தால் சாக வேண்டும்** என்ற வரம் கேட்டாய்; தந்தேன். இப்போது நீ கடித்தாய்; சாகப் போகிறாய்" என்றார்.

இந்த எறும்பு எப்படி வரம் கேட்டிருக்க வேண்டும்?

"**நான் யாரைக் கடிக்கிறேனோ அவர்கள் சாக வேண்டும்**" என்று கேட்டிருந்தால் சரி. ஏன் அது அப்படி கேட்கவில்லை தெரியுமா?

ஆணவம்! ஆணவம் வந்தால் அறிவு மழுங்கி விடும்.

அப்படித்தான் இவ்வுலகில் வாழும் மனிதர்களாகிய எமக்கு சில நேரங்களில் அறிவு சரியாக செயற்படுவதில்லை. மழுங்கடிக்கப் படுகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# யாழ். மாநகர சபைக்கட்டடம் அமைக்க முதற்கட்டமாக 200 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் கட்டடம் அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் 200 மில்லியன் ரூபா செலவில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இந்தக் கட்டடம் அமைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சுமார் 800 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ். சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாகவுள்ள மாநகர சபை வளாகத்தினுள் இந்தக் கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென 200 மில்லியன் ரூபா முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ள மாநகர சபையின் புதிய கட்டடம் பூர்த்தியாக்கப்பட்ட பின்பும் தற்போது நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலயக் காணியில் இயங்கி வரும் மாநகர தொடர்ந்து உப அலுவலகமாக செயற்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் தற்போது பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

பாலங்கள் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது. இதுதவிர நவீன வசதிகளுடன் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு யாழ். நகரத்தை அழகுபடுத்தும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் எதிர்க்கட்சியினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எமக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

யாழ். மாநகர சபையின் ஆளும் கட்சியினரான நாம் செய்து வரும் அபிவிருத்தித்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் எதிர்ப்பு அரசியல் நடத்தி வருகின்றனர்.

எதிர்க்கட்சியினரின் அரசியல் காழ்ப்புணர்ச்சி நடவடிக்கைகளுக்கான அபிவிருத்திப் பணிகளை நாம் கைவிடப்போவதில்லை. தொடர்ந்து அபிவிருத் திப்பணிகளையும் மக்கள் நலத்திட்டங்களையும் முன்னெடுப்போம் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள பெரும்பான்மையான உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு காணப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன.

உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்யப்படுகின்றது எனவும் குற்றம் சாட்டிய முதல்வர் உணவகங்களில் இடம்பெறும் முறைகேடுகளை கண்காணித்துச் சட்ட நடவடிக்கைகளுக்குட்படுத்துவது இலகுவான விடயமல்ல. அத்தோடு சட்ட நடவடிக்கைகளின் மூலம் கட்டுப்படுத்தவும் முடியாது. உணவகங்களின் உரிமையாளர்கள் மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுவதன் மூலமே கட்டுப்படுத்த முடியும்.

இருப்பினும் முறைகேடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 110 | 120 |
| தக்காளி | 150 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 60 |
| கரட் | 150 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 160 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 60-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 70 | 60 |
| லீக்ஸ் | 200 | 200 | 160 |
| பீற்றூட் | 120 | 40 | 60 |
| கறிமிளகாய் | 120 | 70 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 |
| போஞ்சி | 150 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 15-20 | 20 |
| தேசிக்காய் | 160 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 |

# இராசி பலன்

16.04.2013
(சித்திரை 3, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 1.05 மணிவரை
மிருகசீரிடம் காலை 8.32 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
சஷ்டி விரதம்.

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம்பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்** வருமானம் அதிகரிக்கும், உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொலைபேசி தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மிதுனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களால் அன்புத் தொல்லை ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்** புதிய பொருட்கள் வாங்கி பூரிப்படைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், பிதா சிந்தையுண்டு, உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**சிங்கம்** இனிமையான நாள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** ஆடம்பர பொருட்கள் வாங்குவதில் அதிக நாட்டம் காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், மற்றவர்கள் உதவி செய்ய் முன்வருவர்.

**துலாம்** தொழில் ரீதியாக உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பொருளாதார நிலை உயரும், தந்தை வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.

**விருச்சிகம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, செலவுக்கு பணம் போதாமை காணப்படும்.

**தனுசு** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், முயற்சிகள் கைகூடும்.

**மகரம்** மனையில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கு வாய்ப்புண்டு, ஆரோக்கியம் சீராகும், கனிவாக பேசிகாரியம் சாதிப்பீர்கள், பிரியமான பலரின் சந்திப்புண்டு.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** உடன்பிறப்புக்களால் உற்சாகம் பெருகும் நாள், புதிய நபரின் அறிமுகம் கிடைக்கும் தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரையிடாத நிறுத்தல் அளவையை பாவித்தோருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை பயன்படுத்தியதாகக் கூறப்படும் 28 வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தின் நிறுத்தல் அளவைகள் முத்திரையிடுதல் அலுவலகத்தினால் கடந்த 8, 9, 10 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகளை பயன்படுத்தியதாகக் கூறப்படும் 28 வர்த்தகர்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ்.நகர், வேலணை, பருத்தித்துறை, சாவகச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் முத்தியிடப்படாத நிறுத்தல் அளவைக் கருவிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றமை தெரிய வந்துள்ளது.

அத்துடன் மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக் கடைகள், மீன்சந்தைகளிலும் நிறுத்தல் அளவைக் கருவிகள் சரியான முறையில் பயன்படுத்தப் படுவதில்லை எனவும் அவர் கூறினார்.


மேலும் இந்தச் சோதனையின்போது வெதுப்பகங்களிலும் பாணின் நிறை குறைவாக அளக்கப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-6)




# கழிவு நீர் குட்டைகளாக மாறிவரும் யாழ்.குடாநாட்டில் உள்ள குளங்கள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்திலுள்ள குளங்கள் இவ்வருடம் முதல் இரு மாதங்களுக்குள் புனரமைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டபோதிலும் இதுவரை எந்தவொரு குளங்களிலும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதனால் குளங்களிலுள்ள அணைக்கட்டுக்கள், வடிகால்கள் தூர்ந்து போய்விடக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் குளத்து நீர் நிரந்தரமாக மாசுபடக்கூடிய ஆபத்தான நிலையேற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.**



யாழ்.மாவட்டத்திலுள்ள குளங்களில் முக்கியத்துவம் வாய்ந்த குளங்களும் யாழ். மாநகர சபை எல்லைக்குள்ளேயே காணப்படுகின்றன.

எனினும் இக்குளங்களின் புனரமைப்பினை யாழ்.மாநகர சபை மேற்கொள்ளாது என சபையின் முதல்வர் ஏற்கனவே ஊடகங்களிற்கு தெரிவித்திருந்ததோடு அனைத்து குளங்களின் அபிவிருத்தியினையும் நகர அபிவிருத்தி அதிகார சபையினரே மேற்கொள்வர் எனவும் கூறியிருந்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண பணிப்பாளரும் கடந்த வருடத்தில் இவ்வருட முதலிரு மாதங்களில் யாழ். மாவட்டத்திலுள்ள குளங்களில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் கூறியிருந்தார்.


இதற்கு ஏற்றால் போல் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகளின் புனரமைப்பின் பின்னரும் மார்கழி மாத மழையின் பின்னரும் இக்குளங்களின் புனரமைப்பு நகர அவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் எனவும் முன்னரே முதல்வர் கூறியிருந்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கூறப்பட்ட தவணை, மாநகர சபையினால் கூறப்பட்ட காரணம் என்பன தற்போது முடிவடைந்துள்ள நிலையிலும் குளங்களின் புனரமைப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையிலும் ஏன் இது வரை புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என கேள்வி எழுப்பப்படுகின்றது.

யாழ்.நகரில் உள்ள குளங்கள் நீண்ட காலமாக தூய்மை செய்யப்படாமையினால் அவை தற்போது கழிவுகள் தேங்கும் குட்டைகளாக உருமாறி வருகின்றன.

யாழ்.நகரிற்கு அருகாமையிலுள்ள புல்லுக்குளத்தின் தெற்கு மற்றும் கிழக்கு திசைகளிலுள்ள அணைக்கட்டுக்கள் உடைவடைந்து சுமார் 4 மாதங்களாகின்ற நிலையில் அதனைக்கூட உரியவர்கள் இதுவரை புனரமைப்புச் செய்யாமல் இருக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நமது முன்னோர்களின் அரிய பொக்கிஷங்களான இக்குளங்களை அழியவிடாது மேலும் தாமதிக்காது உடனடியாக புனரமைக்குமாறு வேண்டப்படுகின்றது. (அ-4)




# புதுவருட தினத்தில் குற்றச்செயல்கள் பதிவாகவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழில் புதுவருட தினத்தில் அடிதடி, கொள்ளை போன்ற பாரியளவான குற்றங்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்படவில்லை என யாழ்.பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி விக்கிரமாரச்சி தெரிவித்தார்.

புதுவருடத்தினை முன்னிட்டு யாழ்.நகரில் பொலிஸ் ரோந்து பணிகள் அதிகரிக்கப் பட்டமையினாலேயே குற்றச் செயல்கள் இடம்பெறுவது குறைக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக புதுவருட தினத்தன்று திருட்டுக்கள், தகராறுகள் என்பன அதிகரித்து காணப்படுவதோடு விபத்துக்களும் அதிகரித்து காணப்படுவது வழக்கமாகும். எனினும் பொலிஸாரின் திட்டமிட்ட செயற்பாட்டினால் இவையனைத்தும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

எதுவாயினும் இவ்வருட புத்தாண்டு தினத்தில் அடிதடி, கொள்ளை போன்ற பாரியளவிலான குற்றச் செயல்கள் பதிவு செய்யப்படவில்லை என தெரிவித்தார். (அ-4)

# கோஷ்டி மோதலில் மூவர் படுகாயம்

(கரணவாய்)

இரு குழுவினருக்கிடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலில் மூவர் படுகாயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் மணற்காடு பொற்பதி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அன்ரனிஸ் (வயது 50), நெஷாந் (வயது 27), ஜெபஸ்ஷன் ஆகிய ஒரே குழுக்களைச் சேர்ந்த மூவருமே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மற்றைய குழுவைச் சேர்ந்தவர்கள் சிறு சிறு காயங்களுக்குள்ளாகி உள்ளதாக தெரிய வருகின்றது. (அ-3-60)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் 12ஆம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மருதடி விநாயகர் ஆலய அறநெறி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நந்திக் கொடியை ஏற்றி நிகழ்வை பிரதம விருந்தினர் ஆரம்பித்து வைப்பதையும், அறநெறி பாடசாலை அதிபர் வே.தம்பாப்பிள்ளை தலைமையேற்று நடத்திய இந்நிகழ்வில், மருதடி விநாயகர் ஆலய பிரதமகுரு ஆசியுரை வழங்குவதையும், ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் உதயசூரியர் மற்றும் பிரதம விருந்தினர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன், கௌரவ விருந்தினர் பல்கலைக்கழக விரிவுரையாளர் சந்தையா சிவராசா ஆகியோர் உரையாற்றுவதையும், கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் கல்வி வலயத்தின் தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(மல்லாவி

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியின் வலய மட்டபோட்டி முடிவுகள் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றனால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**பிரிவு I-பாவோதல்**

தி.தேனுகா (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா.), க.சுயானி (மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா.), ப.தினேகா (மு/நட்டாங்கண்டல் அ.த.க.பா.)

**பேச்சு**

சி.சோபிதன் (மு/வவுனிக் குளம் படிவம் 4 அ.த.க.பா.), அ.மதுஜா (மு/பாலிநகர் ம.வி.), சி.தனுஷா (மு/முத்தையன்கட்டு இடது கரை அ.த.க.பா.),

**பிரிவு II பேச்சு**

ச.டிசாந்தன் (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா.), ச.சரணியா (மு/யோகபுரம் ம.வி.), தி.சோபனா (மு/நட்டாங்கண்டல் அ.த.க.பா.)

**வாசிப்பு**

இ.நர்மதா (மு/பாலிநகர் ம.வி.), வி.தர்சிகா (மு/துணுக்காய் அ.த.க.பா.), ஜே.ஜெய துர்க்கா (மு/ஒலுமடு த.வி.)

**பாவோதல்**

அ.சானுகா (மு/மாங்குளம் ம.வி.), அ.வேணுசா (மு/நட்டாங்கண்டல் அ.த.க.பா) பா.அஜி ந்தன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி),

**பிரிவு 4 பாவோதல்**

தே.சுகிர்தா (மு/மாங்குளம் ம.வி.), இ.மேது ஜா (மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா.)

**பிரிவு II நடனம் (தனி)**

த.விவிர்ணுகா (மு/கற்சிலைமடு அ.த.க.பா.),வ.வைஸ்ணவி (மு/மல்லாவி மத்திய கல்லூரி), நி.வினித்தா (மு/பாண்டியன் குளம் ம.வி.)

**பிரிவு I வாசிப்பு**

ப.கேதுஜா (மு/பாலிநகர் ம.வி.), பி.சுஞ்சிகா (மு/அனிஞ்சியன்குளம் த.வி.), சி.சாருஜா (திருமுறிகண்டி இ.வித்.)

**பிரிவு- III நடனம் (தனி)**

த.தீசனா (மு/கற்சிலைமடு அ.த.க.பா.), சுவர்ணமுகி (மு/யோகபுரம் ம.வி.),உ.துர்க்கா (மு/பாண்டியன்குளம் ம.வி.)

**பேச்சு**

து.குபேந்தினி (மு/ஒட்டுசுட்டான் ம.வி.), ஜெ.மிர்ணாளினி (மு/பாண்டியன்குளம் ம.வி),

**பிரிவு I இசையும் அசைவும்**

யே.டினோஜா (மு/ஆறுமுகம் வித்), க.லகிதா (மு/தேறாங்கண்டல் அ.த.க.பா.), சி.பிறேமிகா (மு/பனங்காமம் மூன்று முறிப்பு அ.த.க.பா.)

**பிரிவு- V நடனம் தனி**

பு.சுகன்யா (மு/கற்சிலைமடு அ.த.க.பா.)

**பாவோதல்**

ச.சுமேதா (மு/மல்லாவி மத்திய கல்லூரி), அ.புனிதா (மு/மாங்குளம் ம.வி.)

**பிரிவு IV நடனம் தனி**

யோ.டிலக்சிகா (மு/கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பா.)

**பிரிவு III பாவோதல்**

ப.டயந்தா (மு/மாங்குளம் ம.வி.), வே.டிலக்சிகா (மு/யோகபுரம் ம.வி.)

**பிரிவு-I ஆக்கத்திறன் வெளிப்பாடு**

நா.தனராஜ் (மு/ஆறுமுகம் வித்.), வ.ரஜிபன் (மு/பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலை), ஜெ.வினோஜா (மு/மயில்வாகனம் த.வி.)

**பிரிவு -I நடனம் குழு**

மு/கற்சிலைமடு அ.த.க.பா.,மு/யோகபுரம் ம.வி.

**பிரிவு- IV பேச்சு**

பி.பிரசாந்தினி (மு/பாலிநகர் ம.வி.)

**பிரிவு V பேச்சு**

ர.லோகேஸ்வரன் (மு/பாண்டியன்குளம் ம.வி.), நா.யசிந்தா (மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா.)

**பிரிவு II இசை குழு -II**

மு/ஒட்டுசுட்டான் ம.வி.

**திறந்த போட்டி நாட்டார் பாடல்**

மு/யோகபுரம் ம.வி.

**நாட்டிய நாடகம் (ஆடல்கதை)**

மு/ஒட்டுசுட்டான் ம.வி.

**பிரிவு -II இசை தனி**

பி.இனியவன் (மு/தேறாங்கண்டல் அ.த.க.பா.), சி.ஸ்ரீதரன் (மு/கற்சிலைமடு அ.த.க.பா.)

**பிரிவு-I இசைகுழு -I**

(மு/கற்சிலைமடு அ.த.க.பா.), (மு/மல்லாவி மத்திய கல்லூரி), (மு/பாலிநகர் ம.வி.)

**திறந்தவெளி விவாதப் போட்டி**

(மு/மாங்குளம் ம.வி.), (பாண்டியன்குளம் ம.வி.)

**நாட்டார் பாடல்**

மு/யோகபுரம் ம.வி.

**பிரிவு V இசை தனி**

இ.கம்ஜினி (மு/ஒட்டுசுட்டான் ம.வி.)

**பிரிவு-IV இசை தனி**

இ.மேரிபிரியங்கா (மு/மாங்குளம் ம.வி.), பா.பவிதா (மு/பாண்டியன்குளம் ம.வி.), ம.மதுரா (மு/தேறாங்கண்டல் அ.த.க.பா.)

**பிரிவு -III இசை தனி**

சி.தர்மிதா (மு/கற்சிலைமடு அ.த.க.பா.), த.நிவேதா (மு/மல்லாவி மத்திய கல்லூரி), கா.ஜெயதிலீபன் (மு/பாலிநகர் ம.வி.)

**திறந்த போட்டி தமிழறிவு வினாவிடை**

மு/பாண்டியன்குளம் ம.வி., மு/மாங்குளம் ம.வி.

**திறந்த போட்டி வில்லுப்பாட்டு**

மு/மாங்குளம் ம.வி. (அ-3-15)

# சுகாதாரமற்ற முறைகளில் விற்கப்படும் யூஸ் வகைகள்

(மல்லாவி)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் சுகாதார பகுதியினரின் அனுமதியின்றி யூஸ் விற்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பல்பொருள் விற்பனை நிலையம் தொடக்கம் கிராமங்களிலுள்ள சிறிய கடைகள் வரை யூஸ் விற்பனை மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றில் சில யூஸ் பைக்கற்கள் பல வர்ணங்களை கொண்டு அடைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் உற்பத்தி நிறுவனத்தின் முகவரி, உற்பத்தி செய்யப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி என்பன அச்சடிக்கப்படாமல் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறான யூஸை பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், பெரியவர்கள் என அனைவரும் வாங்கி அருந்துவதால் பல்வேறு நோய்கள் ஏற்படும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அனுமதியின்றி யூஸ் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு சுகர்தாரமான யூஸை பெற்றுக்கொள்ளவும் ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது. (அ-3-15)

# வீதிகளை புனரமைக்க கோரிக்கை

(புளியம்பொக்கணை)

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதான வீதிகள் மற்றும் உள்வீதிகள் பலவும் இதுவரைகாலமும் புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பயணிகளும் நோயாளர்களும் பெரும் சிரமத்தினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை இவ்வீதிகள் எவ்வித புனரமைப்பும் செய்யப்படவில்லை. இன்றுவரைக்கும் இவ்வீதிகள் குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றன.

ஆகவே, இத்துறை சார்ந்த அதிகாரிகள் இதில் அக்கறை கொண்டு இவ் வீதிகளை புனரமைத்துத் தரும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-263)


WESTERN UNION
MONEY TRANSFER
சித்திரைப் புத்தாண்டிற்கு வெளிநாட்டிலிருந்து வெஸ்டன் யூனியன் மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக்கொண்டு அளப்பரிய பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
இச்சலுகை ஏப்ரல் 10 முதல் 20 வரை
ஸ்ரீ முருகன்
தொலைத் தொடர்பு நிலையம்
303, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 0212225392- 0212222670



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து வேளாளர் நட்சத்திரம்: மகம் 3 உயரம்: 5'7" கி.பா: 14 தகைமை/தொழில்: A/L, டுபாய் Hotel (கணக்காளர்) CIMA Advance Diploma தொ.இ: B -1627 | பிறப்பு: 1991 இந்து வேளாளர் நட்சத்திரம்: உத்தரம் 3, 8 இல் செவ் தகைமை/ தொழில்: கலைப்பீட மாணவி தொ.இ: G -1634 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர் நட்சத்திரம்: திருவோணம் 3 உயரம்: 5'8" கி.பா: 13.75 தகைமை/தொழில்: B.Sc, M.Sc நிறுவனமொன்றில் உயர்பதவி தொ.இ: B -1628 | பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்:ஆயிலியம் 4 உயரம்: 5'2" கி.பா: 12 தகைமை/ தொழில்: A/L தொ.இ: G-1638 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர் நட்சத்திரம்: ரோகினி 3 கி.பா: 59, 4 இல் செவ் தகைமை/ தொழில்: O/L, கட்டட ஒப்பந்தகாரர் தொ.இ: B -1630 | பிறப்பு: 1979 இந்து விஸ்வகுலம் நட்சத்திரம்: சுவாதி 2 உயரம்: 5'6" கி.பா: 132 தகைமை/ தொழில்: A/L தொ.இ: G -1639 |
| பிறப்பு: 1971 இந்து வேளாளர் நட்சத்திரம்: பூரட்டாதி 1 உயரம்: 5'6" கி.பா: 32, 7 இல் செவ். தகைமை/தொழில்: BA (Spl), Dip in Edu. தொ.இ: B -1631 | பிறப்பு: 1976 இந்து வேளாளர் நட்சத்திரம்: ரோகினி தகைமை/ தொழில்: A/L சுகாதார ஊழியர் தொ.இ: G -1640 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய குடும்பங்களுக்கு 208.1 மில்லியன் கடனுதவி

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் அடிப்படை வசதிகளற்ற குடும்பங்களுக்கு 208.1 மில்லியன் வாழ்வாதார கடன் யுத்த நிறைவின் பின்னரான காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டத்தின் சமூக ஒருங்கிணைப்பாளர் எஸ். சந்திரகுமார் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வேலைத் திட்டம் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி திட்டத்தின் ஊடாக இடப்பெயர்வுகளைச் சந்திக்க மீள்குடியேறிய மற்றும் வறிய குடும்பங்களை சேர்ந்த 98 கிராமங்களில் 8 ஆயிரத்து 164 பேருக்கு யுத்தத்தின் பின்னரான காலத்தில் வாழ்வாதார கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை நன்னீர் மீன்வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, ஆடை தைத்தல், விவசாயம், காளான் வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு உட்பட பல தொழில் முயற்சிக்காக 208.1 மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கடன்திட்டம் குழுச்செயற்பாட்டுக்காகவும் தனிநபர் செயற்பாட்டுக்காகவும் வழங்கப்பட்டுள்ளதுடன் இதன்மூலம் பயனடைபவர்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் தமது கடனை மீள் செலுத்தி அந்நிதியை சுழற்சி முறையில் ஏனையவர்களுக்கு வழங்குவதற்குமான நடைமுறையும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் கடன் பெறுபவர்கள் சுயதொழிலை மேற்கொள்வதற்கான பயிற்சிகளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-266)

# முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டவர்கள் தப்பித்தனர்

(கொழும்பு)

மிரிஹானை குடிவரவுத்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 வெளிநாட்டவர்கள் தப்பி சென்றுள்ளதாக குடிவரவுத் துறை பணிப்பாளர் சூலானந்தா பெரேரா தெரிவித்துள்ளார்.

குடிவரவு சட்டங்களை பல்வேறு வழிகளில் மீறிய குற்றத்துக்காக 100 க்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்களை குடிவரவு திணைக்களத்தின் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிடுவதில்லை.

இதனை பயன்படுத்திக் கொண்டு அங்குள்ள சில பொலிஸார் வெளிநாட்டவர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு அவர்களை வெளியேற அனுமதிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் கடந்த சில நாட்களில் இவ்வாறு 10 வெளிநாட்டவர்கள் முகாம்களில் இருந்து தப்பி சென்றுள்ளனர். அவர்களில் நான்கு பாகிஸ்தானியர்களும் உள்ளடங்குகின்றனர்.

குறிப்பாக பாகிஸ்தான் அரசாங்கத்தினால் தேடப்பட்டு வருகின்ற பாகிஸ்தானிய பெண் ஊடகவியலாளர் ஒருவரும் அங்கிருந்து தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சிறுபோகத்திற்கான அடிக்கட்டு பசளை இதுவரை கிடைக்கவில்லை

(சிவநகர்)

புதுமுறிப்புக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் அடிக்கட்டாக பயன்படுத்துகின்ற உரம், பசளை இன்னமும் கிடைக்கவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் இக்குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் ஏக்கரின் அளவுகள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விபரங்களை காட்சிப்படுத்தாமை காரணமாக காலாகாலமாக தொடர்ந்து வரும் மோசடி நடவடிக்கைகள் இப்போகத்திலும் தொடரும் வாய்ப்புக்கள் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக நீர்ப்பாசன திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் மட்டத்திலும் குறைகேட்க வேண்டிய நிலையே ஏற்படும் எனச் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே, இக்குளத்தின் கீழ் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற முழுமையான ஏக்கர் அளவு அணைக்கப்பட்டுள்ள பங்குகளின் விபரங்களை விவசாயிகளின் பார்வைக்கு வைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(அ-3-254)

# கைதடி கலைநகர் துர்க்கா அணிவசமானது வெற்றிக்கிண்ணம்



கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட தென்மராட்சி ரீதியிலான 17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியில் கைதடி கலைநகர் துர்க்கா விளையாட்டுக்கழக ஏ அணியினை எதிர்த்து கைதடி கலைநகர் துர்க்கா விளையாட்டுக் கழக பி அணி மோதியது.

இவ் இறுதிப்போட்டியில் கைதடி கலைநகர் துர்க்கா விளையாட்டுக் கழக ஏ அணி 10:9 எனும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இரண்டாமிடத்துக்கான கிண்ணத்தை கைதடி கலைநகர் துர்க்கா விளையாட்டுக் கழக பி அணி பெற்றுக்கொண்டது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக தே.தர்சாந் தெரிவாகிய அதேவேளை இப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக எஸ்.வியிந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (அ)

# பேசும் படம்

யாழ்ப்பாணம் நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் தனியார் நிறுவனமொன்றினால் நாட்டப்படுகின்ற வீதிப் பெயர்ப்பலகையில் ஜம்புகோளப்பட்டினம் என்ற இடத்தின் பெயர் தமிழிலும் ஆங்கிலத்திலும் திரிபடைந்துள்ளதனை படத்தில் காணலாம்.




# வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் ஆறு நூல்களின் அறிமுக விழா

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ்மணி கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்)வின் 6 நூல்களின் அறிமுகவிழா எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.வவுனியா தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொள்ளவுள்ளதுடன் மங்கல விளக்கினை இரா.லோகநாதன், கமலாவதி தம்பதியர் ஏற்றிவைக்கவுள்ளனர்.

தமிழ்த்தாய் வாழ்த்தினை இசையாசிரியை திருமதி ர.அமிர்தாம்பிகை இசைக்க வரவேற்புரையினை திருமதி ஜெயசங்கர் சுபாசினியும் தொடக்கவுரையினை வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனும் நூல்களின் அறிமுகத்தை மூத்த ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள்.

முதற்பிரதியை நூல்களின் ஆசிரியரின் பெற்றோர்களான கதிரிப்பிள்ளை, பாக்கியம் தம்பதியர் பெற்றுக்கொள்வதுடன் சிறப்புப் பிரதிகள் வழங்கலைத் தொடர்ந்து நூல்களின் நயம் காணல் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் ஜேர்மனியில் தமிழர் வரலாற்றினை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ்த்துறை விரிவுரையாளர் ந.பார்த்தீபனும் காலச்சுவடுகள் நூலினை வவுனியா தெற்கு கல்வி வலய தமிழ்ப்பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி த.நிறைமதியும் தாலி சிறுகதைத் தொகுப்பினை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி நெலாமி அன்ரனி குரூசும் ஆன்மாவின் வாசனை நூலினை வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய தமிழ் ஆசிரியர் ஆ.லோகேஸ்வரனும் தாய்நிலம் கவிதை நூலினை கவிஞர் குரும்பையூர் த.ஐங்கரனும் நலமாய் வாழ நூலினை ஓய்வுபெற்ற அதிபர் ச.க.தியாகலிங்கமும் நயம் கண்டு உரையாற்றவுள்ளார்கள். (அ-266)

# சந்தேகநபர்களை கைது செய்ய இன்டர்போலின் உதவி கோரப்பட்டுள்ளது

இலங்கை இறைவரி திணைக்களத்தில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி தொடர்பிலான எட்டு சந்தேக நபர்களை கைது செய்வதற்கு இன்டர்போலின் உதவி கோரப்பட்டுள்ளது.

2002-2004ஆம் ஆண்டு காலப் பகுதியில் இறைவரித்திணைக்களத்தில் சுமார் 400 கோடி ரூபாய் நிதி மோசடி இடம்பெற்றது.

இதுதொடர்பில் 14 சந்தேக நபர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். அவர்களில் 6 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் வழக்கு தொடரப்பட்டது.

மூன்று பேர் தங்களின் குற்றங்களை ஒப்புக்கொண்டு தண்டனை அனுபவித்து வரும் நிலையில் ஏனைய மூன்று பேர் தொடர்பில் தொடர்ந்து வழக்கு இடம் பெறுகிறது. இந்த வழக்கு எதிர்வரும் 30ஆம் திகதி மீண்டும் முன்னெடுக்கப்படுகிறது.

நிதி மோசடி தொடர்பில் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்ட மேலும் எட்டு பேர் வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்காக இலங்கை குற்றத்தடுப்பு பிரிவினர் இன்டர்போலின் உதவியை நாடியுள்ளனர். (அ)

# இந்திய மீனவர்களை கைது செய்யவில்லை

## இலங்கை கடற்படை மறுப்பு

இந்திய மீனவர்கள் யாரையும் தாங்கள் கைது செய்யவில்லை என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் புதுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 9 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும் இதனை மறுத்துள்ள கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய இலங்கை கடற்படையினர் எந்த ஒரு இந்திய மீனவர்களையும் கைது செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதத்தின் ஆரம்பத்திலேயே இலங்கைக் கடற்படையினரால் 56 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்ததுடன் ஏற்கனவே கடந்த மாதம் கைது செய்யப்பட்ட மீனவர்களில் 19பேர் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மதுமயக்கத்தால் வந்த விபரீதம்

கொழும்பு கம்பனித்தெரு-டிசொய்சா மாடிவீட்டுத் தொகுதி யில் மது அருந்திய வண்ணம் இருந்த ஒருவர் இரண்டாம் மாடியில் இருந்து தவறி வீழ்ந்து மரணமான சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கீழே விழுந்து படுகாயமடைந்த அவரை தேசிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் பலியானதாக மருத்துவ தரப்பினர் தெரிவித்துள்ளனர். மரணமடைந்தவர் 55 வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் க.பொ.த. சாதாரணப் பரீட்சை -2012 பெறுபேறுகள் - ஓர் பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்/
வாழ்நாள் பேராசிரியர்

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைப் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் எவ்வாறு உள்ளனவென அறிய பாடசாலைச் சமூகம், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் மிகவும் கரிசனை கொண்டவர்களாக இருக்கின்றனர்.

வேம்படி தேசிய பாடசாலையாக இருப்பதுடன் 2013 இல் 175 ஆவது ஆண்டைக் கொண்டாடவுள்ள நிலையில் தமிழ் மொழி மூலம் தமிழ் பாடசாலைகள் வழியாக க.பொ.த சா/த பரீட்சை 2012 பெறுபேற்றில் நாட்டில் முதலாவது இடத்தைப் பெற்றது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். 2006 ஆம் ஆண்டு பாடசாலைகள் செயற்படாத நிலையிலும் சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்ட நிலையிலும் இப்பாடசாலை க.பொ.த பரீட்சையில் நூறு வீத சித்தியைப் பெற்றுத் தந்துள்ளது பலருக்கு ஞாபகம் இருக்கலாம். தொடர்ச்சியான நல்ல பெறுபேறுகள் இப்பிரதேச மக்கள் மேம்படுவதற்கான வாய்ப்பை கொடுத்து வருகின்றது.

நாட்டில் சகல பாடசாலைகளின் க.பொ.த 2012 பெறுபேற்றுடன் ஒப்பிடும்பொழுது தேசிய ரீதியில் இப்பாடசாலை 10 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இப்பெறுபேறுகள் இப் பாடசாலையின் சிறந்த கல்விப் பணியை வெளிக்காட்டி நிற்கின்றது.

இப்பாடசாலையில் இருந்து க.பொ.த சா/த பரீட்சை-2012 இல் 235 பேர் விண்ணப்பித்து 234 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களுள் 202 பேர் தமிழ் மொழி மூலமாகவும் 33 பேர் இரு மொழிகள் மூலமாக (தமிழ்/ஆங்கிலம்-Bilingual) பரீட்சைக்குத் தோற்றினர். பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் ஒருவரை தவிர ஏனைய 233 பேரும் க.பொ.த உ/த கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சிறப்பான பெறுபேறுகள் விபரம் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளன.

மொத்தம் 234 பரீட்சார்த்திகளுள் 113 பேர் 6ஏஇற்கும் அதற்கு கூடிய தரங்கள் பெற்றுள்ளனர். இவ் எண்ணிக்கை மொத்த பரீட்சாத்திகளில் 48.3 விகிதமாகும். இரு மொழிகள் மூலம் தோற்றிய பரீட்சார்த்திகளுள் 6 பேர் 9 ஏ சித்தியும் 11 பேர் 8 ஏ யும் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. தமிழ் மொழி மூலம் 10 பேர் 9 ஏயையும் 31 பேர் 8 ஏயையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

| ஏகளின் எண்ணிக்கை | சித்தியெய்திய பரீட்சாத்திகளின் எண்ணிக்கை |
|---|---|
| 9ஏ | 16 |
| 8ஏ | 42 |
| 7ஏ | 36 |
| 6ஏ | 19 |
| 5ஏ, அதற்கும் குறைவானது | 121 |
| மொத்தம் | 234 |

234 பரீட்சார்த்திகள் தலா 9 பாடங்கள் வழியாக 234X9=2106 அலகுகளுக்குத் தோற்றியிருந்தனர். பரீட்சார்த்திகள் பாட அலகுகளில் பெற்ற தர அடிப்படையில் பெறுபேறுகள் பின்வருமாறு,

**அட்டவணை 2**

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| ஏ | 1188 | 56.41 |
| பி | 443 | 21.03 |
| சி | 362 | 17.19 |
| எஸ் | 96 | 4.56 |
| டபிள்யூ | 17 | 0.81 |
| மொத்தம் | 2106 | 100 |

மொத்த பாட அலகுகள் 2106 இல் 1188 அலகுகளில் ஏ சித்தி பெற்றிருப்பது பாராட்டக்கூடியது. ஏ தர எண்ணிக்கையும் பி தரவு எண்ணிக்கையும் சேர்த்து பார்த்தால் மொத்தத்தில் 77.44 விகிதமாக இருக்கின்றது. ஏ பி சி மூன்று பிரிவையும் சேர்த்து பார்க்குமிடத்து சிறப்பு சித்தி விகிதம் 94.63 விகிதமாக இருக்கிறது.

பரீட்சைக்குத் தோற்றிய 2016 அலகுகளில் 17 அலகுகளில் தான் பரீட்சார்த்திகள் சித்தியடையவில்லை.

தமிழ் மொழி மூலமும் இரு மொழிகள் மூலமும் தோற்றிய பரீட்சார்த்திகளிடை பெறுபேறுகளில் வேறுபாடுகள் உயர்தர மட்டத்தில் காணப்படுவதை இனங்காணக் கூடியதாக இருக்கின்றது.

**அட்டவணை 3**

தமிழ்மொழி மூலம்

| (தமிழ் மொழி) தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| ஏ | 969 | 53.57 |
| பி | 402 | 22.22 |
| சி | 331 | 18.30 |
| எஸ் | 90 | 4.98 |
| டபிள்யூ | 17 | 0.81 |
| மொத்தம் | 1809 | 100 |

இரு மொழிகள் மூலம்(English/Tamil)

| தரம் (இரு மொழி) | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| ஏ | 219 | 73.74 |
| பி | 41 | 13.80 |
| சி | 31 | 10.14 |
| எஸ் | 06 | 2.02 |
| டபிள்யூ | - | - |
| மொத்தம் | 297 | 100 |

இரு மொழிகள் மூலம் தோற்றிய பரீட்சார்த்திகளின் ஏ தர சித்தி மிக உயர்வாக இருக்கின்றன. ஏ பி சி ஆகிய மூன்று தரத்தில் சித்தி பெற்றவர்கள் விகிதம் 94.09 ஆக இருக்கின்றது. ஏ தரத்தில் மாத்திரமே இரண்டு பிரிவினருக்கிடையே பெரிய வேறு பாடுகள் காணப்படினும் ஏ, பி, சி ஆகிய மூன்றின் கூட்டுத் தொகையில் இரண்டு பிரிவுகளுக்குமிடையே அதிக வேறுபாடு காணப்படவில்லை.

எனினும் தமிழ் மொழி மூலம் தோற்றிய பரீட்சார்த்திகள் மாத்திரமே 17 அலகுகளில் சித்தி பெறவில்லை. இவற்றுள் கணிதத்தில் ஒரு பரீட்சார்த்தியும் வரலாற்றில் 7 பேரும் சித்தியடைய தவறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடங்கள் அடிப்படையில் பெறுபேறுகள் முழுமையாகவும் மொழி அடிப்படைகளிலும் 2011 தரவுகளும் அட்டவணை 4இல் தரப்பட்டுள்ளன. ஆறு கட்டாய பாடங்களில் சைவ சமய பாடத்தை எடுத்த 220 பரீட்சார்த்திகளும் ஏ சித்தி பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் உரோமன் கத்தோலிக்க சமயம் எடுத்த 9 பேரும் ஏ சித்தி பெற்றுள்ளனர். கிறிஸ்தவ சமய பாடத்திற்கு தோற்றிய நால்வரில் இருவர் ஏ சித்தியும் ஒருவர் பி மற்றவர் சி சித்தியும் பெற்றுள்ளனர். இஸ்லாத்தை எடுத்த ஒரு பரீட்சார்த்தி அதில் பி சித்தி பெற்றுள்ளார். தொகுத்து நோக்குகையில் சமய பாடங்களில் பெறுபேறுகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன.

தமிழ் மொழியும் இலக்கிய பாடத்தில் 163 பேர் ஏ சித்தி பெற்றுள்ளார்கள். மொத்தமாக பரீட்சை எழுதிய 234 பேரில் 232 பேர்கள் சியும் அதற்கு மேலான சித்திகளையும் பெற்றிருக்கின்றார்கள். இருவர் மாத்திரமே சாதாரண சித்தி பெற்றுள்ளார்கள். தமிழில் சகல பரீட்சார்த்திகளும் சித்தி பெற்றிருப்பது மனநிறைவைத் தருகிறது.

ஆங்கிலத்தில் 232 பேர் சித்தியடைந்து 65 பேர் ஏ சித்தி பெற்றிருப்பதும் 209 பேர் சியும் அதற்கு மேல் பெற்றிருப்பதும் மிகவும் பாராட்டுக்குரியது.

கணிதத்தில் 10 பேரை விட 225 பேர் சியும் அதற்கு மேலும் பெற்று சித்தி பெற்றுள்ளனர். இப் பெறுபேறு மிகவும் மகிழ்ச்சியை தருகின்றது.

வரலாற்றில் 213 பேர் சியும் அதற்கு மேலும் பெற்று சித்தியடைந்துள்ளார்கள். வரலாற்று பாடத்தில் 14 பேர் சாதாரண சித்தியும் 7 பேர் பரீட்சையில் சித்தியடையாமையும் மிகவும் கவலைக்குரியது. வரலாற்றுப் பாடத்தில் தமிழ் மாணவர்களின் பெறுபேறுகள் நாடளாவிய ரீதியில் குறைவாக இருந்து வருவது கவலைப்படத்தக்கது. தமிழ் மாணவர்கள் வரலாற்றை விரும்பி கற்காமை, தமிழ் மக்களின் வரலாறு சரியான முறையில் இடம் பெறாமை, கற்பிப்பதற்கு நல்ல தகைமை பெற்ற ஆசிரியர்கள் இல்லாமை வரலாறு கற்பதற்கு சாதகமற்ற சூழ்நிலைகள் போன்ற காரணிகள் இக் குறைவான பெறுபேற்றுக்கு காரணங்களாகவுள்ளன.

சிங்கள மாணவர்களுக்கு சிங்களம், பௌத்தம், நாட்டார் இலக்கியம் போன்ற பாடங்கள் மூலம் கற்கும் விடயங்கள் வரலாறு கற்றலுக்கு வலுச் சேர்க்கின்றன. இத்தகைய சாதக சூழ்நிலை தமிழ் வரலாற்று மாணவர்களுக்கு குறைவென்றே கூறலாம்.

இதனால் தமிழ் மாணவர்களுக்கு வரலாறு கற்பிப்பதற்கு புதிய அணுகுமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். இதன் மூலமே வரும் ஆண்டுகளில் இப் பாடத்தில் மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்த முடியும்.

விஞ்ஞானத்தில் 26 பரீட்சார்த்திகளைத் தவிர ஏனைய 208 பேரும் சியும் அதற்கு மேல் தரத்திலும் சித்தி பெற்றுள்ளனர். இருவர் விஞ்ஞானத்தில் சித்தி பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

முதலாவது தொகுதி விருப்பப் பாடங்களில் வர்த்தகத்தையும் கணக்கியல் கற்கையை 196 பேர் எடுத்து இவர்களுள் 125 பேர் ஏ சித்தி பெற்றுள்ளனர். புவியியல் 16 பேர் தோற்ற 9 பேர் ஏ சித்தி பெற்றுள்ளனர். குடியுரிமை ஆட்சியியலில் 23 பேர் தோற்றி 4 பேர் மாத்திரம் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

இரண்டாவது தொகுதி விருப்புப் பாடங்களில் கர்நாடக சங்கீதம் (30 பேர்), சித்திரம் (8 பேர்), பரத நாட்டியம் 22 பேர், ஆங்கில இலக்கியம் 41 பேர், தமிழ் இலக்கியம் 120 பேர், நாடகமும் அரங்கியலும் 13 பேர் முறையே தோற்றியிருந்தனர்.

இப்பிரிவில் முதலாவது மூன்றாவது பிரிவிலும் பார்க்க கூடிய விருப்புப் பாடங்களை எடுத்துள்ளனர். ஆங்கில இலக்கியத்தை எடுத்த பரீட்சார்த்திகள் மூவர் மாத்திரமே சித்தியடையவில்லை. ஆங்கில இலக்கியத்தில் 7 பேர் சித்தியும் 33 பேர் சியும் அதற்கு மேல் தரத்திலும் சித்தி பெற்றுள்ளனர்.

இரு மொழி மூல மாணவர்கள் 27 பேர் ஆங்கில இலக்கியத்திற்கு தோற்றி 25 பேர் சியும் அதற்கு மேலான பெறுபேறுகளைப் பெற்றது சிறந்த சாதனை எனக் குறிப்பிடலாம். தொடர்ச்சியாக ஆங்கிலம், ஆங்கில இலக்கியப் பாடங்களில் வேம்படி மகளிர் கல்லூரி தனது அடைவை அதிகரித்து வருவது பாராட்டுக்குரியதாகும். கடந்த தசாப்தத்திலும் பார்க்க இன்று இப் பாடசாலை மாணவிகள் ஆங்கில அறிவும் கற்கும் விருப்பமும் அதிகரித்து இருப்பதை பெறுபேறுகள் மூலம் அறிய முடிகின்றது.

| பாடங்கள் | விண்ணப்பத்தவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றியோர் | ஏ | பி | சி | எஸ் | டபிள்யூ | சித்தி எண்ணிக்கை | விகிதம் | 2011 இல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவ சமயம் | 191(30)<br>221 | 190(30)<br>220 | 190(30)<br>220 | - | - | - | - | 190(30)<br>220 | 100(100)<br>100 | 100(100) |
| கத்தோலிக்கம் | 07(02)<br>09 | 07(02)<br>09 | 07(02)<br>09 | - | - | - | - | 07(02)<br>09 | 100(100)<br>100 | 100(100) |
| கிறிஸ்தவம் | 3(01)<br>04 | 3(01)<br>04 | 1(01)<br>02 | 01<br>01 | 01<br>01 | - | - | 3(01)<br>04 | 100(100)<br>100 | 100(100) |
| இஸ்லாம் | 01<br>01 | 1<br>01 | - | 1<br>01 | - | - | - | 1<br>01 | 100<br>100 | - |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 202(3-3)<br>235 | 201(33)<br>234 | 134(28)<br>163 | 51(04)<br>54 | 14(01)<br>15 | 2<br>02 | - | 201(33)<br>234 | 100(100)<br>100 | 100(100) |
| ஆங்கிலம் | 202(3-3)<br>235 | 201(33)<br>234 | 37(28)<br>65 | 45(04)<br>49 | 94(01)<br>95 | 23<br>23 | 2<br>02 | 199(33)<br>232 | 99(100)<br>99.1 | 95.9(10-0) |
| கணிதம் | 202(3-3)<br>235 | 201(33)<br>234 | 134(28)<br>162 | 35(01)<br>36 | 22(04)<br>26 | 9<br>09 | 1<br>01 | 200(3-3)<br>233 | 99.4(10-0)<br>99.6 | 99.4(10-0) |
| வரலாறு | 202(3-3)<br>235 | 201(33)<br>234 | 76(21)<br>97 | 46(06)<br>52 | 59(05)<br>64 | 13(01)<br>14 | 7<br>07 | 194(33)<br>227 | 96.5(1-00)<br>97 | 99.5(10-0) |
| விஞ்ஞானம் | 202(3-3)<br>235 | 201(33)<br>234 | 76(19)<br>95 | 59(10)<br>69 | 42(02)<br>44 | 22(02)<br>24 | 02<br>02 | 199(33)<br>232 | 99(100)<br>99.1 | 99.4(10-0) |
| முதலாவது பாடத்தொகுப்பு | | | | | | | | | | |
| வியாபாரமும் கணக்கியலும் | 168(28)<br>196 | 168(28)<br>196 | 101(24)<br>125 | 34(01)<br>35 | 26(03)<br>29 | 6<br>06 | 1<br>01 | 167(28)<br>195 | 99.4(10-0)<br>99.5 | 98.7(10-0) |
| புவியியல் | 14(02)<br>16 | 14(02)<br>16 | 8(01)<br>09 | 2<br>03 | 4<br>4 | - | - | 14(02)<br>16 | 100(100)<br>100 | 93.3 |
| குடியுரிமைக் கல்வியும் ஆட்சியியலும் | 20(03)<br>23 | 19(03)<br>22 | 4<br>04 | 4(01)<br>05 | 7(01)<br>08 | 3(01)<br>04 | 1<br>01 | 18(03)<br>20 | 94.7(10-0)<br>95.4 | 89.4(1-00) |
| இரண்டாவது பாடத்தொகுப்பு | | | | | | | | | | |
| சங்கீதம் (கர்நாடகம்) | 29(01)<br>30 | 29(01)<br>30 | 8(01)<br>09 | 12<br>12 | 07<br>07 | 02<br>02 | - | 29<br>30 | 100<br>100 | 100 |
| சித்திரம் | 08<br>08 | 08<br>08 | 02<br>02 | 02<br>02 | 03<br>03 | 01<br>01 | - | 08<br>08 | 100<br>100 | 100 |
| பரத நாட்டியம் | 19(03)<br>22 | 19(03)<br>22 | 11<br>11 | 06(01)<br>07 | 01(02)<br>03 | 01<br>01 | - | 19(03)<br>22 | 100(100)<br>100 | 100(100) |
| ஆங்கில இலக்கியம் | 14(27)<br>41 | 14(27)<br>41 | -(07)<br>07 | 04(08)<br>12 | 04(10)<br>14 | 03(02)<br>05 | 03<br>03 | 11(27)<br>38 | 78.6(1-00)<br>92.7 | 83.3(9-7.5) |
| தமிழ் இலக்கியம் | 119(02)<br>121 | 118(02)<br>120 | 65(01)<br>66 | 32(01)<br>33 | 18(02)<br>18 | 03<br>03 | - | 118<br>120 | 100(100)<br>100 | 100(100) |
| நாடகமும் அரங்கியலும் | 13<br>13 | 13<br>13 | 06<br>06 | 07<br>07 | - | - | - | 13<br>13 | 100<br>100 | 100 |
| மூன்றாவது பாடத் தொகுதி | | | | | | | | | | |
| தகவல் தொடர்பாடல் நுட்பம் | 75<br>108 | 75<br>108 | 44<br>71 | 19<br>23 | 12<br>14 | - | - | 75<br>108 | 100<br>100 | 100 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 122<br>122 | 121<br>121 | 64<br>64 | 38<br>38 | 17<br>17 | 02<br>02 | - | 121<br>121 | 100<br>100 | 100 |
| தொடர்பாடலும் ஊடகக்கற்கை | 05(33)<br>05 | 05(33)<br>05 | 01(27)<br>01 | 04(04)<br>04 | - (02) | -(02) | - | 05(33)<br>05 | 100(100)<br>100 | 100(100) |

மூன்றாவது தொகுதி பாடங்களில் தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகள் 75 பேரும் இரு மொழி மூலமான 33 பேரும் தகவல் தொடர்பால் கற்கை நெறியை எடுத்து மொத்தமாக 71பேர் ஏ சித்தி பெற்றுள்ளனர். தகவல் தொடர்பாடல் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து வருவதையும் பெறுபேறுகள் மேம்படுவதையும் காண முடிகின்றது.

சுகாதாரமும் உடற்கல்வியும் 121 பேர் என்று சகலரும் சித்தி பெற்றிருப்பதுடன் 64 பேர் ஏ சித்தி பெற்றுள்ளனர். தொடர்பாடலும் ஊடக கற்றைப் பாடத்தை 5 பேர் எடுத்து ஒருவர் ஏ சித்தியும் நால்வர் பி சித்தியும் பெற்றுள்ளனர். புதிய பாடம் ஆனதால் குறைவான மாணவர்களே இப்பாடத்தை கற்றுள்ளனர். வரும் ஆண்டுகளில் இப் பாடத்தை கற்கும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம்.

தொகுத்து நோக்குகையில் கடந்த காலங்களைப் போன்று இம் முறையும் பரீட்சை பெறுபேறுகள் நல்லதாக இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

தமிழ் மொழி மூல பாடசாலைகளுள் முதலாவது இடத்தை பெற்றிருப்பது கடின உழைப்பின் அறுவடை எனலாம். யாழ்.இந்துக் கல்லூரி, சைவ மங்கையர் கழகம் கொழும்பு, வின்சன் மகளிர் பாடசாலை மட்டக்களப்பு, சண்முக வித்தியாலயம் திருகோணமலை, இறம்பைக்குளம் தமிழ் மகளிர் வித்தியாலயம் ஆகிய சிறந்த தமிழ்ப் பாடசாலைகள் அண்மைக் காலங்களில் நல்ல முன்னேற்றம் கண்டு வருகின்றன என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

வரும் ஆண்டுகளில் இக் பாடசாலை விசாக்க மகளிர் கல்லூரி கொழும்பு, சங்கமித்த பெண்கள் பாடசாலை காலி, தேவி பாலிகா கொழும்பு, உயர்தர பெண்கள் பாடசாலை கண்டி, றோயல் கல்லூரி கொழும்பு, ஆனந்தாக் கல்லூரி கொழும்பு, றிச்மண்ட் கல்லூரி காலி போன்ற பிரபல பாடசாலைகளின் பெறுபேறுகளை மிச்ச வேண்டுமென்ற இலக்கைக் கொண்டு செயற்பட்டால் பரீட்சைப் பெறுபேறுகளில் நாட்டில் முதலாவது இடத்தை அடைய முடியும். அதற்குரிய சக்தியும் இம் மாணவிகளிடமுண்டு. இதன் மூலம் க.பொ.த சா/த மாத்திரமல்ல. அல்லாமல் க.பொ.த. உ/த பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று மாவட்ட கோட்டா அனுமதிக்கப்பால் தேசிய கோட்டாவில் கூடிய எண்ணிக்கையை இப் பாடசாலை பெற முடியும். இங்கு கல்வி பயிலும் மாணவிகள் மேற்றிறன் பண்புகளை கொண்டவர்கள். எனவே அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவிகள், பாடசாலை அபிவிருத்தி சபை, அபிவிருத்தி குழு பெற்றோர்கள் இணைந்து செயற்பட்டால் இவ் இலக்கை அடைவது கடினமல்ல. சிறந்த பெறுபேற்றைப் பெற பங்களித்த யாவரும் பாராட்டுக்குரியவர்கள்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 19 ஆயிரம் சிறுவர்கள் போரினால் அவயவங்களை இழந்துள்ளனர்

**கடந்த 2009 ஆண்டு மே மாதம் 19 ஆம்திகதிக்கு பின்னர் வடபகுதியில் 19 ஆயிரத்து 420 சிறுவர்கள் அவயவங்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பதிவுகளுக்கமைய கண், காது, மூக்கு மற்றும் கை, கால் போன்ற அவயவங்களை இழந்து 19ஆயிரத்து 420 சிறுவர்கள் பாதிப்படைந்துள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.**

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 410 சிறுவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 336 சிறுவர்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 674 சிறுவர்களும் பாதிப்படைந்து வசித்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

எனினும் இச்சிறுவர்களுக்கு இதுவரையான காலப்பகுதியில் பூரணமான முறையில் அரச, சர்வதேச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் கிடைக்கவில்லை என வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் கவலை வெளியிட்டுள்ளார்.

இது விடயம் தொடர்பாக தாம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அந்தந்த மாவட்ட அரசாங்அதிபர்களுக்கும் ஐ.நா முகவராண்மை நிறுவனங்களுக்கும் கடிதங்களை அனுப்பி பாதிப்படைந்துள்ள சிறுவர்களுக்கு உதவிகளை வழங்குமாறு கோரியதாகவும் தெரிவித்தார்.

ஆனால் இதுவரை இச்சிறுவர்களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக எவ்விதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் இடம்பெற்றதாக தகவலில்லை.

பாதிக்கப்பட்ட இச்சிறுவர்கள் எந்தவொரு உதவிகளும் கிடைக்காத நிலையில் வீடுகளுக்குள் சொல்லொணாத் துன்பங்களுடன் முடங்கியிருப்பது அனைவரும் அறிந்த வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே இச்சிறுவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு அரச, சர்வதேச, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உடனடியாக உதவ முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டார் நடனேந்திரன். (செ-11)

## வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்தது

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனாமுர என்ற பிரதேசத்தில் இடம்பெற்ற தகராறில் இரண்டு பேர் பலியானதுடன் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பலியான நபர்களுக்கிடையில் இடம் பெற்ற வாய்த்தர்க்கம் கொலையில் நிறைவடைந்துள்ளது. இதேவேளை சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் இருவரும் கூரிய ஆயுதங்களினால் தாக்கப்பட்டே பலியாகியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## ஈழத்தமிழர் வாழ்வு விடியல் பெறட்டும்!

### வைகோ புத்தாண்டு வாழ்த்து

சித்திரை தலைநாளில் சுதந்திர தமிழ் ஈழம் மலர வைகோ வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியதாவது,

சித்திரை முதல் நாளை முதுவேனில் காலத்தின் தொடக்க நாளாக நெடுங்காலமாக தமிழ் மக்கள் கொண்டாடி வருகின்றனர். ஐப்பசி, கார்த்திகையில் மேகங்கள் பொழியும் மழையை எதிர்கொண்டு தமிழர்கள் கொண்டாடும் ஆண்டின் முதல் நாளான தைத் திங்களில் பொங்கல் திருவிழா கண்டு அறுவடை நடத்தி ஆவினங்களுக்கும் நிலத்துக்கும் நன்றி செலுத்தி மாசி, பங்குனியில் வசந்தத்தையும் இளவேனிலையும் வரவேற்று மகிழ்ந்து சித்திரைத் திங்களில் கடற்கரை மணல் வெளியில் ஆற்றுப்படுகைகளில் தமிழர்கள் விழா எடுத்து வந்துள்ளனர்.

இளைய வயதினருக்கு இச்சித்திரை மாதம் தான் வசந்த விழா காலம் என இலக்கியம் கூறுகிறது. சித்திரை திங்கள் சேர்ந்தன என்றும் இதுவே இந்திரவிழா எடுக்கும் பருவம் என்றும் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் வர்ணிக்கின்றார். வெப்பம் மிகுந்துள்ள இக்காலத்தில் குளிர்ந்த நீரையும் பழங்களையும் வழங்கி கோடையின் தகிப்பைப் போக்குதல் தமிழர்களின் வழக்கமாகும்.

துன்ப இருளில் கலங்கித் தவிக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு விடியலைக் காணவும் சுதந்திரத் தமிழ் ஈழத்தை மலரச் செய்யவும் தமிழகத்தின் மாணவச் செல்வங்களும் இளம் தலைமுறையினரும் போர்க்கொடியை உயர்த்திவிட்டனர். உலகெங்கும் உள்ள தமிழர்கள் தன்மான உணர்வுடன் உரிமைச் சங்கநாதம் எழுப்புகின்றனர்.

ஒளிமயமான எதிர்காலம் தமிழ் குலத்துக்குக் கட்டியம் கூறும் இவ்வேளையில் சுதந்திரத் தமிழ் ஈழம் மலரவும் தாய்த் தமிழகத்தில் மது அரக்கனின் கொடுமை நீங்கவும் தமிழக மீனவர்களின் அல்லல்களை அகற்றவும் விவசாயிகளின் துயர் துடைக்கவும் இச்சித்திரைத் தலைநாளில் சூளுரை மேற்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார். (அ)

## பேருந்துகளில் மும்மொழி பெயர்ப்பலகை விரைவில்

(கொழும்பு)

பேருந்துகளில் மும்மொழிப் பெயர்ப் பலகை விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெயர் பலகைகள் காட்சிப்படுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தேசிய மொழிக் கொள்கைகளுக்கு அமைய மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகளை காட்சிப்படுத்த வேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகளை காட்சிப்படுத்துமாறு போக்குவரத்து அமைச்சு மற்றும் போக்குவரத்து அதிகார சபையிடம் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

மூன்று மொழிகளிலும் பெயர்ப் பலகைகளை காட்சிப்படுத்தாத பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தேசிய மொழிகள் அமைச்சு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## தமிழக போராட்டங்களுக்கு சீ.ஐ.ஏ.உளவுப்பிரிவே காரணம்

### தே.தே.இயக்கம் குற்றச்சாட்டு

தமிழகத்தில் இடம்பெற்று வரும் இலங்கை எதிர்ப்பு போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்காவின் சீ.ஐ.ஏ உளவுப் பிரிவு செயற்பட்டு வருவதாக தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழகத்துடன் அமெரிக்காவிற்கு பிரத்தியேக உறவுகள் காணப்படுகின்றன.

அண்மையில் முன்னாள் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் ஜெயலலிதாவை சந்தித்து பேசியிருந்தார்.

தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் போராட்டங்கள் சாதாரண மக்களினால் முன்னெடுக்கப்படவில்லை.

இலங்கையில் பிளவினை ஏற்படுத்தும் நோக்கில் மிகவும் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் சூழ்ச்சித் திட்டமாக இதனைக் கருத வேண்டும்.

ஜெயலலிதா சிறந்த நடிகை என்ற போதிலும் புத்தியுடையவரல்ல. இலங்கைத்தமிழர்களுக்கு எதிராக சிங்கள மக்களைத்தூண்டவும் தமிழகத்தில் சாதாரண மக்களின் இன உணர்வுகளைத்தூண்டவும் சிலர் முயற்சிக்கின்றனர்.

சீன இந்திய எழுச்சி காரணமாக அமெரிக்கா வலுவிழந்து செல்கின்றது. எனவே ஆசிய பிராந்திய வலயத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதனை அமெரிக்கா விரும்புகின்றது.

தமிழகத்தில் தனி ஈழக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு குழப்பங்கள் விளைவித்தால் அது அமெரிக்காவிற்கு சாதகமாகவே அமையும் என குணதாச அமரசேகர சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## அரசியல் அமைப்பு உடனடியாக திருத்தியமைக்கப்படவேண்டும்

### சரத் பொன்சேகா வலியுறுத்து

இலங்கையில் அரசியல் அமைப்பு உடனடியாக திருத்தியமைக்கப்படவேண்டுமெனவும் மாதுலுவே சோபிததேரரினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தங்களை அமுல்செய்யவேண்டும் எனவும் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் உள்ளிட்ட முக்கியமான சில பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்தல், விருப்பு வாக்கு முறைமையை இல்லாதொழித்தல் ஆகிய பரிந்துரைகளுக்கு முழு அளவில் ஆதரவளிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனை இராணுவத்தினர் கைது செய்யவில்லை எனக்குறிப்பிட்டுள்ள அவர் பிரபாகரனின் மனைவி , மகள் மற்றும் இளையமகன் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கை-தமிழ்நாடு முறுகல் உக்கிரம்!

### அல் ஜசீரா

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான உறவில் தமிழர் பிரச்சினை காரணமாக பாரிய உக்கிர முறுகல் நிலவி வருகின்றது என அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தமிழ்நாட்டில் மிக மோசமான, கசப்பான அனுபவங்கள், துன்புறுத்தல்கள் போன்றவற்றை இலங்கையர்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள். இதற்கு இலங்கை அரசுக்கு எதிராக தமிழகத்தில் உருவாகியுள்ள எதிர்ப்பு அலைகளே முக்கிய காரணமாகும்.

மேலும் கடந்த யுத்தத்தின் இறுதியில் இலங்கைத் தமிழர்கள் நடத்தப்பட்ட விதம் மற்றும் படுகொலைகள் குறித்து விசாரிக்க வேண்டும் என்று டில்லியில் உள்ள மத்திய அரசுக்கு தமிழ்நாடு கோரி வருகின்றது. இதனால் இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் சுமுகமான உறவுகள் தற்போது இல்லை என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)



தமிழ்- சிங்கள புத்தாண்டு தினத்தில் ஜனாதிபதி குடும்பத்துடன் இணைந்து பொங்கல் பொங்கி மகிழ்வதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

16



"வன்னியர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும்..."

"இன்னுமொரு விடயம் மன்னா. என்றார் மழவமாப் பாணர்"

"என்ன?"

"நமது தீவின் கிழக்குக் கரையில் வெடியரசன் கோட்டைக்கு அருகில் போர்த்துக்கேய பாரிய மரக்கலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. நமது இராச்சிய வழக்குப்படி அதிலிருந்த நான்கு மாலுமிகளையும் கைப்பற்றி சிறையிட்டுள்ளேன்"



செங்கை ஆழியான்

"கப்பலிலிருந்த பொருட்களைக் கைப்பற்ற கணக்கெடுக்கும் படி முதலியாருக்குப் பணித்துள்ளேன்"

"நல்லது மாப்பாணரே... கணக்கெடுத்ததும் அறிவியுங்கள்"

மழவமாப்பாணர் விடை பெற்ற பின்னர் கனகராஜன் வந்தான்.

"வன்னியர் செயற்பாடுகளை அறிந்திருப்பீர்கள். நான் புதிதாகச் சொல்ல ஒன்றுள்ளது. போர்த்துக்கேயர் வாங்கிய மாடுகளுக்கு இரண்டிற்கு இரு காசு அதுவும் நம் இராசதானி சேது காசு கொடுத்தார்களாம். அதுவும் பெறுமதிக்கு மிஞ்சி... நமது சேது ஒரு காசு இருபத்தைந்து நெல் பறைக்கு சமன்... போர்த்துக்கேயருக்கு நமது சேது காசு எப்படிக் கிடைத்தன? மற்றது இந்தியாவிலிருந்து தேயிலை, மிளகாய், மிளகு என்பவற்றை ஏற்றிக் கொண்டு கறுவாப்பட்டை ஏற்ற நீர்கொழும்பு நோக்கிச் சென்ற போர்த்துக்கேயரின் பாரிய மரக்கலம் நெடுந்தீவில் கரை தட்டிவிட்டது. செய்தி அறிந்து போர்த்துக்கேய கப்பித்தான் தங்களிடம் வரப் புறப்பட்டுவிட்டானாம்" ஒரே மூச்சில் செய்தி அனைத்தையும் ,கனகராஜன் சொல்லி முடித்தான். கனகராஜன் அறியாமல் எதுவும் இந்த நாட்டில் நடக்க முடியாது என மன்னன் தனக்குள் அவனை மெச்சிக் கொண்டான்.

# சேதுகாவலன்

போர்த்துக்கேய சரக்குக் கப்பல் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. அக்கப்பல் யாழ்ப்பாண அரசனுக்கே சொந்தமானது. அதுதான் வழக்கம். அவ்வாறிருக்க பேச்சுவார்த்தைக்கு கப்பித்தான் ஏன்? கப்பலை விடும்படி கேட்பானோ?

"போர்த்துக்கேயருக்கு சேது காசுகள் எப்படிக் கிடைத்தன? இவ்வளவு தொகையாகக் கிடைத்த வழியை ஆராய வேண்டும். போர்த்துக்கேயரின் நாணயங்கள் செப்புக் காசுகளல்ல. அவை பர்தாங்கு, செறாபிம், சக்கரம், லாறிம், றீஸ் என வழங்கப்படுகின்றன. 150 சேது காசுகள் ஒரு பர்தாங்கு எனப்பட்டன. பணப்புழக்கத்தை யாழ்ப்பாண மக்கள் நன்கறியாத காலம். சேது காசைப் போர்த்துக்கேயர் மாடு கொள்வனவிற்குப் பயன்படுத்தியுள்ளார்கள். முன்பு பண்டமாற்று செய்தார்கள். 10 பறை நெல்லிற்கு ஒருமாடு சமனாகிவிட்டது. போர்த்துக்கேயர் பழக்கிவிட்டார்கள். கரையோர மக்கள் தங்கள் கால்நடைகளை போர்த்துக்கேயருக்கு விற்பதை இனி தடுக்க முடியாது" என மன்னன் எண்ணமிட்டான்.

கனகராஜன் தொடர்ந்தான்.

"மன்னரின் தங்கை பரவையை மணம் முடித்த மைத்துனன் என்பதிலும் தங்களின் உளவுப்பிரிவின் தலைவன் என்பதை நான் மறக்கவில்லை. அந்த உரிமையில் எனக்குத் தெரிந்தவற்றை மன்னருக்குச் சொல்கிறேன். யாழ்ப்பாண இராச்சியத்தில் பகைவர் கூடிவிட்டனர் மன்னா... நம்பிக்கையானவர்கள் பகைவர்களாகிவிட்டனர்"

"யாரைச் சொல்கிறாய் கனகராஜா?"

"உங்கள் சகோதரர் இப்போது எதிராளியாகிவிட்டார். இராச்சியத்தை விரும்பி விட்டுக் கொடுத்தாலும் இப்போது மனம் மாறிட்டார். மகனதும் மனைவியினதும் ஓயாத தொல்லைகளால் உங்களிடமிருந்து அரசைப் பெற அவாவுகிறார். என்றாவது ஒருநாள் பரராசசிங்கனை அரசனாக்குவதாகச் சத்தியம் செய்துள்ளார்கள்"

"அப்படியா?" என சங்கிலி சிரித்துக் கொண்டான்.

"மற்றவர் யார்?"

"உண்மையாகத்தான் சொல்கிறேன். மற்றவர் மந்திரி அப்பாமுதலி. அரசசபையில் தனது பேச்சு எடுபடாததால் கொதிப்படைந்துள்ளார். பரராசசிங்கரோடு சேர்ந்துள்ளார். மற்றவர் ஊர்காவற்றுறைத் தலைவர் காக்கை வன்னியர். அவர் உண்மையில் வன்னியரல்லர். உண்மைப் பெயர் சாரங்கமாப்பாணர். மக்கள் இவரது நிறத்தைக் கருதி வைத்த பெயர் காக்கையுடன் வன்னியனைச் சேர்த்துக்கொண்டனர். அடங்காபற்று வன்னியருடனும் போர்த்துக்கேயப் பறங்கிகளுடனும் தொடர்பு வைத்துள்ளார் எனச் சந்தேகமுள்ளது. இவர்களிடம் கவனமாக மன்னர் இருக்க வேண்டும்" என்றான் கனகராஜன்.

(தொடரும்)

# அமெரிக்காவின் அடுத்த கட்ட நகர்வு என்ன?

நம்கமான விசாரணை விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் அக்கறை கவலைக்குரியது.

மனித உரிமை மீறல்கள் பற்றிய மோசமான குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில் ஒரு அரசாங்கம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி அதற்கு நம்பகமான முறையில் பதிலளிக்கும் வரை அந்தக் குற்றச்சாட்டுகள் அவர்களைத் தொடர்ந்து வரும்.

இறுதிப் போரின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விசாரித்த இராணுவ ஆணைக் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் இருந்து இலங்கை முன்னோக்கி நகரும்போது தீர்மானத்துக்குப் பதிலளிக்க இலங்கை அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று நாம் உன்னிப்பாக அவதானிப்போம்.

இப்போது மீண்டும் உண்மையான கேள்விக்கு வரலாம். "அடுத்து என்ன நடக்கப்போகிறது?"

இது இலங்கை அரசாங்கத்திடம்தான் தங்கியுள்ளது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இலங்கையில் இடம்பெற்ற அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து ஒரு சுதந்திரமான நம்பகமான அனைத்துலக விசாரணை தேவை என்ற நீண்ட காலப் பரிந்துரையை 2013 பெப்ரவரி 11 ஆம் திகதியிட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மீளவும் வலியுறுத்தியுள்ளது.

பிந்திய தீர்மானம் இந்த அழைப்பை சுட்டிக்காட்டியுள்ளதுடன் இலங்கையின் முன்னேற்றங்கள் குறித்து 2013 செப்ரம்பரிலும் முழுமையான அறிக்கையை 2014 மார்ச்சிலும் பேரவையிடம் சமர்ப்பிக்கும்படி மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தையும் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன் நிலுவையில் உள்ள எட்டு சிறப்பு அறிக்கைகள் விடயத்திலும் இலங்கை அரசாங்கத்தை ஒத்துழைக்கும்படி கேட்டுள்ளது.

அடுத்த கட்டங்களை நாம் ஆராயும்போது மனித உரிமைகள் பேரவை மற்றும் அதற்கு அப்பால் இருக்கக் கூடிய எல்லாப் பொறிமுறைகளையும் மீண்டும் எமது கவனத்தில் எடுத்துக் கொள்வோம்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கு விடுக்கப்படும் அழைப்புகள் வெறுமனே அனைத்துலக சமூகத்தின் அறிவுரைகளாக மட்டும் பார்க்கக் கூடாது என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

நல்லிணக்கமும் பொறுப்புக் கூறலும் நாட்டின் அமைதியான- வளமான எதிர்காலத்துக்கு அவசியமானது என்று பார்க்கப்பட வேண்டும்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கத் தவறிய சமூகங்கள் பொதுவாக மீண்டும் மோதலுக்குத் திரும்பியதை வரலாறு காட்டுகிறது.

இதனால் இந்தச் செயற்பாடு சிக்கலானதாகவே இருந்தாலும்கூட இலங்கையின் உறுதித்தன்மைக்கு மிகவும் முக்கியமானது.

இங்குள்ள அண்மைய சில முன்னேற்றங்கள் குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

இலங்கை மக்களுடனான உறவு சகிப்புத்தன்மை கொண்டதாக உள்ளது.

மனித உரிமைகள் மற்றும ஜனநாயக ஆட்சிமுறை குறித்து நான் பட்டியலிட்டு கவலை வெளியிட்ட அதேவேளை நாம் இலங்கையின் செழுமைக்கு பரந்துபட்ட பல்வேறு வழிகளில் ஒவ்வொரு நாளும் நாடு முழுவதற்கும் அபிவிருத்திக்கான பங்களிப்பை தொடருவோம்.

பேராதனை, ருகுணு, யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களுக்கான எமது கல்வி உதவி திட்டங்களுடன் நாம் தொடர்ந்திருப்போம்.

சிவில் சமூகத்தின் ஆற்றலைக் கட்டியெழுப்பும் ஆங்கிலமொழி கற்பிக்கும் திட்டங்களை நாட்டின் எல்லாப் பிராந்தியங்களிலும் மேற்கொள்கிறோம். அங்கவீனர்களுக்கான திட்டங்களும் உள்ளன.

வாழ்வாதார வாய்ப்புகளை விரிவாக்கிக்கொள்வதற்கும் உற்பத்தியை அதிகரிக்கவும் வருமானத்தை உயர்த்தவும் முன்னைய மோதல் பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கும் நாம் நிதியளிக்கிறோம்.

வடக்கு மாகாணத்தில் விவசாய உற்பத்தியை மீளமைக்கவும் உணவுப்பாதுகாப்புக்கும் புதிதாக மீளக் குடியேற்றப்பட்ட மக்களுக்கு உதவவும் பணியாற்றுகிறோம்.

கண்ணிவெடி விழிப்புணர்வு மற்றும் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கும்,உதவி வழங்குகிறோம்.

மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த உதவிகளுக்குத் தயார்ப்படுத்தும் விடயங்களில் இலங்கை இராணுவத்துடன் இணைந்து பணியாற்றுகிறோம்.

[illegible] வகம் ஒன்றை அமைப்பதற்கும் நாம் நிதியளிக்கிறோம்.



கடந்த வெள்ளிக் கிழமை தொழிலாளர் உரிமையை ஊக்குவிக்க, இலங்கை தொழில் திணைக்களம் தொழிலாளர் பரிசோதனை முறை மேற்கொள்வதற்கு அமெரிக்காவின் ஆதரவை நான் அறிவித்திருந்தேன்.

கடந்தமாதம் இலங்கை கடலோரக் காவல் படைக்கு கடல்சார் சட்டக் கற்கைநெறியை கற்பிக்க நாம் வசதி அளித்தோம்.

நாம் ஏனைய அமைச்சுக்களுடனும் இணைந்து பணியாற்றுகிறோம்.

**கொழும்பில்- அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சீசன் வெளிநாட்டு செய்தியாளர் சங்கத்தில் நிகழ்த்திய உரையின் பகுதி-03**

எனவே, இலங்கையுடனான அமெரிக்காவின் உறவு எந்தளவுக்கு வலுவானது- பன்முகத்தன்மை கொண்டது என்பதை நீங்கள் காண முடியும்.

சிலர் கூறுவது போல இலங்கையுடனான அமெரிக்காவின் உறவு தனியானதொரு நிகழ்ச்சிநிரலுக்கு அமைய வரையறுக்கப்பட்டதல்ல.

ஆனால், உண்மையான பல்பரிமாண அணுகுமுறை நீண்டகால இலக்குகளையும் கூட்டையும் பிரதிபலிக்கிறது.

இலங்கையுடனான இந்தக் கூட்டை விரிவாக்க முடியும் என்பது எனது உண்மையான நம்பிக்கை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் இலங்கை அரசுக்கு தனது மக்களுக்கான கடப்பாடுகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற இன்னும் அதிகம் செய்ய வேண்டும் என்ற அனைத்துலக சமூகத்தின் பலமான சமிக்ஞையை அனுப்பியுள்ளது.

நாம் தற்போது இந்த வார இறுதியில் பாரம்பரிய புத்தாண்டை எதிர்கொள்ளப்போகிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தப் புத்தாண்டு புதிய நம்பிக்கைகளுடனும் வாக்குறுதிகளுடனும் பிறக்கிறது.

அத்துடன் அனைவருக்கும் இறுதியான அமைதியை அடைவதற்கு நல்லிணக்கம் பொறுப்புக் கூறல் ஆகியவற்றில் தனது மறு ஆய்வு செய்வதற்கும் இலங்கைக்கு இது ஒரு வாய்ப்பை அளிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

429

# குருட்டு அதிர்ஷ்டம்



பீமன் மிகவும் அதிர்ஷ்டக்காரன் சிறு குழந்தையாக அவன் இருக்கையில். அவன் ஜாதகத்தை கணித்த சோதிடர் இந்தக் குழந்தை பிறக்கும் போதே சகல பாக்கியத்துடன் பிறந்திருக்கிறது. எதிர்காலத்தில் இது தொட்டது எல்லாம் பொன்னாகும் என்றார்.

அதன் படியே பீமன் வாலிபனாகிய பின் அவன் தந்தையிடம் இருந்து வியாபாரத்தை எடுத்துக் கொண்டு மிகப் பிரமாதமாக நடத்தி கொழுத்த இலாபம் சம்பாதித்தான். காலாகாலத்தில் அவன் பெற்றோர் அவனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். சிறிது காலத்தில் பெற்றோர் இறந்து போக வியாபாரத்தின் முழுப் பொறுப்பும் பீமனிடம் வந்தது. பீமனோ முன்னைய விட



## அம்புலிமாமா கதைகள்

நன்றாக வியாபாரம் செய்ய அவனிடம் செல்வம் மலையளவு குவிந்தது. அவனுடைய அபார வளர்ச்சியைக் கண்டு ஏனைய வியாபாரிகள் அவன் மீது பொறாமை கொண்டனர்.

ஒருசமயம் பீமன் புனிதத் தலங்களுக்கு பயணம் செய்தான். நம்பகமான தன் வேலைக்காரனை வீட்டுக்கு காவல் வைத்துச் சென்றான். ஒரு இரவில் திருடர்கள் பீமன் வீட்டு கதவை உடைத்து உள்ளே புகுந்தனர். அங்கு தூங்கிக் கொண்டிருந்த வேலைக்காரனை அடித்து உதைத்து கயிற்றில் கட்டிப்போட்டனர். பின்னர் அலுமாரியின் பூட்டை உடைத்து திறந்தனர். அவர்கள் எதிர்பார்த்த அளவு நகைகள் உள்ளே இல்லை. வீடு முழுவதும் சல்லடைபோட்டு சலிப்பதுபோல் தேடியும் வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. கிடைத்தது போதும் என்று சென்று விட்டனர். ஆயினும் பீமன் போன்ற பெரிய வியாபாரியும் வீட்டு அலுமாரியில் மிக சொற்பமான நகைகளே இருக்கக் கண்டு அதிசயப்பட்டனர். அடிபட்ட வேலைக்காரன் தெருவில் வந்து கூச்சல்போட அக்கம் பக்கத்தவர்கள் ஓடிவந்தனர். ஆனால் அதற்குள் திருடர்கள் ஓடிவிட்டனர். செய்தியறிந்தும் பீமன் மீது பொறாமை கொண்ட ஏனைய வியாபாரிகள் தலைகால் புரியாமல் சந்தோசப்பட்டு தங்களுக்குள் இனிப்புக்கள் வழங்கிக்கொண்டாடினர். இனி பீமன் தலைதூக்கமுடியாது என்று மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

புனிதப் பயணம் முடிந்து பீமன் திரும்பிவந்ததும் வீட்டுக்குக்காவல் இருந்த வேலைக்காரன் ஒருநாள் இரவு வீட்டுக்குள் திருடர்கள் புகுந்து திருடியதைப்பற்றி சொல்லியழுதான். ஆனால் பீமன் சற்றும் அதிர்ச்சியடையவில்லை. வேலைக்காரனை அனுப்பிவிட்டு தன் மனைவியுடன் கொல்லைப்புறம் தோட்டத்துக்குச் சென்றான். அங்கு மூலையிலிருந்து ரோஜாச் செடிகளைப் பிடுங்கி மேலும் மண்ணைத் தோண்டிய பின் ஒரு பெட்டி தென்பட்டது. அதை வெளியே எடுத்துத் திறந்தான். அதனுள் ஏராளமான நகைகள் இருந்தன. உடனே தன் மனைவியிடம் நான் எல்லா நகைகளையும் இந்த இரகசியமான இடத்தில் ஒளித்துவைத் தது நல்லதாகப் போயிற்று. அலுமாரியில் இருந்து திருடர்கள் திருடிப்போனதெல்லாம் போலி நகைகள் என்றான். அவனின் சாமர்த்தியத்தைப் பார்த்து அவனுடைய மனைவி அடைந்த ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. அதற்குள் அவன் குழந்தைகள் அங்கு வந்து அப்பா நம்முடைய தோட்டத்தில் இந்தத் துணி மூட்டையைப் பார்த்தோம் என்று ஒரு மூட்டையைக் கொடுத்தனர். அந்த மூட்டையை உள்ளே எடுத்துப் போன பீமன் தன் மனைவியின் முன் அதைப் பிரித்தான். மூட்டையினுள் அவன் வீட்டிலிருந்து திருடர்கள் திருடிச் சென்ற போலி நகைகளுடன் பல அசல் தங்க வைர நகைகளும் இருந்தன. அடடா திருடர்கள் நமக்குப் போன ஜென்மத்தில் கடன் தரவேண்டியது நிறைய இருந்தது போலிருக்கிறது. நம்முடைய நகைகள் மட்டுமன்றி வேறு நல்ல நகைகளையும் நம்வீட்டிற்குள் போட்டுச் சென்றிருக்கிறார்கள் என்றான் பீமன்.

பீமனின் மனைவிக்கோ அதிர்ச்சிமேல் அதிர்ச்சி! ஆனால் இன்ப அதிர்ச்சிதான். கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொட்டும் என்பார்களே இந்தப் பழமொழியின் அர்த்தம் இதுதானோ என்று நினைத்தாள். இதைப்பற்றி வெளியில் யாருக்கும் தெரியக்கூடாது என்று நினைத்தார்கள்.

சற்று நேரத்தில் ஏனைய வியாபாரிகள் பீமனின் வீட்டில் திருட்டுப்போனதைப் பற்றி துக்கம் விசாரிக்க வந்தனர். சற்று முன் மகிழ்ச்சியுடன் இனிப்புக்கள் கொண்டாடிய அதே ஆட்கள் தான். உள்ளுக்குள் அடக்கமுடியாத சந்தோசத்துடன் மேலுக்கு சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு பீமனிடம் வருத்தம் தெரிவித்தனர்.

ஆனால் பீமனோ கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளாமல் என்ன செய்வது திருட்டுப் போகவேண்டிய நேரம் திருட்டுப்போய் விட்டது. போனால் போகட்டும் என்றான்.

அவர்களுக்கு ஒரே திகைப்பு. பின்பு அவர்கள் வெளியில் சென்று பீமனுக்கு உள்ளூர அதிர்ச்சிதான். நமக்கு முன் வேசம் போடுகிறான் என்று பொருமிக்கொண்டு சென்றனர்.

எப்படியோ அவன் சில நாட்களில் வியாபாரத்துக்கு முழுக்குப்போட்டு விடுவான் என்று உறுதியாக நம்பினர்.


ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. பீமனின் வியாபாரம்



முன்னையதை விட மிக அமோகமாக நடந்தது. தன் பழைய வீட்டை இடித்துவிட்டு அரண்மனைபோல் புதிய வீடு கட்டிய பீமனைப்பார்த்து ஏனைய வியாபாரிகள் வாயைப் பிளந்தனர். என்ன குருட்டு அதிர்ஷ்டமோ இவனுக்கு என்று அவனைச் சபித்துக் கொண்டே அவன் வீட்டைக் கடந்து சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செல்லும் மாணவர் படை




## இரகசியத் திட்டம் தயார்

இலங்கையில் நடந்த கொடூர போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள் பற்றி சர்வதேச விசாரணை நடத்த இலங்கை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக பற்ற வைத்த எழுச்சித்தீ இன்று தமிழகம் முழுவதும் மாணவர்களிடையே தொடர் போராட்டங்களாய் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

மாணவர்களின் உணர்ச்சியும் எழுச்சியும் இன்று பல்வேறு அமைப்புக்களையும் தட்டி எழுப்பியுள்ளது. இளைஞர்கள், தொழிலாளர்கள் எனப் பலரும் மாணவர்களுக்கு ஆதரவாக போராட்டக்களத்தில் இறங்கியுள்ளனர்.

தி.மு.கவின் டெசோ தோல்வியுற்றுப் போனாலும் (கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டலை கதை போல்) தி.மு.க. தனக்குத்தானே கையைத் தூக்கி வெற்றி வெற்றி என அறிவித்துக் கொண்டது.

மாணவர்களிடையே தி.மு.கவின் நாடகம் தமிழக காங்கிரஸின் கண்டு கொள்ளாத போக்கு இவையெல்லாம் போராட்டத்தில் எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றியது போலாகிவிட்டது.

அந்த வேகமும் கோபமும் தான் மாணவர்கள் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கச் சென்ற தங்கபாலுக்குக் கிடைத்த தக்காளி வீச்சும் கடுமையான எதிர்ப்பும்.

அதுவரை மாணவர்களின் போராட்டத்தை சீரியஸாக எடுத்துக் கொள்ளாத தி.மு.க. காங்கிரஸுக்கு கிடைத்த பலத்த எதிர்ப்பைக் கண்டு மிரண்டு போனது. இனி மத்திய காங்கிரஸ் கூட்டணியில் இருந்தால் நமக்கும் இதே கதிதான் என்பதை உணர்ந்து மத்திய மந்திரி சபையில் இருந்து விலகியது.

இனி மாணவர்கள் போராட்டம் மழுங்கிவிடும். வருகிற பாராளுமன்றத் தேர்தலுக்குள் இந்த பிரச்சினை நீர்த்துப் போகும் என்ற எண்ணத்தில் தி.மு.க. தங்கள் ஆதரவு ஊடகங்களை வைத்து போராட்டத்தில் தி.மு.கவை கண்டிக்காமல் கோஷம், பேட்டி கொடுத்தால் செய்தி வரும். இல்லாவிட்டால் வராது என இரக்சியப் பேச்சுவார்த்தையும் சில இடங்களில் மிரட்டலும் விடுக்க போராட்டக் குழுவின் வேகம் இன்னும் அதிகமானது.

தி.மு.கவின் விலகல் தங்களுக்கு கிடைத்த வெற்றி என்பதை உணர்ந்த மாணவர்கள் அடுத்த கட்டமாக போராட்டத்தை தீவிரப்படுத்தி தமிழக காங்கிரஸ் எம்.பிக்கள் மத்திய மந்திரிகளையும் விட்டு வைக்கக் கூடாது என களமிறங்கினர்.

அதற்காக மார்ச் 24 இல் திருச்சியில் கூடிய மாணவர்களின் போராட்டக்குழு தொடர்ந்து போராட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளது. மொழி, இனம் கடந்து ஆந்திரா, கேரளா என இந்திய மாணவர்கள் என்ற உணர்வு மேலோங்கி நிற்பது போராட்ட உணர்வுக்கு வலு சேர்த்துள்ளது.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள், இனப் படுகொலைகள் பற்றி ஐ.நாவில் இலங்கை மீது பன்னாட்டு விசாரணை கொண்டு வர இந்திய அரசை வலியுறுத்த வைப்பது மட்டுமல்லாது தொடர்ந்து தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும் இலங்கையில் சிங்கள இராணுவத்தால் சிறை வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதையும் நிறுத்த வேண்டும்.

ஏனைய மாநிலங்களில் கடல் எல்லை வாழ் மீனவர்களை இந்திய மீனவர்களாகப் பார்க்கும் மத்திய அரசு தமிழகத்தில் மட்டும் தமிழர்களை இந்திய மீனவர்களாக அவர்களின் உயிர் மீது அக்கறை காட்டுவதில்லை. தமிழக மீனவர்கள் என பிரித்துப் பார்த்து மத்திய அரசால் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

சமீபத்தில் இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 19 பேரை சிறை பிடித்துள்ளனர் சிங்களவர்கள். அவர்களை மீட்கக் கோரி அங்கு இராமேஸ்வரம் பகுதியில் தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது.

மீனவர்களுக்கு ஆதரவாகவும் கச்சதீவை மீட்கக் கோரியும் தற்போது மாணவர்கள் கோஷம் எழுப்பி போஸ்டர் ஒட்டி வருகிறார்கள். அதனால் தமிழக மீனவர்களின் பார்வை மாணவர்கள் பக்கம் திரும்பியுள்ளது.

தமிழக காங்கிரஸ் எம்.பிக்கள், மந்திரிகள் வீடுகளை முற்றுகையிட்டு போராடி தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு மத்திய அரசையும் ஐ.நாவின் பார்வையும் நம் பக்கம் திரும்ப வைத்து நிரந்தரத் தீர்வு பிறக்க வலியுறுத்த திட்டமிட்ட மாணவர்கள் போராட்டக்களத்தை புதிய தளத்திற்கு மாற்றத் திட்டமிட்டுள்ளனர். அதை தரை வழியிலிருந்து கடல் வழி என்கிறார்கள். இது குறித்து தீவிர விசாரணைகளில் இறங்கினோம்.

உணர்வு மிக்க போராட்டத்தை அரசியல் ஆதாயம் தேடி எங்களை உதாசீனப்படுத்திப் பார்க்கும் சில அரசியல் கட்சிகளின் முகத்திரையைக் கிழிப்போம்.

எங்களுக்கு அரசியல் வேண்டாம். வேடிக்கை பார்த்து பதவி சுகத்திற்காக தமிழ் இனத்தை கொடூர காவு கொடுத்து தாலம் தள்ளியது போதும். இனியும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக இலங்கையிலும் தமிழகத்தில் மீனவர்களும் பலியாக்கப்பட்டு வருவதை மத்திய அரசு வேடிக்கை பார்க்கக் கூடாது. இனப்படுகொலையை உணர்த்த வேண்டும். இலங்கை அரசை தண்டிக்க வேண்டும். அதற்காக எங்கள் உணர்வை உலக நாடுகளுக்குத் தெரிவிக்க ஐ.நா. சபையில் எதிரொலிக்க வேண்டும் என்பதால் கடல் வழிப் போராட்டத்திற்குத் தயாராகி வருகிறோம்.

இராமேஸ்வரத்திலிருந்து கச்சதீவு 20 கிலோமீற்றர் தூரம்தான். அங்கிருந்து 12 கிலோமீற்றரில் இலங்கை. தனுஷ்கோடியிலிருந்து ரொம்பப் பக்கம். (சுமார் 3 கிலோமீற்றர்) தான். இலங்கை இயந்திரப்படகு, வள்ளப்படகு என இரண்டு வகை படகுகளில் அகில உலக கடல் எல்லைக்கோடு வரை சென்று எங்களது எதிர்ப்பைக் காட்டத் தயாராகி வருகிறோம்.

ஜி.பி.எஸ் கடல் வழியில் எல்லைக் கோடுகளை அறியும் குளோபல் மப் காட்டும் கருவியோடு மீனவர்களின் ஆதரவோடு கடல் வழி சென்று இலங்கைக்கு எதிரான போராட்டத்தை நடத்தவுள்ளோம். அது எப்போது, எப்படி சாத்தியம் என்பதெல்லாம் சீக்ரெட் பிளான் என்கிறார்கள் நம்மிடம் பேசிய சில மாணவர்கள். இது மாதிரியான போராட்டம் சாத்தியம்தானா என கடல் வழி கடல் எல்லைக்குள் தெரிந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்களிடம் பேசினோம்.

நிச்சயம் இந்தப் போராட்டம் உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்கச் செய்யும். இந்தியக் கடல் எல்லை வரையும் இலங்கைக் கடல் எல்லையைத் தாண்டி அவர்களது கப்பல் படையும் ரோந்து வரும். அப்படி கடல் எல்லையில் போராடும்போது மத்திய அரசுக்கு இது பெரும் தலைவலியை உண்டாக்கும். உலக அளவில் மாணவர்களின் போராட்ட உணர்வு எதிரொலிக்கும். அதற்காக விசைப்படகுகள் மட்டுமல்ல அத்தனை உதவியையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று ஆதரவுக் குரலோடும் பேசினார்.

பாராளுமன்றத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் இந்த மாணவர்களின் கடல் வழிப் போராட்டத் திட்டமும் கண்டிப்பாக மத்திய காங்கிரஸ் அரசுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் என்பது உறுதி.

**(தமிழகத்திலிருந்து வெளிவரும் [illegible] இதழிலிருந்து...)**

## ஐ.பி.எல். மைதானத்தை முற்றுகையிடுவோம்!

இலங்கை வீரர்கள் பங்கேற்றும் ஐ.பி.எல். போட்டிகளை சென்னையில் நடத்தவிடமாட்டோம் என மாணவர்களின் எதிர்ப்பலையோடு தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கை வீரர்கள் மாத்திரமல்ல நடுவர்கள், அதிகாரிகள், களப் பணியாளர்கள் யாரும் இலங்கையிலிருந்து பங்கேற்கக் கூடாது என அடுத்தடுத்த பவுன்ஸ்கள் விழ ஐ.பி.எல்லில் விளையாடி சொளையாக காசு பார்க்கும் இலங்கை வீரர்கள் பதின்மூன்று பேருக்கும் பயங்கர அதிர்ச்சி. போதாக்குறைக்கு ஐ.பி.எல். நிர்வாகவும் சென்னையில் இலங்கை வீரர்கள் விளையாடமாட்டார்கள் என அறிவிக்க விக்கித்துப்போயுள்ளது இலங்கை.

மாணவர்களின் ஐ.பி.எல். போராட்ட வியூகம் குறித்து பல்வேறு அமைப்புக்களிடம் பேசினோம். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் சீனிவாசன், இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாடமாட்டார்கள் என்று பொத்தாம் பொதுவாக ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதேசமயம் சன் ரைசர்ஸ் அணியின் உரிமையாளரும் கருணாநிதியின் பேரனுமான கலாநிதியின் மௌனமான போக்கை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். தமிழக இளைஞர் முன்னணியும் தமிழ் ஈழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்போடு பல்வேறு மாணவ அமைப்புக்களும் ஐ.பி.எல். களத்தில் இலங்கை விளையாடக்கூடாது என்கிற ஒத்த கருத்தில் உறுதியாக நிலைத்து நிற்பதால் இந்தத் தொடர் முழுக்கவே இப்பிரச்சினை மேலும் வலுவடையும் என்கின்றனர்.

மேலும் ஈழம் சிங்களவன் கொலைக்களம். தமிழகம் சிங்களவன் விளையாட்டுக்களமா என்கிற கருத்துக்களையும் இலங்கைக்கு எதிராக தமிழக மாணவர் அமைப்புகள் வெளிப்படுத்தி வருகின்றன. இலங்கை அணியின் முன்னாள் கப்டன் ரணதுங்க இலங்கை வீரர்கள் யாரும் இந்தியாவில் விளையாடக்கூடாதுன்னு பேசியிருந்தார்.

அவங்க விளையாடலைன்னா இங்க யாருக்கும் நட்டமில்லை. நம்மூரில் வாழும் நடிகை குஷ்புவே இலங்கை வீரர்கள் விளையாடாமல் இருப்பது வருத்தமளிக்கிறது என கருத்து தெரிவித்திருந்தார்.

ஆனால் இலங்கையில் இனப்படுகொலை நடந்தபோது அவருக்கு வருத்தமளிக்கவில்லை போல என எதிர்க்கேள்வியோடு சீற்றமாயினர். மேலும் அதே மனநிலையோடுதான் கருணாநிதியும் பேசியிருக்கிறார். சிலரின் அபிலாஷையின் காரணமாக கூட்டணியிலிருந்து விலகியதால் ஈழத் தமிழர்களுக்கு விடிவு ஏற்படாதா? 2009 ஆம் ஆண்டு கூட்டணியில் விலகியிருந்தாலும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்கும் என காங்கிரஸ் கூட்டணியின் பதவியிழந்த ஆதங்கத்தைத் தாங்க முடியாமல் ஆத்திர மனநிலையோடு வெளிப்படுத்தியிருக்கிறார். இவருக்கு இலங்கை இனப்படுகொலையை விட இழந்த பதவியைப் பற்றிய கவலையே மனதில் மேலோங்கி இருக்கிறது.

தமிழகத்தைச் சேர்ந்த அணி உரிமையாளர்களான சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் சன் ரைசர்ஸ் இவ்விரண்டுமே தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு புரிய வைப்போம். ரசிகர்களோடு ரசிகர்களாக மைதானத்திற்குள் சென்று எல்லாத் திசைகளிலும் இருக்கையில் அமர்ந்து கோஷங்கள் எழுப்புவோம். வீரர்கள் தங்கியிருக்கும் பெவிலியனை முற்றுகையிடுவோம் என உச்சக்கட்ட கொந்தளிப்போடு முடிக்கின்றன மாணவ அமைப்புக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளையில்... மறந்த வரலாற்றை மீண்டும் நினைவில் மீட்கின்ற புதைகுழிகள்



மாத்தளை மனிதப் புதைகுழியில் இருந்து 154 பேரின் எலும்பு எச்சங்களும் 81 மண்டையோடுகளும் கண்டு பிடிக்கப்பட்டசம்பவம், நீண்டகாலத்துக்குப் பின்னர், ஜே.வி.பி கிளர்ச்சிகாலப் படுகொலைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது. இந்தப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் 1986 ஆம் ஆண்டுக்கும் 1989 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் புதைக்கப்ப்ட்டவை என்றும், சித்திரவதை செய்யப்பட்டே அவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தடயவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. இதனால், இவை ஜே.வி.பி. சந்தேக நபர்களின் உடல்கள்தான் என்பது உறுதியாகியுள்ளது.

முன்னதாக இவை 1940 களில் மாத்தளையில் ஏற்பட்ட நிலச்சரிவில் கொல்லப்பட்டவர்களின் உடல் எச்சங்கள் என்று சந்தேகம் வெளியிடப்பட்டது. ஆனால், இவை ஜே.வி.பி கிளர்ச்சி அடக்கப்பட்ட காலத்துக்குரியவை என்றதும், உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று குரல் எழுப்பியது ஜே.வி.பி.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிறேமதாச ஆட்சிக்காலத்திலேயே இந்தப்புதைகுழியில் சடலங்கள் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்ற நிலையிலும், இதுபற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியுள்ளது ஐ.தே.க. இந்தப் பதைக்குழி குறித்து மட்டுமன்றி, 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட காலத்து படுகொலைகள் குறித்தும் விசாரிக்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார் சஜித் பிறேமதாச. மேலும், விடுதலைப்புலிகள், ஜே.வி.பியினர், ஐ.தே.க, சிறிலங்கா சதந்திரக்கட்சி என்று எல்லாத் தரப்பினரதும் படுகொலைகள் குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். இத்தகைய சூழ்நிலையில், வேறுவழியின்றியே அரசாங்கம் இந்தப் புதைகுழி குறித்து விசாரிக்க இணங்கியுள்ளது.

இந்தப் புதைகுழி குறித்து சுதந்திரமான- அரசியல் தலையீடுகளற்ற - நம்பகமான விசாரணைகள் நடத்தப்பட்டால், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும், இப்போது உயர் நிலை படை அதிகாரிகளாக உள்ள பலரும் விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். கோத்தபாய ராஜபக்சவையும் மூத்த இராணுவ அதிகாரிகளையும் அதில் சிக்க வைப்பதற்கே இந்தப் புதைகுழி குறித்து விசாரணை நடத்த ஐ.தே.க.வும், ஜே.வி.பியும் கோருவதாக பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையப் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுக்கல்ல தெரிவித்திருந்தார். இந்த விவகாரத்தில் நீதியான விசாரணை நடத்தப்பட்டால் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் பதிலளிக்க வேண்டிவரும் என்பதை தெரிந்து கொண்டே தான், ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஏதாவதொரு கண்துடைப்பு விசாரணையின் மூலம் இந்த விவகாரத்தில் இருந்து, கோத்தபாய ராஜபக்சவை விடுவிக்காது போனால், இறுதிப்போர் காலத்துக் குற்றச்சாட்டுகளைப் போன்று, தெற்கிலும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதை அரசாங்கம் நன்றாகவே உணர்ந்து கொண்டுள்ளது. மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதைகுழிக்கும் கோத்தபாய ராஜபக்சவுக்கும் என்ன தொடர்பு என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

1989 இல் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்ட, ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சியின்போது ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி யினர் என்ற சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வீதிகளில் ரயர் போட்டு எரிக்கப்பட்டனர், மின்கம்பங்களில் கட்டி, சுட்டுத் தொங்கவிடப்பட்டனர். தலைகளும், உடல்களும் வெட்டப்பட்டு தனித்தனியே ஆறுகளில் வீசப்பட்டனர். எங்கு பார்த்தாலும் பிணவாடையே வீசியது-திரும்பிய பக்கமெல்லாம் கருகிய பிணங்களே கிடந்தன.

விடுதலைப்புலிகளுக்கெதிரான போரின் போது, எத்தகைய அணுகுமுறை கடைப் பிடிக்கப் பட்டதோ, அதேபோன்ற கொடூரமான அணுகுமுறையே ஜே.வி.பி கிளர்ச்சியை அடக்குவதற்கும் பயன்படுத்துப்பட்டது.

இது மாத்தளையில் மட்டும் இடம்பெறவில்லை, வடக்கு தவிர்ந்த கிழக்கு உள்ளிட்ட ஏனைய எல்லா இடங்களிலும் நிகழ்ந்தன. அப்போது தெற்கில் சிங்கள இளைஞர்கள் படுகொலை மற்றும் காணாமற் போனவர்கள் பிரச்சினையை இப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜெனிவாவுக்கு கொண்டு சென்றிருந்தார். ஆனால், அதன் பின்னர் பெரிதாக எவரும் இதனை வெளியே கொண்டு வந்து நீதி விசாரணை நடத்தக் கோரவில்லை. 1995 இல் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வந்த பின்னர், சூரியகந்த புதைகுழி வெளிச்சத்துக்கு வந்தபோது, அதுபற்றி விசாரிக்க ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால், அதன் அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படவில்லை.

ஜே.வி.பி யினர் காலத்துப் படுகொலைகளில், அரசபடையினரும் பொலிசாரும் தொடர்புபட்டிருந்த போதிலும், எவருமே அதுகுறித்துக் குரல் கொடுக்காததற்குக் காரணம் 1990 களில், விடுதலைப்புலிகளுடன் வெடித்த போர்தான், ஜே.வி.பி யினர் கூட இதுகுறித்துக் குரல் எழுப்பவில்லை என்பதுதான் வேடிக்கை.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள அரச படையினரை உளவியல் ரீதியாக பாதித்துவிடும் என்பதால் தான், எல்லாத் தரப்பினருமே ஜே.வி.பி காலத்து கொலைகள் குறித்து அடக்கி வாசித்தனர்.

இப்போது புலிகள் இல்லை, புலிகளுக்கு எதிரான போர் இல்லை.

அதனால், துணிந்து அரசபடையினரை சந்திக்கு இழுக்கத் தயாராகிவிட்டனர்.

இதிலும் முக்கியமான விடயம் என்னவென்றால், இந்தப் புதைகுழிக்கும், இறுதிப் போர் காலத்துப் படுகொலைகளுக்கும் இடையில் இருக்கின்ற சில ஒற்றுமைகள்தான். அதுதான் , ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சிக்கு வந்துள்ள பிரதான சோதனை.

மாத்தளையில் சடலங்கள் புதைக்கப் பட்ட காலப் பகுதியில் கோத்தபாய ராஜபக்ச மாத்தளை மாவட்ட இராணுவ இணைப் பதிகாரியாகப் பணியாற்றியிருந்தார். அப்போது இராணுவ இணைப்பதிகாரிகளின் அதிகாரம் அரசாங்க அதிபர்களை விட அதிகமானது. அதுமட்டுமன்றி கஜபா றெஜிமென்ட்டின் முதலாவது பற்றாலியனின் கட்டளை அதிகாரியும் அவரே என்பது குறிப்பிடத்தக்கது. புதைகுழி கண்டு பிடிக்கப்பட்ட மாத்தளை வைத்தியசாலையின் அருகேயுள்ள விஜய வித்தியாலயவிலும் ஓய்வு விடுதியிலும் அப்போது கஜபா படைப்பிரிவினர் முகாமிட்டிருந்தனர். இவையிரண்டும் இராணுவ சித்திரவதைக் கூடங்களாகவும், தடுப்பு முகாம்களாகவும் இயங்கியதற்கு இப்போதும் சாட்சிகள் பலர் உள்ளனர். அவற்றுக்கெல்லாம் கோத்தபாய ராஜபக்சவே பொறுப்பாக இருந்தார். அவரின் கீழ், இறுதிப் போர்க்கால குற்றச்சாட்டுக்களை எதிர் கொண்டுள்ள இராணுவத் தளபதிகளான மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண போன்றோரும் மாத்தளையில் தான் அப்போது பணியாற்றினர். இது தான் இந்த விவகாரத்தில் உள்ள முக்கியமான திரும்பம்.

பாதிக்கப்பட்ட ஏராளமானவர்கள் முறையான விசாரணை நடத்தப்பட்டால் சாட்சியமளிக்கத் தயாராகவே உள்ளனர். அப்போது மாத்தளை மருத்துவமனையின் இரு விடுதிகளில் கூட இராணுவத்தினரே தங்கியிருந்தனர். இந்த நிலையில் மாத்தளைப் புதைகுழி குறித்து நீதியான விசாரணை ஒன்று நடத்தப்படுமானால் கோத்தபாய ராஜபக்ச மட்டுமன்றி அப்பகுதியில் பணியில் இருந்த ஏனைய இராணுவ அதிகாரிகளும் விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடலாம்.

ஜனாதிபதி ஆணைக்குழு அப்படி யாரையும் குற்றவாளியாக பெயர் சூட்டுமா என்பது சந்தேகம்தான்.

ஜனாதிபதி ஆணைக்குழு என்பது அதன் கட்டுப்பாட்டு எல்லைகளுக்கு அப்பால் செல்லாது.

அத்துடன் இதன் அறிக்கையைக் கூட பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

இலங்கையின் வரலாற்றில் இப்படி எத்தனையோ ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் குப்பைக்குப் போயுள்ளன. அதனால் தான், இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது.

மாத்தளைப் புதைகுழி விவகாரத்தில் கோத்தபாய ராஜபக்சவையும் இராணுவ அதிகாரிகளையும் சிக்கவைக்க முனைவதாக அரசாங்கம் கூறுகிறது. எனினும் குறிப்பிட்ட இடத்தில் நடந்த [illegible]ளைப்புகளுக்கும் அதன்போது கைது செய்யப்பட்டவர்கள் காணாமற் போனதற்கும் முறையான விசா ரணை ஒன்று நடத்தப்படும்போது இராணுவத்தினர் பதிலளித்தேயாக வேண்டியிருக்கும். அதுவும் நீதிக்குப் புறம்பான கொலைகள் என்று வரும் போது தனியே குற்றவாளிகள் மட்டும் விசாரணையை எதிர்கொள்வதில்லை. அந்தப் படைப்பிரிவுகளுக்கு பொறுப்பானர்வர்களும் விசாரிக்கப்படுவார்கள். அந்த வகையில் கோத்தபாய ராஜபக்ச விசாரணையை எதிர் கொள்ளும் நிலை ஒன்று உருவாகியுள்ளது.

இது எந்தளவுக்கு சாத்தியமாகப்போகிறது என்பது கேள்வி.

எனினும் நீதியான- முறைப்படியான விசாரணை என்று வந்தால், இத்தகைய விசாரணையில் இருந்து அவரால் தப்பிக்க முடியாது.

அவ்வாறான நிலை ஏற்படும்போது போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை அழுத்தங்கள் இன்னும் அதிகமாகும்.

ஏனென்றால், இரு சம்பவங்களிலும் தொடர்புடையவர்களாக இருப்பது அதே அதிகாரிகள் தான். இந்த நிலையில் சர்வதேச விசாரணை அழுத்தங்கள் புதிய கோணத்தை அடையலாம்.

இந்தப் புதைகுழியை இனிமேல் அரசாங்கம் இப்படியே கிடப்பில் போட்டு மூடிவிடவும் முடியாது.

அதேவேளை இந்தப் புதைகுழியை கிண்டிக் கிளறப்போனால் பல உண்மைகளை அரசாங்கம் ஏற்கவும் வேண்டிவரும்.

முள்ளிவாய்க்கால் புதைகுழிகளைத் தோண்டாமல் காலத்தை இழுத்தடிப்பதில் அரசாங்கம் வெற்றி கண்டாலும் மாத்தளைப் புதைகுழியின் உண்மைகளைத் தோண்டுவதிலும் இருந்து நெடுங்காலத்துக்கு தப்பிக்க முடியாது. இதுபோன்ற சூழ்நிலை முள்ளிவாய்க்காலுக்கும் வராமல் போகாது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவரித் திணைக்களத்தின் வரி விழிப்பூட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நிதி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வரி செலுத்துநர்களுக்கான வரி தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் முதலாவது கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை நெல்லியடி முருகன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி, கரவெட்டி கரணவாய் மற்றும் உடுப்பிட்டி பிரதேசங்களிலுள்ள வர்த்தகர்கள், வரி செலுத்துவோர், கணக்காளர்கள், வரி செலுத்த தம்மை பதிவு செய்ய விரும்புவர்கள், மாணவர்கள், வரி பற்றி அறிய விரும்பும் பொதுமக்கள் அனைவரும் இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் பிரதான வரிகளான வருமான வரி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர்வரி மற்றும் முத்திரைத் தீர்வை போன்றவற்றிற்கு தெளிவான விளக்கங்களை இக்கருத்தரங்கில் பெற்றுக் கொள்ள முடியும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின்யாழ். பிராந்தியபிரதிஆணையாளர் பா. சிவாஜி அறிவித்துள்ளார். (அ)

# தவறான பாதையில் இலங்கை பயணிக்கிறது

## அவுஸ்திரேலிய பேராசிரியர்

தவறான பாதையில் சென்று கொண்டிருக்கும் இலங்கைக்கு இராஜதந்திரிகள் தெளிவாக சமிக்ஞையை அனுப்பவேண்டும் என்று அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி ஜேக் லிஞ்ச் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிட்னி பல்கலைக்கழக அமைதி மற்றும் முரண்பாடுகளுக்கான கற்கை நிலையத்தின் பணிப்பாளரான கலாநிதி ஜேக் லிஞ்ச் கொழும்பு பொது நலவாய உச்சிமாநாடு மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய நேரம் என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இந்த ஆண்டு நடத்த் திட்டமிட்டுள்ள பொதுநலவாய உச்சிமாநாடு கைவிடப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அவர் கொழும்பு அவ் உச்சிமாநாட்டை நிறுத்துவதுதான் அர்த்தமுள்ள நடவடிக்கையாக இருக்கும் என்றும் பொதுநலவாய அமைச்சரவைக் குழு தனது பெயரைப் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்றால் அதற்காக பரிந்துரையை செய்ய வேண்டும் என்றும் பேராசிரியர் கலாநிதி ஜேக் லிஞ்ச் தெரிவித்துள்ளார்.

லண்டனில்நடைபெறவுள்ளபொது நலவாய அமைச்சரவைக்கூட்டத்தில் பங்கேற்க அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்கர் விரைவில் லண்டன் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மோசடிகளில் ஈடுபடும் பொலிஸார் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாக விசாரணை செய்யப்படாத குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது. பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் பணிப்புரைக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் அடங்கிய ஆவணங்கள் ஏற்கனவே விசாரணைப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பலருக்கு எதிராகவே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதில் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக 100 இற்கும் மேற்பட்ட ஊழல் மோசடி முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ)

# விமானிகளுக்கு போதியளவு சம்பளம் கிடைப்பதில்லை

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் விமானிகளுக்கு அதிகமான வேலைப்பளு கொடுக்கப்படுவதுடன் போதுமான கொடுப்பனவு செலுத்தப்படுவதில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்துக்கு 275 தொடக்கம் 300 வரையான விமானிகள் தேவைப்படுகின்றனர். எனினும் தற்போது அதில் 200 பேர் மாத்திரமே கடமை புரிகின்றனர் . அவர்கள் மத்தியில் மிகவும் அதிக வேலைகள் பகிரப்படுகின்றது. எனினும் அவர்களுக்கான வேதனமும் சரியான முறையில் வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் எதிர்நோக்குகின்ற அதிக நிதி நெருக்கடியே இதற்கான காரணம் என்று கூறப்படுகிறது. (அ)

# வாகன விபத்துக்களில் ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

புதுவருட பண்டிகையை முன்னிட்டு பொலிஸ் போக்குவரத்து பிரிவு மேற்கொண்ட விசேட சோதனையில் குடிபோதையில் வாகனம் செலுத்திய நூற்றுக்கும் அதிகமான சாரதிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாகன விபத்துக்களை குறைக்கும் நோக்கில் பொலிஸார் கடந்த 13 ஆம் திகதி சனிக்கி ழமை தொடக்கம் விசேட சோதனையில் ஈடுபட்டனர். இதன்போது குடிபோதையில் வாகனம் செலுத்திய 122 சாரதிகளுக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அத்துடன் புத்தாண்டு அன்று இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 5 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# 2013.04 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1346-தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியை உள்ளடக்கிய சேர்பியப் பேரரசு டுசான் சில்னி என்பவனால் உருவாக்கப்பட்டது.

★1582-ஸ்பானிய ஆக்கிரமிப்பாளன் ஹெர்னாண்டோ டி லேர்மா என்பவன் ஆர்ஜெண்டீனாவின் சல்ட்டா என்ற குடியேற்றத் திட்டத்தை கண்டுபிடித்தான்.

★1853-இந்தியாவின் முதலாவது பயணிகள் தொடருந்து சேவை மும்பையில் ஆரம்பிக்கப்பட்டது.

★1885-இலங்கையில் அஞ்சல் அலுவலக சேமிப்புத் திட்ட முறை அறிமுகமானது.

★1912-ஹரியெட் குயிம்பி என்னும் பெண் ஆங்கிலக் கால்வாயை விமானத்தில் கடந்த முதல் பெண் ஆனார்.

★1917-நாடு கடந்த நிலையில் பின்லாந்தில் இருந்த விளாடிமிர் லெனின் வென் பீட்டர்ஸ்பேர்க் திரும்பினார்.

★1919- அம்ரித்சர் படுகொலையைக் கண்டித்து மகாத்மாகாந்தி ஒருநாள் உண்ணாநோன்பு இருந்தார்.

★1925- பல்கேரியாவின் தலைநகர் சேர்பியாவில் சென் நெடெலியா ஆலயத்தில் கம்யூனிஸ்டுகள் தாக்கியதில் 150 பேர் கொல்லப்பட்டு 500 பேர் படுகாயமடைந்தனர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: செம்படையினர் ஜேர்மனியப் படைகளுக்கெதிரான தமது கடைசிப் போரை பெர்லினைச் சுற்றி ஆரம்பித்தனர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: அகதிகளை ஏற்றிச் சென்ற கோயா என்ற ஜேர்மனியின் கப்பல் ஒன்று சோவியத் நீர்மூழ்கியால் தாக்கப்பட்டு மூழ்கியதில் 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★1947- சோவியத்,- ஐக்கிய அமெரிக்கா இடையேயான உறவுகளை பணிப் போர் என அமெரிக்க பொருளாதார ஆலோசகர் பேர்னார்ட் பரெக் என்பவர் முதன் முதலாக வர்ணித்தார்.

★1966- முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் ஆரம்பமானது.

★1972- நாசாவின் அப்போலோ 16 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★2007- ஐக்கிய அமெரிக்காவின் வேர்ஜீனியா பல்கலைக்கழகத்தில் கொரிய மாணவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழகப் பேராசிரியர் லோகநாதன் உட்பட 33 பேர் கொல்லப்பட்டு 29 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புக்கள்

★1844- அனத்தோலி பிரான்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1924)

★1851-சேர் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கையின் தேசியத் தலைவர் (இ.1930)

★1867-வில்பர் ரைட், முதன் முதலின் எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்து சாதனை படைத்தவர். (இ.1912)

★1889- சார்லி சாப்ளின், நடிகர் (இ.1977)

★1927-திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர், உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் 265 ஆவது திருத் தந்தை

★1935-சுபத்திரன், ஈழத்து முற்போக்கு இலக்கியக் கவிஞர் (இ.1979)

★1947-கரீம் அப்துல் ஜப்பார், முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

★1957-பெரியசாமி சந்திரசேகரன், இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களின் அரசியல் தலைவர், தொழிற்சங்கவாதி

★1985-லூவால் டெங், பிரித்தானிய கூடைப் பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★1908-அப்புக்குட்டி கிங்ஸ்பரி, யாழ்ப்பாணக் கல்லூரியின் கணிதவியல் பேராசிரியர்

★1972 யசுனாரி கவபட்டா, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய எழுத்தாளர் (பி. 1899)

### சிறப்பு நாள்

★சிரியா- விடுதலை நாள் (1946)

### சேர்பொன்னம்பலம் இராமநாதன்



சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் தேசியத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். சிங்களவரும் தமிழரும் இனவேறுபாடு பாராது அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர். யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த அருணாசலம் பொன்னம்பலம் என்பவரின் இரண்டாவது புதல்வராக 1851 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி கொழும்பில் பிறந்தார்.

1879 ஆம் ஆண்டு இலங்கையின் சட்டசபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

1921 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் பிரபுப் பட்டம் (Sir) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இலங்கையில் பிரித்தானியரின் பல நடவடிக்கைகளுக்கு எதிராக வாதாடி இலங்கையரின் நலன்களைப் பாதுகாத்தார்.

கீழைத்தேய மெய்யியல் தூதுவராக 1905-1906 இலே அமெரிக்கா சென்று சொற்பொழிவுகளாற்றிப் பெயர் பெற்றார். சைவசித்தாந்த மகாசமாஜத்தின் முதல் மாநாட்டிற்கு (1906) தலைமை வகித்தார்.

இந்துக்களின் கல்வி மேம்பாட்டுக்காக யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக இரண்டு பாடசாலைகளை நிறுவியுள்ளார். இவற்றில் பெண்கள் பாடசாலையான இராமநாதன் பெண்கள் கல்லூரி இன்றும் யாழ்ப்பாணத்தின் முக்கிய கல்லூரிகளிலொன்றாக விளங்கி வருகிறது. ஆண்கள் பாடசாலையான பரமேஸ்வராக் கல்லூரி 1970களின் தொடக்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஒரு பகுதியாக்கப்பட்டது.

ஸ்ரீபொன்னம்பலவாணேசர் கோயில் எழுந்தருளிய இடத்திலே புதியதொரு கோயிலை 1907 ஆம் ஆண்டு கருங்கற் பணியாக ஆரம்பித்து 1912 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி குடமுழுக்கு செய்வித்தார். 1923 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் தோன்றுவதற்குக் காலாக இருந்ததோடு அதன் முதற் தலைவராகவும் பாடசாலைகளின் முகாமையாளராகவும் 1926 வரை சேவை செய்தார். அரசியல், சமூக, சமய துறைகளில் தன்னை அர்ப்பணித்த இவர் 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி 79 ஆவது வயதில் அமரத்துவம் அடைந்தார்.


அரசியலில் இவர் நாட்டுக்குச் செய்த சேவையைக் கௌரவிப்பதற்காக கொழும்பில் பழைய நாடாளுமன்ற வளாகத்துக்குள் இவரது சிலை நிறுவப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பழக்கவழக்கங்களில் ஈரல் சிறுநீரக பாதிப்புக்கள்

கல்லீரலே மனித உடலில் மிகப்பெரிய சுரப்பியாகும். சுமார் 1 கிலோ எடை கொண்டது. இது மிகவும் மென்மையான உறுப்பாகும். செம்பழுப்பு நிறத்துடன் காணப்படும். கல்லீரல் வயிற்றின் மேல் பகுதியில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது. நாம் உண்ணும் கொழுப்பு சத்துள்ள உணவுப்பொருட்கள் சமிபாடடைய பித்தநீர் மிகவும் அவசியமாகும். இந்த பித்தநீரை உற்பத்தி செய்வது கல்லீரல்தான்.

பொதுவாக கொழுப்புச் சத்துள்ள உணவு




களை சமிபாடடையாமல் ஆங்காங்கே படிந்து குருதியின் மூலம் எல்லா உறுப்புகளுக்கும் சென்றடைந்து விடும். இதில் முக்கியமாக கொழுப்பு இதயத்திற்கு செல்லும் குருதிக்குழாய்களில் படிந்து அடைப்பை ஏற்படுத்தி விடுகிறது. இதனால் இதயத்திற்கு தேவையான குருதி செல்வதில்லை. இதனால் மாரடைப்பு ஏற்படுகிறது.

இந்த கொழுப்பை கல்லீரலில் சுரக்கும் பித்த நீரானது கரைத்து விடுகிறது. இதனால் மாரடைப்பு ஏற்படாமல் இருக்க கல்லீரல் முக்கிய பங்கு வகிக்கிறது. நமது உயிரை பாதுகாக்கும் முக்கிய உறுப்பான கல்லீரலை கடுமையாக பதம் பார்ப்பது நொறுக்குத் தீனிகளே.


அதிலும் குறிப்பாக பக்கெட்டில் அடைத்து விற்கப்படும் சிப்ஸ், பீஸா மற்றும் குளிர் பானங்கள் போன்றவற்றில் உணவுப் பொருள் கெடாமல் இருக்க சில இரசாயனங்கள் சேர்க்கப்படுகின்றன. அவை 100 சதவீதம் கல்லீரலை குறி வைத்து தாக்குகிறது. இந்த நொறுக்குத்தீனிகளை அதிகம் விரும்பி சாப்பிடுவது குழந்தைகள்தான். இவை சுவையாக இருப்பதால் குழந்தைகள் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு விடுகிறார் கள்.

நகர்ப்புறங்களில் வசிக்கும் குழந்தைகள் அடிக்கடி நொறுக்குத் தீனிகளை விரும்பி சாப்பிடுகின்றன. நொறுக்கு தீனிகளில் உள்ள கொழுப்பு குழந்தைகளின் கல்லீரலின் மேல் பகுதியில் படிந்து பருமனாக மாறி விடுகிறது. தற்போது நம் நாட்டில் உள்ள 80 சதவீதம் குழந்தைகள் இதுபோன்ற கொழுப்பு மிகுந்த ஈரலை உடையவர்களாக உள்ளனர்.

நொறுக்குத்தீனிகளில் உணவு கெடாமல் இருக்கவும்,சுவையாக இருக்கவும் இரசாயனங்கள் அதிக அளவில் சேர்க்கப்படுகின்றன. இதனால்தான், முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு குழந்தைகள் பலருக்கு கல்லீரல், சிறுநீரகக்கல் கோளாறுகள் அதிகம் காணப்படுகின்றன. சிறுநீரகக் கல் என்பது சிறிய படிகங்களை கொண்ட ஒரு திடப் பொருள் ஆகும். சிறுநீரகத்திலோ அல்லது சிறு நீரகக் குழாயி லோ ஒரே நேரத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கற்கள் இருக்கும்

சில பொருட்களினால் சிறுநீர் அடர்கரைசலாகும் போது சிறுநீரகக் கற்கள் தோன்றலாம். சிறுநீரில் காணப்படும் இந்த பொருட்கள் சிறிய படிகங்களை உண்டாக்கி, அவை கற்களாக மாறலாம். சிறுநீர் கற்கள் உண்டாகி சிறுநீரகக் குழாய் வழியாக கீழே இறங்கும் வரை எந்த அறிகுறியையும் ஏற்படுத்தாது. சிறுநீரகக் கற்கள் சிறுநீர் குழாய் வழியாக கீழ்நோக்கி நகரும் போது வலி யினை ஏற்படுத்தும்.

இவ்வலியானது, அடிக்கடி பின்புற விலாவின் 2 பக்கங்க்ளிலும் ஆரம்பித்து கீழ் நோக்கி நகரும். கல்சியம் கற்கள் அதிகமாக ஏற்படக் கூடியவை. அவை 2 அல்லது 3 மடங்கு அதிகமாக ஆண்களுக்கு ஏற்படும்.




கல்சியம் பிற பொருட்களான ஆக்ஸ்லேட் பொஸ்பேட் அல்லது காபனேற் போன்றவையுடன் சேர்ந்து கற்களை உண்டாக்கும்.


பின்பக்க விலாவில் வலி அல்லது முதுகு வலி, ஒரு பக்கம் அல்லது இரண்டு பக்கத்திலும் அதிகரிக்கும் வலி. குமட்டல், வாந்தி, அடிக்கடி சிறுநீர் கழித்தல், சிறுநீரில் இரத்தம் காணப்படுதல், அடிவயிற்றில் வலி.வலியோடு சிறுநீர் கழித்தல், இரவு நேரத்தில் அதிக அளவு சிறுநீர் கழித்தல், ஆணின் முதன்மை இனப் பெருக்க உறுப்பில்வலி, சிறுநீரின் நிறம் இயற்கைக்கு மாறாக காணப்படுதல்.

சிறுநீரக கற்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் இருப்பின், அதிக அளவு தண்ணீர் உட்கொள்ளுதல் அவசியம். பொதுவாக ஒரு நாளைக்கு 6 முதல் 8 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். சிறு நீரகக் கற்களின் தன்மையை பொறுத்து மருத்துவரின் ஆலோசனையின்படி மருந்தோ அல்லது பிற முறைகளையோ கையாண்டு, கற்கள் திரும்பத் திரும்ப ஏற்படுவதை தடுக்கலாம்.

பக்கெட்டில் அடைத்து விற்கப்படும் நொறுக்குத் தீனிகளை குழந்தைகளுக்கு கொடுக்காது வீட்டில் தயாரித்த உணவு களை கொடுப்பது நல்லது. உணவில் காய் கறிகள் அதிகம் சேர்க்க வேண்டும். தினமும் ஏதாவது சில பழங்களை உண்ணலாம். குழம்பு போன்றவற்றை சமைத்த அன்று மட்டும்தான் சாப்பிட வேண்டும், அதை பிரிட்ஜில் வைத்து மறுநாள் உணவைத் தவிர்த்தல் வேண்டும்.

இரசாயன குளிர்பானங்களை அருந்துவதைதவிர்த்தல், கல்லீரல் நோயாளிகள் அசைவ உணவுகளை சாப்பிடக்கூடாது. சோடா உப்பு கலந்த உணவுகள், எளிதில் ஜீரணமாகாத உணவுகள், வேர்க்கடலை மற்றும் கிழங்கு வகைகளை தவிர்க்க வேண்டும். உணவில் அதிக அளவில் கீரைகள் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

## இதயப் பாதிப்பு நினைவை பாதிக்கும்




நினைவுத்திறன் குறைபாடு என்பது இன்றைக்கு பெரும்பாலான முதியவர்களை பாதிக்கிறது. அல்சீமர் எனப்படும் இந்த நோயை தடுக்க இதயத்தை பத்திரமாக பாதுகாக்கவேண்டும் என்று சமீபத்திய ஆய்வு முடிவு ஒன்றில் தெரியவந்துள்ளது.

மறதி நோய் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று மறதி நோயில் இருந்து விடுபட முதலில் இதயத்தை வலுவாக, ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மறதி நோயால் அவதிப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

உடலில் நல்ல கொழுப்புகள் அதிகம் இருந்தால் இதயத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை. அதேசமயம் கெட்ட கொழுப்புகள் அதிகமாகி அவை இரத்தநாளங்களில் படிந்து இதயநோய்களை ஏற்படுத்துகின்றன. இதனால் நோய் குறித்த எண்ணமே மூளையை பாதிக்கிறது. எனவே ஆரோக்கியமான உணவுகளை உட்கொளவதன் மூலம் இதயத்தை பாதுகாப்பதோடு மூளையையும் ஆரோக்கியமாக வைத்திருக்கமுடியும்.

பொதுவாகவே உடல்நலக்குறைவு ஏற்பட்டால் முதலில் பாதிக்கப்படுவது இதயம்தான். இதே நினைப்பு மூளைச்செயற்பாட்டையும் பாதிக்கும். இதயம், மூளை இரண்டும் ஆரோக்கியமாக இருந்தால் அனைத்து பாதிப்புகளுக்கும் எளிதில் சீர்நிலை அடைகின்றது.

Health Care
மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# மக்களுக்கு பொருத்தமானதையே அரசாங்கம் முன்னெடுக்கும்

## சிரேஷ்ட சட்டத்தரணி ஹோமின்

அமெரிக்காவின் தாளத்திற்கு ஆட வேண்டிய அவசியம் கிடையாது என சிரேஷ்ட சட்டத்தரணி ஹோமின் தயாசிறி தெரிவித்துள்ளார். இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜே சிசன் வெளியிட்ட கருத்துக்களுக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் மிகவும் பொருத்தமானது எதுவோ அதனை அமுல் படுத்தவே அரசாங்கம் முனைப்பு காட்ட வேண்டுமெனவும், நாட்டுக்கு நன்மை ஏற்படக் கூடிய உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த கட்டமாக இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவை விட இந்தியா தலையீடு செய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவளித்த நாடுகளின் ஒத்துழைப்பை தக்க வைத்துக் கொள்ள உண்மையைக் கண்டறி யும் ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல் படுத்த வேண்டியது அவசியமானது என ஹோமின் தயாசிறி குறிப்பிட்டுள்ளார். (அ)

# சிறைச்சாலை காவலாளிகளுக்கு அதி நவீன ஆயுதங்கள்-அமைச்சர் கஜதீர

சிறைச்சாலைகளின் காவலாளிகளுக்கு அதி நவீன ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் துறை அமைச்சர் சந்திர சிறி கஜதீர இதனைத் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த வருடம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை தொடர்ந்து, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து தற்போது சிறைச்சாலைகளின் காவலாளிகளுக்கு டி 56 வகை துப்பாக்கிகளே வழங்கப்பட்டுள்ளதாகவும், எதிர் காலத்தில் அதி நவீன ஆயுதங்கள் வழங்கப் படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கண்ணீர்ப்புகை உள்ளிட்ட சிறைச்சாலைகளுக்கு தேவையான ஆயுதங்களுக்கான கேள்வி அறிவித்தல் விடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

# இன,மத முரண்பாடுகளை தூண்டி ஆட்சியை கவிழ்க்க முனைப்பு

## அமைச்சர் விதாரண குற்றச்சாட்டு

காலனித்துவ நாடுகள் பிரிவினைவாத தந்திரோபாயங்களையே தொடர்ந்தும் பயன்படுத்தி வருவதாக சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இன, மத ஜாதி பிரிவனைவாதத்தை பயன்படுத்தி காலனித்துவ நாடுகள் தங்களது ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொண்டதாகவும், கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட அதே தந்திரோபாயங்களே தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

தங்களது அரசியல் கொள்கைகளுக்கு புறம்பாக செயற்படும் ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதில் காலனித்துவ நாடுகள் கூடுதல் முனைப்பு காட்டி வருவதாகவும், இன மத முரண்பாடுகளைத் தூண்டி அதன் மூலம் ஆட்சியை கவிழ்ப்பது மிகவும் சுலபமான வழிமுறையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை விவகாரங்கள் தொடர்பில் சென்னைக்கு போதியளவு புரிதல் கிடையாது எனவும், தப்பான அபிப்பிராயமே இந்த முரண்பாட்டு நிலைமைக்கான காரணம் எனவும் அவர் வலியுறுத்தியதோடு,

அண்மையில் பிரித்தானியா விடுத்துள்ள பயண எச்சரிக்கையானது உண்மையான தகவல்களின் அடிப்படையில் வெளியிடப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குடும்ப அரசியல் நிலைப்பாடுகளில் உடன்பாடுகிடையாது எனவும், சோசலிச வாதத்தை தாம் போற்றுவதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரப்பனின் முகத்தை கூட பார்த்ததில்லை; எங்கள் தண்டனையை இரத்து செய்யுங்கள்

## வீரப்பனின் சகாக்கள் மன்றாட்டம்

கர்நாடக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் வீரப்பன் கூட்டாளிகள் நான்கு பேரும் தூக்கு தண்டனையிலிருந்து தங்களைக் காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கர்நாடக மாநில எல்லையான பாலாறில் இடம்பெற்ற கண்ணிவெடி குண்டு தாக்குதலில் வீரப்பன் கூட்டாளிகள் நால்வர் கைது செய்யப்பட்டு கர்நாடக மாநிலம் பெல்காம் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் உச்ச நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

தூக்கு தண்டனை கைதிகளின் தரப்பில் கருணை மனு தாக்கல் செய்யப்பட்டமையை தொடர்ந்து அவர்களை தூக்கிலிட உச்ச நீதிமன்றம் 6 வார தடை விதித்தது. இதனால் இவர்கள் தூக்கு தண்டனையிலிருந்து தற்காலிகமாக காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் 6 வார தடை காலம் கடந்த மாதம் 18 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. இதில் ஒருவர் தற்போது உடல்நிலை பாதிப்புக் காரணமாக சைமன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த 1993 ஆம் ஆண்டு இளைஞர் காங்கிரஸ் அலுவலகம் முன் நடத்தப்பட்ட கார்க்குண்டு தாக்குதலுடன் தொடர்புபட்ட காலிஸ்தான் தீவிரவாதி புல்லருக்கு தூக்கு தண்டனையை குறைக்க முடியாது என உச்ச நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு கூறியதையடுத்து கர்நாடக சிறையில் அடைக்கப்பட்டிருந்த வீரப்பன் கூட்டாளிகள் தங்களுக்கும் அந்த நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்ச நிலையில் உள்ளனர்.

இந்நிலையிலேயே மேற்படி கோரிக்கையை வீரப்பனின் கூட்டாளிகள் விடுத்துள்ளனர். அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாங்கள் வீரப்பன் முகத்தை கூட பார்த்தது இல்லை. எங்கள் மீது போடப்பட்ட வழக்கும் தூக்குத் தண்டனையும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் ஏற்பட்டது. எங்கள் வழக்கில் சி.பி.ஐ விசாரணை அவசியம் தேவை.

கர்நாடகாவில் உள்ள பா.ஜ. அரசு எங்களின் உயிரை காப்பாற்ற சட்டமன்ற தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

எங்கள் உயிரை காப்பாற்ற தமிழக-கர்நாடக மாநிலம் தழுவிய அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்.

எங்கள் உயிரைக் காப்பாற்ற தமிழகத்தை ஆண்டுவரும் முதல்வர் அம்மா கர்நாடக அரசுக்கும் டில்லி அரசுக்கும் விரைவு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்து தர வேண்டும் என இத்தருணத்தில் மன்றாடி கேட்டுக் கொள்கிறோம். மேலும் தி.மு.க., பா.ஜ. கட்சிகள் எங்களின் தூக்குத்தண்டனையை நிறுத்த பணிவன்போடு வேண்டுகின்றோம் என கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-5)

# கௌரவக் கொலைகள் தமிழகத்தில் அதிகரிப்பு

## திருமாவளவன் வருத்தம்

தமிழகத்தில் சாதி மறுப்பு திருமணம் செய்பவரை கௌரவக் கொலைகள் செய்வது அதிகரித்து வருகிறது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கவலை வெளியிட்டுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் மயிலாப்பூரில் நேற்று நடைபெற்ற டாக்டர் அம்பேத்கரின் பிறந்தநாள் விழா மற்றும் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

கௌரவக் கொலைகளைத் தடுக்க சிறப்புச் சட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென இந்திய சட்ட ஆணையமும் நீதிபதி வர்மா குழுவும் இந்திய அரசுக்கு செய்துள்ள பரிந்துரையை இந்திய அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஈழப் பிரச்சினையில் தமிழர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் சிலர் குறியாக உள்ளனர்.

நாம் எங்கு இருந்தாலும் எங்கள் கொள்கையை விட்டுக் கொடுத்ததில்லை. காங்கிரஸ், தி.மு.கவோடு இருந்தபோதும் எமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)




# சரணடையும் மாவோயிஸ்டுக்கு உதவித்தொகை அதிகரிப்பு

(புதுடில்லி)

இராணுவத்திடம் சரணடையும் மாவோயிஸ்டுகளுக்கான உதவித் தொகையை ஒன்றரை இலட்சத்தில் இருந்து இரண்டரை இலட்சமாக உயர்த்தியுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

கடந்த சில வருடங்களாக மாவோயிஸ்டுகள் யாரும் சரண் அடையாததால் அவர்களுக்கான உதவித் தொகையை உயர்த்தி வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஏற்கனவே உள்ள மாவோயிஸ்டு மறுவாழ்வு கொள்கைப்படி சரணடையும் ஒரு நக்சலைட்டுக்கு ஒன்றரை இலட்சம் பணத் தொகையும் மாத உதவி தொகையாக 2 ஆயிரம் ரூபாய் முதல் 3 ஆயிரத்து 500 ரூபா வரை வழங்கப்பட்டது.

எனினும் தற்போது இந்த தொகை இரண்டரை இலட்சம் ஆக உயர்த்தப்பட்டு உள்ளதுடன் மாவோயிஸ்டு இயக்க தலைமை வகிப்பவருக்கு இரண்டரை இலட்சமும் துணை தலைமை மாவோயிஸ்டுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாயும் வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரணடையும் மாவோயிஸ்ட் நபரின் பெயரில் அவருக்கு உரிய தொகை குறிப்பிட்ட வங்கியில் வைப்புச் செய்யப்படும் எனவும் 3 ஆண்டுகள் முடிந்த பின் அவர் அந்த தொகையை எடுத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சரணடையும் மாவோயிஸ்டுக்கு அவருக்கு தகுதி வாய்ந்த அவர் விருப்பப்படும் துறையில் வேலை வாய்ப்பு பயிற்சியும் தொடர்ந்து 3 வருடத்துக்கு மாதந்தோறும் 4ஆயிரம் ரூபா உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் புதிய திருத்தத்தின்படி ஆயுதங்களை ஒப்படைக்கும் மாவோயிஸ்டுக்கு கூடுதலாக 35 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது. (அ-5)

# நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மரணத்தில் தொடரும் மர்மம்

## கண்டுபிடிக்கப்படும் என்கிறார் மோடி

இந்திய விடுதலைக்காக ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்தி வெள்ளையர் அரசுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் மரணம் தொடர்பில் விரைவில் முடிவு எட்டப்படும் என குஜராத் முதல்வர் மோடி தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரின் போது இந்தியாவில் இருந்து வெளியேறி ஆப்கானிஸ்தான் மற்றும் ரஷ்யா வழியாக ஜேர்மனி சென்ற சுபாஷ் சந்திரபோஸ் பிரிட்டிஷ் இராணுவத்தை எதிர்த்து போரிட்ட ஜேர்மனி படைகளுடன் சேர்ந்து இந்திய விடுதலைக்காக போராடியிருந்தார்.

1984 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி போர் விமானத்தில் ஜப்பான் நோக்கி அவர் சென்று கொண்டிருந்தபோது கோளாறு காரணமாக விமானம் மலை மீது மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் நேதாஜி பலியாகிவிட்டதாக அதிகாரபூர்மற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 68 ஆண்டுகளாக நிலவி வரும் நேதாஜியின் மரணம் தொடர்பான தகவல்கள் மர்மாகவே இருந்து வருகின்றன.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் டில்லியில் உள்ள மிஷன் நேதாஜி என்ற அமைப்பு பிரதமர் அலுவலகத்தில் இருந்து நேதாஜியின் மரணம் தொடர்பான 33 கோப்புக்களின் நகலை கேட்டு மனு செய்திருந்தது.

எனினும் அந்த தகவல்களை அளித்தால் நட்பு நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவும் நாட்டின் இறையான்மையும் பாதிக்கப்படும் என தெரிவித்த மத்திய அரசு அவ் ஆவணங்களை வழங்க மறுத்திருந்தது.

இந்நிலையில் நேதாஜியின் உறவினர்கள் 24 பேரின் சார்பில் அவரது மருமகனின் மகன் சந்திர போஸ் கடந்த வாரம் குஜராத் முதல் அமைச்சர் நரேந்திரமோடியிடம் கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து இவ்விவகாரம் தொடர்பாக பரிசீலிப்பதாக மோடி வாக்குறுதி அளித்துள்ளதாக நேதாஜியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-5)

# கூடங்குளத்தில் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம்

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் கடல் நீரை சுத்திகரிக்கும் நிலையம் அமைப்பதற்காக கடலோர கண்காணிப்பு பகுதி ஒப்புதலை வழங்க மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் உயர் நிலைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அதன்படி இந்த சுத்திகரிப்பு நிலையம், கூடங்குளம் பகுதி கடலில் இருந்து நீரை எடுத்து அதனை சுத்திகரித்து அணுமின் நிலையத் தேவைக்காக வழங்கும். இதில் மொத்தம் 4 சுத்திகரிப்பு உள் பிரிவுகள் உண்டு.

ஒவ்வொரு பிரிவும் ஒரு மணி நேரத்தில் தலா 106.66 கன மீற்றர் நீரை கையாளும் திறனுடையது. இதில் மூன்று மட்டுமே செயற்படும். ஒன்று அவசர காலத்துக்கு பயன்படுத்தப்படும்.

இவ்விடயம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு கடந்த ஆண்டு அளித்த விளக்கத்தில் சுத்திகரிக்கப்பட்ட கடல் நீர் அணு மின் நிலையத்தில் குளிர்விக்கும் பணிக்காக பயன்படுத்தப்படும்.

பின்னர் அந்த நீர் மீண்டும் கடலுக்குள் விடப்படும். இதனால் கடல் வாழ் உயிரினங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோல இந்திய அணு சக்தி நிறுவனம் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் அணு உலையில் பயன்படுத்தப்பட்ட எரிபொருள் கழிவுகள் கடலில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. இதில் யுரேனியம், புளுட்டோனியம் கழிவுகள் இருக்கும் என்று கூறப்பட்டது.

சமீபத்தில் நடைபெற்ற கடலோர கண்காணிப்புப் பிரிவின் நிபுணர்களின் ஆய்வுக்கூடத்தில், இத்திட்டம் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தமிழக கடலோர மேலாண்மை ஆணையம் ஆகியவற்றின் அனைத்து கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாகக இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அணு மின் நிலையத்தில இருந்து வெளியேறும் கழிவுகள் கடலில் கலக்கும் இடத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)



அம்பேத்காரின் 122 ஆவது பிறந்த நாளான நேற்று பாராளுமன்றத்தில் உள்ள அவரது சிலைக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

# மன்மோகனுக்கு வைத்த விருந்தில் அழையா விருந்தாளியாக நரி

மூன்று நாள் அரசு முறை பயணமாக ஜேர்மனி சென்ற இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அந்நாட்டின் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் தனது அதிகாரபூர்வ இல்லத்தில் விருந்து வழங்கி சிறப்பித்த வேளையில் விருந்து இடம் பெற்ற இடத்திற்கு நரி உள் நுழைந்த சம்பவம் அதிகாரிகளை பதற வைத்துள்ளது.

குறித்த விருந்தில் மன்மோகன் சிங் மனைவி குர்சரண் கவுர், வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா, பிரதமரின் முதன்மைச் செயலாளர் புலோக் சாட்டர்ஜி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் மற்றும் பிரதமரின் பொதுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

விருந்து தொடங்குவதற்கு முன்பாக அதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடந்து கொண்டிருந்த போதே அந்த மண்டபத்திற்குள் அழையா விருந்தாளியாக ஒரு நரி நுழைந்துவிட்டது.

அதைக் கண்டதும் அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் திகைத்துப் போனார்கள். எனினும் அந்த நரி சில நிமிடங்களில் யாருக்கும் எவ்வித பிரச்சினைகளையும் ஏற்படுத்தாது தானாகவே அங்கிருந்து வெளியேறி சென்றுள்ளது.

அதன் பின்னரே பாதுகாப்பு அதிகாரிகள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெனிசுலா ஜனாதிபதியாக நிக்கோலஸ்



வெனிசுலா தேர்தலில் நிக்கோலஸ் மதுரோ மூன்று இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் ஜனாதிபதியாக இருந்த ஹ்யூகோ சாவேஸ் (வயது 58) புற்றுநோயால் மரணம் அடைந்ததை தொடர்ந்து புதிய ஜனாதிபதி தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இத்தேர்தலில் சாவேசின் ஆதரவாளர் நிக்கோலஸ் மதுரோ (வயது 50). எதிர்க்கட்சி தலைவர் ஹென்றி கியூ காப்ரிலேஸ் (வயது 40) ஆகியோர் போட்டியிட்டனர். நேற்றுமுன் தினம் வாக்கு பதிவு முடிந்ததும் வாக்கு எண்ணிக்கை ஆரம்பமானது. நிக்கோலஸ் மதுரோ அபார வெற்றி பெற்றார்.

அவர் தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஹென்றிகியூ காப்ரிலேசை விட மூன்று இலட்சம் வாக்குகள் கூடுதலாக பெற்றதுடன் இவர் 50.8 சதவீதம் வாக்குகளை பெற்றுள்ளார்.

சாவேஸ் ஜனாதிபதியாக இருந்த போதே நிக்கோலஸ் மதுரோ துணை ஜனாதிபதியாக இருந்தார். அவர் சிகிச்சைக்காக கியூபா சென்றிருந்த போது ஜனாதிபதி பொறுப்பை கவனிக்க இவரையே சாவேஸ் நியமித்து இருந்தார்.

மேலும் சாவேஸ் மறைவுக்கு பின்னர் இடைக்கால ஜனாதிபதியாகவும் இவர் நியமிக்கப்பட்டிருந்தார். சாவேசின் சமூக புரட்சி கொள்கையை தாமும் தொடர்ந்து கடைப்பிடிப்பதாக நிக்கோலஸ் உறுதி அளித்துள்ளார். (அ-5)

## போலியோ மருந்தை கண்டு பிடித்தவர் மரணம்



போலியோ நோய்க்கு மருந்து கண்டு பிடித்த போலாந்து நாட்டை சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஹிலாரி கோப்ரோவ்ஸ்கி நேற்று முன்தினம் தனது 96 ஆவது வயதில் பிலாடெல்பியாவில் உள்ள தனது வீட்டில் மரணம் அடைந்தார்.

இவர் 1950 ஆம் ஆண்டு தீவிர ஆராய்ச்சிக்கு பின்பு போலயோ நோய்த் தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தார். இது தவிர மேலும் பல நோய்கள்ளுக்கு மருந்து கண்டுபிடித்துள்ளார்.

இவ்வாறு மருந்து கண்டுபிடித்த பல நோய்கள் தற்போது முற்றிலும் அழிந்து விட்டதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-5)

# நீதிமன்றில் தற்கொலை தாக்குதல்; அதிர்ந்தது சோமாலிய தலைநகரம்

## இரட்டைத் தாக்குதல் –20 பேர் வரை பலி

சோமாலிய தலைநகரில் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 20 பேர் வரை பலியாகியுள்ளனர்.

இச்சம்பவங்கள்தொடர்பில்மேலும் தெரிய வருவதாவது,

சோமாலியா தலைநகர் மொகாடிவில் அமைந்துள்ள நீதிமன்றத்திற்குள் புகுந்த தற்கொலைப்படை தீவிரவாதி அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளன.

இதனை சற்றும் எதிர்பார்க்காத பொலிஸார் பின்னர் சுதாரித்துக் கொண்டு திருப்பி தாக்குதல் நடத்த முற்படுகையில் தனது இடுப்பில் கட்டியிருந்த வெடி பொருட்களை தீவிரவாதி வெடிக்கச் செய்துள்ளான்.

இத்தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தலைநகரில் மேலுமொரு இடத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 4 பேர் வரை பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல்களுக்கு இது வரை யாரும் பொறுப்பேற்காத நிலையில் இது அல்கொய்தாவுடன் தொடர்புடைய அல் சபாப் என்ற இஸ்லாம் தீவிரவாத இயக்கத்தின் வேலையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (அ-5)

# உணவக விடுதியில் தீவிபத்து; 11 பேர் வரை உடல் கருகி சாவு

சீனாவின் சிங்யாங் நகரிலுள்ள 5 மாடி கட்டடத்தின் தரை தளத்தில் அமைந்துள்ள இணையதளமையத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 11 பேர் உடல் கருகி பலியானதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் எரி காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

முதலில் தரை தளத்தைப் பற்றிய தீ பின்னர் வேகமாக எல்லா மாடிகளுக்கும் பரவியுள்ளது. கட்டடத்திற்கு மேலே அமைந்துள்ள உணவக விடுதியின் அறைகளில் ஆட்கள் தங்கியிருந்ததோடு இவ் விபத்து நிகழ்ந்தது அதிகாலை நேரம் என்பதால் பலர் உறக்கத்தில் இருந்துள்ளனர். இதன் காரணமாக உணவக விடுதி அறைகளில் தீ வேகமாக பரவியுள்ளது. இவ்விபத்து குறித்த தகவல் அறிந்த மீட்புப் படையினர் விரைந்து சென்று சுமார் 2 மணி நேரம் போராடி தீயை அணைத்துள்ளனர்.

குறித்த தீவிபத்தில் 11 பேர் உடல் கருகி பலியானதுடன் காயமடைந்த சுமார் 50 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெற்று வருபவர்களின் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது. (அ-5)




# அழைக்கிறது தென்கொரியா; மறுக்கிறது வடகொரியா

பேச்சுவார்த்தைக்கு வருமாறு தென்கொரியா விடுத்த அழைப்பை வடகொரியா நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் போர் மூளும் அபாயம் மேலும் அதிகரித்துள்ளது.

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா கடந்த பெப்ரவரி மாதம் அணு ஆயுதச் சோதனையை நிகழ்த்தியது. இதைத் தொடர்ந்து அந்நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

எனினும் மீண்டும் ஏவுகணைச் சோதனைகளை நடத்த வடகொரியா தயாராகி வருவதாக உளவுத் தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில் தென்கொரியாவும் அதை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தென் கொரியாவையும் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் அமெரிக்காவையும் தாக்குவோம் என்று வடகொரியா அறிவித்துள்ளது. இதனால் கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதப் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

எனவே பதற்றத்தைத் தணிப்பதற்காக பேச்சுவார்த்தைக்கு வருமாறு வடகொரியாவுக்கு தென்கொரியா கடந்த வாரம் அழைப்பு விடுத்திருந்தது.

எனினும் இது தென்கொரியாவின் தந்திரம் என்று கூறிய வடகொரியா இந்த அழைப்பை நிராகரித்துள்ளது.

மேலும் தென்கொரியா தனது மோதல் போக்கைக் கைவிடும் வரை அதனுடன் பேச்சு நடத்தும் எண்ணம் தங்களுக்கு இல்லை என்று வடகொரிய அரசின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடகொரியா ஏவுகணைத்தாக்குதல் நடத்தினால் அதை எதிர்கொள்ளும் வகையில் ஜப்பான் அரசு தலைநகர் டோக்கியோவைச் சுற்றிலும் பேட்ரியாட் ஏவுகணைகளை நிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# அமெரிக்காவில் அமுலாகிறது ஒழுக்கமாக ஜீன்ஸ் அணியும் சட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் உள்ளாடை தெரியும் இடுப்புக்குகீழ் ஜீன்ஸ் அணிய தடை விதிக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் உள்ளாடை தெரியும்படி இடுப்புக்கு கீழ் ஜீன்ஸ் அணிவது தற்போதைய நாகரிகமாக உள்ளது. அமெரிக்காவில் இளம் பெண்களும் இதற்கு விதிவிலக்கல்ல எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் உள்ளாடை தெரியும்படி ஜீன்ஸ் அணிந்து செல்லும் பெண்ணுக்கு பின் பல இளைஞர்கள் சுற்றுவதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து பரிஷ் நகரில் ஒழுக்க குறைபாடாக ஆடை அணிபவர்களுக்கு அபராதம் விதிப்பது தொடர்பாக தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. தீர்மானத்தை ஆதரித்து எட்டு உறுப்பினர்களும் எதிர்த்து ஒருவரும் வாக்களித்ததையடுத்து தீர்மானம் வெற்றி பெற்றதால் உள்ளாடை தெரியும்படி ஜீன்ஸ் அணிய தடை விதிக்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முதல் முறையாக இந்த தவறு செய்பவர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் இரண்டாவது முறை தவறு செய்தால் 5 ஆயிரம் ரூபாய் அபராதம் மற்றும் 16 மணி நேரம் சமூக சேவையும் செய்ய வேண்டும் என்ற தண்டனை வரையறுக்கப்பட்டுள்ளது. (அ-5)

# வரலாற்றில் முதன் முறையாக தேர்தல் களத்தில் திருநங்கை

பாகிஸ்தானில் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் வரலாற்றில் முதன் முறையாக பிந்தியா ராணா என்ற திருநங்கை தேர்தலில் களமிறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலில் போட்டியிட முடிவெடுத்தமை குறித்து பிந்தியா ராணா நிருபர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள போதும் பாகிஸ்தான் அரசியலைப் பற்றி நான் எப்போதுமே கவலைப்பட்டதில்லை. கடந்த 2004 ஆம் ஆண்டு என்னைப் போன்ற ஒரு திருநங்கை இறந்து விட்டார். அவரது உடலை சொந்த ஊரான பஞ்சாப் மாகாணத்திற்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்தோம். நானும் உடன் சென்றேன்.

எனினும்விமானம்மூலம்உடலை கொண்டு செல்வதற்குள் பல அவமானங்களை சந்திக்க நேர்ந்தது. என்னையும் இறந்துப் போன என் தோழியையும் அதிகாரிகள் கேவலமாக பேசி கேலி செய்தார்கள்.

மிகவும் ஆபாசமாக [illegible] செய்தனர். எங்கள[illegible] திருநங்கைகள் எவ்வளவு கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்று எண்ணி அன்று மிகவும் வேதனைப் பட்டேன்.

அதிகாரவர்க்கம், தொழில்முறை, அரசியல்வாதிகள், ரியல் எஸ்டேட் மாஃபியாக்கள் ஆகியோரின் முகத்திரையை கிழிப்பதற்கான வாய்ப்பாக இந்த தேர்தல் அமைந்துள்ளது.

திருநங்கைகளின் அவலங்களை மக்கள் பிரதி நிதி என்ற முறை [illegible] தேர்தலில் போட்டியிடுகிறேன் என்றார். (அ-5)

# கடலுக்கடியில் பயங்கர நிலநடுக்கம்

பப்புவா நியூகினியாவிற்கு அண்மையாக கடலுக்கடியில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. பசுபிக் கடலில் அமைந்துள்ள பப்புவா நியூகினியா நாட்டில் பவுகன்வில்லே தீவுக்கு அருகே ஏற்பட்ட இந்த பயங்கர நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோளில் 6.6 ஆக பதிவாகியுள்ளது.

அதிக எரிமலை குமுறல்களும் பூகம்பமும் நடக்கக் கூடிய இப்பகுதி ரிங் ஆப்பையர் என அழைக்கப்படுகின்றது. கடலுக்கு அடியே 64 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த பூகம்பத்திற்கு அந்நாட்டின் பெரும்பான்மையான பகுதிகள் அதிர்ந்துள்ளன.

எனினும் பாதிப்புக்கள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. இதேவேளை கடந்த 1998 ஆம் ஆண்டுஇங்கு ரிக்டர்அளவில் 7.1 ஆக பதிவான பயங்கர பூகம்பம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடன் வேகமாக ஓடி வெற்றிகான போட்டிக் குதிரைகள் இருப்பதால்தான், ஒரு குதிரை வேகமாக ஓடுகின்றது. -ஓவிட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தேர்தல் நாடகத்திற்கு தயாராகும் நடிகர்கள்

வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்துவது என்ற முடிபை அரசு எடுத்துள்ளதான தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

ஜெனிவாத் தீர்மானம், சர்வதேச அழுத்தம் என்பவற்றைச் சமாளித்தாக வேண்டுமாயின் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்ற கட்டாயத்திற்கு அரசு தள்ளப்பட்டுள்ளதென்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை.

இதன் காரணமாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வடக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர் கொள்வதற்கு அரசியல் கட்சிகள் தங்களைத் தயார்படுத்தி வருகின்றன.

இதனை இன்னொரு வகையில் கூறுவதாயின், வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்ற நாடகத்தில் திறம்பட நடித்து வெற்றியைப் பெறுவதற்காக மிகச் சிறப்பாக நடிக்கக்கூடிய வேட்பாளர்களை இனங்காணும் முயற்சிகள், தமிழ்த் தரப்பில் தீவிரமாக நடந்தேற,

ஆளும் வர்க்கமோ வன்னிப் பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்றி வடக்கில் இருக்கக் கூடிய தமிழர் தாயகம் என்ற தனித்துவத்தை உடைத்தெறியும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இரு தரப்பு நிலைமைகளும் இதுவாக இருக்க, வட பகுதித் தமிழ் மக்களோ, வாழ வழியின்றி, அமெரிக்கா கை கொடுக்கும்; இந்தியா உதவி செய்யும் என்று நம்பி, கட்டியிருக்கும் கோவணத்தையும் பறிகொடுக்கும் பரிதாபத்தில் இருக்கின்றனர்.

ஆக, வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்ற சமாச்சாரத்தில் கூட்டமைப்புகள் முதல் வேட்பாளர் யார் என்று தங்களுக்குள் போட்டியிட வடக்கு மக்கள் அந்த நாடகத்தில் மூழ்கிப்போக, ஜெனிவாத் தீர்மானம் தன்னிலை இழந்துபோகும்.

இலங்கையின் வரலாற்றில் காலாகாலமாக நடந்து கொண்டிருக்கும் ஆட்சியாளர்களின் பூச்சாண்டி விளையாட்டில், தமிழ் அரசியல் தலைமைகள் தம்மை மறந்து தம் நாமம் கெட்டுப் போகின்ற துர்ப்பாக்கியத்தனங்களைத் தடுக்க, தமிழ்ப் புத்திஜீவிகள்,தேர்தல் காலங்களிலேனும் மக்களை வழிப்படுத்த களமிறங்க வேண்டும்.

போருக்குப் பின்பு இலங்கை அரசு, சர்வதேச சமூகத்தை எதிர்கொள்கின்ற முறைமைகள், கையாள்கின்ற இராஜதந்திரங்கள், தமிழர் தாயகம் என்று வரையறுக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்துகின்ற தமிழ் இன உடைப்புகள் என்பனவற்றின் பின்னால் இருக்கக்கூடிய சிங்களப் புத்திஜீவிகளின் கடும் பங்களிப்பை யாரும் நிராகரித்து விட முடியாது.

எனவே , பதவியையும் பணத்தையும் மட்டும் சிந்திக்கின்ற தமிழ் அரசியல் தலைமைகளை ஒழுங்குபடுத்த- பயன்படுத்த தமிழ்ப் புத்திஜீவிகள் முன்வருவது கட்டாயமானதாகும்.

# யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளுக்கு தாம் காப்பெற் இடுவதாக நடிக்கின்றனர்

## யாழ்.மாநகர சபை எதிர்க் கட்சி குற்றச்சாட்டு

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு காப்பெற்றிடப்படுவதற்கும் ஆளும் கட்சியினருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. ஆனால் தாம்தான் அவற்றை செய்வதாகக்கூறி அரசியல் செய்து வருகின்றனர் என எதிர்க் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக மாநகர சபையின் எதிர்க் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி மேலும் தெரிவிக்கையில்,

வீதிகளுக்கு காப்பெற்றிடும் நடவடிக்கை இலங்கையில் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட பகுதியில் மட்டும்தான் காப்பெற் இடப்படுவதாகவும் அதனைத் தமது கட்சி தான் மேற்கொண்டுவருகின்றதென்ற தோற்றப்பாடு தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வீதிகளுக்கு காப்பெற் இடப்பட்டதை அரசியலாக்கப் பார்க்கின்றனர். அத்தோடு அரசியலுக்காகவே அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கின்றனர் எனவும் குற்றம்சாட்டிய உறுப்பினர், மக்களின் வரிப் பணத்திலும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பவற்றிடம் நிதியைக் கடனாகப் பெற்று வீதிகளுக்கு அரசாங்கம் காப்பெற்றிட்டு வருகின்றது. ஆனால் அதனை எவ்வாறு ஒரு அரசியல் கட்சி அல்லது மாநகர சபையின் ஆளும் தரப்பினர் உரிமை கொண்டாட முடியும்? அவ்வாறு உரிமை கொண்டாடமுடியும் என்றால் தென்னிலங்கையிலுள்ள கட்சிகள் தமது ஆளுகைக் குட்பட்ட வீதிகளுக்கு தமது பெயரைச்சூட்ட முற்படவில்லையே.

வடக்கு மாகாணத்தில் யாழ்.மாநகர சபையின் ஆளுங்கட்சி மட்டும் ஏன் இவ்வாறு அரசியல் விளம்பரத்திற்காகவும் அரசியல் ரீதியாக இலாபம் தேடுவதற்காகவும் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இதனை எதிர்க்கட்சியினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# தகவல் ஆணைய அதிகாரிகளால் பேறிவாளனிடம் விசாரணை

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் ஒருவரான பேறறிவாளனிடம் தகவல் ஆணைய அதிகாரிகள் வீடியோ மாநாடு மூலம் விசாரணை நடத்தியுள்ளனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்தச்செய்திகளில் மேலும்தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் முருகன், பேறறிவாளன், சாந்தன் ஆகியோர் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்களுடைய கருணை மனுக்களை இந்திய ஜனாதிபதிக்கு கொடுத்தனர். இந்த மனுக்களை ஜனாதிபதி தள்ளுபடி செய்தார். தனது கருணை மனு தள்ளுபடி செய்யப்பட்டது ஏன்? எனக் கேட்டு பேறறிவாளன் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்.

ஆனால் இந்தக் கடிதத்துக்கு மத்திய உள்துறை அமைச்சகத்திடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை. இதற்கு பதில் தர மறுப்பது ஏன் என்று கேட்டு பேறறிவாளன் மத்திய தகவல் ஆணையருக்கு மனு அனுப்பினார்.

இதையொட்டி வேலூர் சிறையில் உள்ள பேறறிவாளனிடம் மத்திய தகவல் ஆணைய அதிகாரிகள் வீடியோ மாநாடு மூலம் நேற்றுத் திங்கட்கிழமை விசாரணை நடத்தினர். (எ-4)

# மும்மொழிகளிலான தே.அடையாள அட்டை

(கொழும்பு)

மும்மொழி தேசிய அடையாள அட்டையை விரைவில் அறிமுகம் செய்வது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டை வழங்கல் எனது அமைச்சின் கீழ் இல்லை. எனினும் எனது அமைச்சு இதில் பங்களிக்கவுள்ளது என அவர் குறிப்பிட்டார். முன்னர் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் அடை யாள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டிருந்தபோதும் தற்போது மும்மொழி அடையாள அட்டை பற்றி ஆலோசிக்கப்படுகின்றது என அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டையின் முன்பக்கத்தில் சிங்களமே காணப்படுகின்றது. இதை மாற்றி மும்மொழி அடையாள அட்டையை வழங்குவதே எமது விருப்பமாகும். எவ்வாறா யினும் இந்த மாற்றத்தை கொண்டுவர ஒரு வருடமாவது எடுக்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# 15 ரயில் சேவைகள் இரத்தாகின

தமிழ்-சிங்கள புதுவருட புத்தாண்டுக்காக விடுமுறையில் சென்ற ரயில் சாரதிகள் உரிய நேரத்திற்கு கடமைக்கு சமுகமளிக்காமையினால் பிரதான ரயில் சேவைகளில் 15 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.

ரயில் சாரதிகள் சமுமளிக்காமையினால் புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக தங்களுடைய சொந்த இடங்களுக்கு சென்றோர் தலைநகர் உள்ளிட்ட பிரதான நகரங்களுக்கு திரும்புவதற்கு பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். (எ-4)

# நிமோனியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட குழந்தை மரணம்

## மரண விசாரணையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிமோனியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதனாலேயே 3 மாதக் குழந்தை உயிரிழந்தது என பிரேத பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் உயிரிழந்த நிலையில் மூன்று மாதக் குழந்தையொன்று சேர்க்கப்பட்டது.

முழங்காவில் நாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்த அன்ரனி குயின் றெக்சன் என்ற 3 மாத ஆண் குழந்தையே இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த நிலையில் சேர்க்கப்பட்டது.

குழந்தையின் உயிரிழப்புத் தொடர்பில் நேற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது குழந்தை நிமோனியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதனாலேயே உயிரிழந்தது என யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த குழந்தையின் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் குழந்தையின் சடலம் ஒப்படைக்கப்பட்டது என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (எ-6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஆன்மீகமே நமது உயிர்



✦ நீங்கள் ஒவ்வொருவரும் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள்.

✦ ஆகாயத்தின் இடியோசையைக் கேட்டும் பயப்படாதீர்கள். துணிச்சலுடன் எதிர்த்து நின்று போராடுங்கள்.

✦ உண்மை,நேர்மை அன்பு இந்த மூன்றும் ஒருவரிடம் இருக்குமானால் அவரைத் தடுத்து நிறுத்தும் சக்தி உலகில் வேறு யாருக்கும் கிடையாது.

✦ கடினமான சொல் எதையும் சொல்லவேண்டாம். உதடுகளை மூடிக்கொண்டு இதயங்களைத் திறந்து வையுங்கள்.

✦ ஆன்மீகத்தைப் புறக்கணித்துவிட்டு மேலைநாட்டு நாகரிகத்தின் பின்னால் சென்றால் நம் சமூகமே அழிந்து போகும்.

✦ ஆன்மீகம் என்னும் அத்திபாரத்தின் மீதுதான் நம் நாடு என்னும் கட்டம் எழுப்பப்பட்டுள்ளது. இந்த உண்மையை கவனத்தில் கொள்ளுங்கள்.

✦ கர்வம் தலைதூக்கி நின்றால் நம்மால் எந்தச் செயலையும் சாதிக்கமுடியாது. முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

Kolkata Knight Riders Vs Kings XI Punjab — மாலை 4 மணி

Delhi Daredevils Vs Royal Challengers Bangalore — இரவு 8 மணி

## ஐ.பி.எல்.அணிகள் பெற்ற புள்ளிகள்

IPL - 2013

| Teams | Mat | Won | Lost | Tied | Pts | Net RR |
|---|---|---|---|---|---|---|
| Mumbai | 4 | 3 | 1 | 0 | 6 | +1.15 |
| Bangalore | 5 | 3 | 2 | 0 | 6 | +0.44 |
| Rajasthan | 4 | 3 | 1 | 0 | 6 | +0.23 |
| Hyderabad | 5 | 3 | 2 | 0 | 6 | -0.38 |
| Chennai | 3 | 2 | 1 | 0 | 4 | +0.25 |
| Kolkata | 4 | 2 | 2 | 0 | 4 | +0.22 |
| Punjab | 3 | 1 | 2 | 0 | 2 | +0.49 |
| Pune | 4 | 1 | 3 | 0 | 2 | -1.39 |
| Delhi | 4 | 0 | 4 | 0 | 0 | -0.84 |

PEPSI IPL

### ஒரேஞ் தொப்பி (அதிக ஓட்டங்கள்)

1. விராட் கோலி – 256
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. தினேஸ் கார்த்திக் – 224
மும்பை இந்தியன்ஸ்
3. கிறிஸ் கெய்ல் – 195
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்



### ஊதா தொப்பி (அதிக விக்கெட்டுக்கள்)

1. கெவன் கோப்பர் – 8
ராஜஸ்தான் றோயல்
2. வினய்குமார் – 8
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
3. சுனில் நரைன் – 7
கொல்கத்தா நைட் றைடர்ஸ்

### அதிக சிக்ஸர்கள்

1. கிறிஸ் கெய்ல் – 14
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. விராட் கோலி – 10
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
3. ரோகித சர்மா – 10
மும்பை இந்தியன்ஸ்

### ஒரு போட்டியில் ஆகக் கூடுதலான ஓட்டம்

1. விராட் கோலி – 93*
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
2. கிறிஸ் கெய்ல் – 92*
பெங்களுர் றோயல் சலஞ்சேர்ஸ்
3. மைக்கல் ஹசி – 86
சென்னை சுப்பர் கிங்ஸ்

# 5 ஆண்டுகளின் பின் டுவிட்டரில் சர்ச்சையை கிளப்பிய ஸ்ரீசாந்தை எச்சரித்தது பி.சி.சி.ஐ.




5 வருடங்களுக்கு முன்னர் ஐ.பி.எல் போட்டியில் ஏற்பட்ட சர்ச்சை தற்போது மீண்டும் தலைதூக்கியுள்ளது.

ஹர்பஜன் சிங் தன்னை முன்கூட்டியே திட்டமிட்டு தாக்கியதாக வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் டுவிட்டரில் குற்றஞ்சாட்டியுள்ளார். அத்துடன ஹர்பஜன் சிங் முதுகில் குத்தும் குணம் கொண்டவர் என்றும் வர்ணித்துள்ளார். இதுதொடர்பாக அவர் டுவிட்டரில் மேலும் தெரிவிக்கையில்,

இப்போது உங்கள் அனைவருக்கும் உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த சம்பவம் தொடர்பான விடியோ காட்சிகளைப் பார்த்தால், அவர் என்ன செய்தார் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். பெரும் நம்பிக்கையும், மரியாதையும் வைத்திருக்கும் ஒருவர், முதுகில் குத்தும் குணம் கொணடவர் என்று தெரியும்போது யார் தான் கோபப்படாமல் இருப்பார்கள்?

எனவே எங்கள் இருவர் இடையிலான மோதல் சம்பவம் தொடர்பான விடியோ காட்சிகளைப் பாருங்கள் என்றுதான் சொல்ல முடியும். ஹர்பஜன் முற்றிலும் பொறுமையை இழந்த நிலையில் என்ன செய்தார் என்ற உண்மையை வீடியோ மூலம் அறிந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற ஐபிஎல் போட்டியில் ஸ்ரீசாந்த் பஞ்சாப் அணிக்காகவும், ஹர்பஜன் சிங் மும்பை அணிக்காகவும் விளையாடினர். அப்போது இவ்விரு அணிகளும் மோதிய ஆட்டத்தில் பஞ்சாப் வெற்றி கண்டது. ஆட்டம் முடிந்து திரும்பும் போது ஹர்பஜன் சிங், ஸ்ரீசாந்த் கன்னத்தில் அறைந்தார். இதைத் தொடர்ந்து அந்த ஐபிஎல் போட்டி முழுவதும் ஹர்பஜன் சிங்குக்கு தடை விதிக்கப்பட்டது.

அந்த சம்பவம் முடிந்து 5 ஆண்டுகளுக்குப் பின்னர் கருத்து தெரிவித்து சர்ச்சையை கிளப்பிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்தை இந்தியக் கிரிக்கெட் சபை (பிசிசிஐ) எச்சரித்துள்ளதாகவும் இது தொடர்பாக ஸ்ரீசாந்தை விளக்கமளிக்குமாறு நோட்டீஸ் அனுப்பப்படும் என்று பிசிசிஐ சார்பில் ஸ்ரீசாந்திடம் கூறப்பட்டிருப்பதாக பி.சி.சி. வட்டாரங்கள் தெரிவித்தன.

## அக்ரமுடன் நோ..! டுவிட்டரில் சுஷ்மிதா



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புகழ் பெற்ற வேகப்பந்து வீச்சாளரான முன்னாள் அணித்தலைவர் வசிம் அக்ரம் தற்போது தொலைக்காட்சி வர்ணனையாளராக கடமையாற்றி வருகிறார். இவரது மனைவி ஹூமா கடந்த 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மரணமடைந்தார்.

இந்நிலையில் இந்தி நடிகையும், முன்னாள் உலக அழகியுமான சுஷ்மிதா சென்னுக்கும் வசிம் அக்ரமுக்கும் இடையே தொடர்பு இருப்பதாகவும், வசிம் அக்ரமை சுஷ்மிதா சென் திருமணம் செய்ய முடிவு செய்திருப்பதாகவும் பரபரப்பான தகவல் வெளியாகி இருந்தது. ஆனால் இதை சுஷ்மிதா சென் கடுமையாக மறுத்துள்ளார்.

இது குறித்து டுவிட்டர் இணைய தளத்தின் மூலம் சுஷ்மிதா சென் கூறுகையில், வாசிம் அக்ரமை நான் திருமணம் செய்து கொள்ள போவதாக வெளியான தகவல் வதந்தியே இது முட்டாள் தனமானது. வசிம் அக்ரம் எப்போதுமே எனக்கு நல்ல நண்பர். இது மாதிரியான வதந்திகள் அவமானத்தை ஏற்படுத்தி உள்ளன என்று தெரிவித்துள்ளார்.




### இதுவும் ஐ.பி.எல். போட்டியில் தான்......


ஐ.பி.எல்.போட்டிகளில் வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காகவும் ரசிகர்களை குளிர்மைப்படுத்துவதற்காகவும் நடன மங்கையரின் கண்கவர் நடனங்கள் இடம்பெற்று வருகின்றன. அதிகமான போட்டிகளில் மங்கையரின் குத்தாட்டங்கள் இடம்பெற்றுவரும் நிலையில்,

அண்மையில் நடைபெற்ற புனே - பஞ்சாப் அணிகள் மோதிய ஆட்டத்தில் வீரர்களை உற்சாகப்படுத்திய நடன நங்கையர்களின் நடனம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னையை வீழ்த்தியது புனே வாரியர்ஸ்





(சென்னை)

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 19-வது லீக் போட்டி நேற்றிரவு 8 மணிக்கு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் புனே வாரியர்ஸ் இந்தியா, உள்ளூர் அணியான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியைச் சந்தித்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற புனே அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிந்து கொண்டது.

இலங்கை வீரர்களுக்கு சென்னையில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்ற விதிக்கப்பட்ட தடையின் நிமிர்த்தம் இந்தப் போட்டியில் வழக்கமான அணித் தலைவரான அஞ்சலோ மத்யூஸ் பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக நியூசிலாந்தின் முன்னாள் அணித் தலைவர் றோஸ் ரெய்லர் அணியை வழிநடத்தினார்.

துடுப்பாடக் களமிறங்கிய புனே அணிக்கு ஆரோன் பின்ச் - றொபின் உத்தப்பா ஜோடி சிறந்த ஆரம்பத்தை கொடுத்தது.

இவ் ஜோடியில் பின்ச் அதிரடியாக ஆட, அவருக்கு ஒத்துழைப்பு கொடுக்கும் வண்ணம் உத்தப்பா நிதானமாக ஆடினார்.

இந்த ஜோடியின் இவ்வாறான ஆட்டத்தின் காரணமாக அணியின் ஓட்ட எண்ணிக்கை சீராக உயர்ந்தது.

இந்த ஜோடியின் அதிரடியைக் கட்டுப்படுத்த சென்னை அணியின் பந்து வீச்சாளர்களால் 12.2 ஓவர்கள் வரை முடியவில்லை.

எனினும் அவ் அணி 12.3 ஓவர்களில் 96 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இந்த ஜோடியின் ஆட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இதில் அதிரடியாக விளையாடிய ஆரோன் பின்ச் 67 ஓட்டங்களுடன் ஜடேஜாவின் பந்துவீச்சில் தோனியால் ஸ்ரம்ப் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து வந்த வீரர்களில் ஸ்ரீபன் ஸ்மித் சிறப்பாக ஆடி 16 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 39 ஓட்டங்களைக் குவித்தார். தவிர ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான றொபின் உத்தப்பா 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

புனே வாரியர்ஸ் இந்தியா அணி 20 நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக மொரிஸ், பிராவோ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

160 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்பமே தடுமாற்றமாக அமைந்தது.

இந்தப் போட்டியில் தொடக்க வீரராக களமிறங்கிய அனிருத் ஆட்டத்தின் 2 பந்தில் புவ்னேஸ்வர் குமாரால் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து வந்த வீரர்களும் பொறுப்பற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் காரணமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் 20 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களையே பெற முடிந்தது.


துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் பத்ரிநாத், ஜடேஜா, முரளி விஜய் ஆகியோர் 34, 27, 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் புனே வாரியர்ஸ் இந்தியா சார்பாக புவ்னேஷ்வர் குமார், அசோக் டின்டா, மிட்சல் மார்ஷ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக புனே அணியின் ஸ்ரீபன் ஸ்மித் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் புனே வாரியர்ஸ் இந்தியா அணி 2 புள்ளிகளைக் கைப்பற்றியது.

# பஹ்ரைரன் பார்முலா வன் கார் பந்தயத்திற்கு எதிர்ப்பு




பஹறைரன் நாட்டில் நேற்று முன்தினம் நடந்த கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை என்ற போதிலும் அங்கு நடைபெறவிருக்கும் பார்முலா வன் கார் பந்தயத்தின் பாதுகாப்பு குறித்த அச்சம் எழுந்துள்ளது.

பெப்ரவரி 14 என்ற இயக்கம் இந்த குண்டு வெடிப்பிற்கு பொறுப்பேற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

பஹ்ரைனின் தகவல் விவகாரங்கள் துறை அமைச்சர் சமீரா ரஜப் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்துப்பேசிய சில மணி நேரத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

அயல் நாட்டு ஊடங்கள் நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தவறான தகவல்கள் தருவதாகக் கூறிய அமைச்சர், வரவிருக்கும் கார் பந்தயத்தைப் பொறுத்தமட்டில் வன்முறைகள் எதுவும் பெரிய அளவில் நடைபெறவில்லை என்றும் தெரிவித்துள் ளார்.

இந்தக் கார் பந்தயங்களை நடத்தம் நிறுவனத்தின் தலைவர் பெர்னி எக்ளிஸ்டோன் சீனாவின் ஷாங்காய் நகரில் பத்திரிகையாளகளிடம் பேசிய போது,

பாதுகாப்பு குறித்த சந்தேகங்களைத் தவிர்த்து இந்தப் போட்டி வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஆனால் தினமும் இந்தப் போட்டியைத் தடை செய்யக்கோரி நடைபெறும் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்படுகின்றனர்.

முதன்முதலாக வெளிப்படையாக வன்முறைச் செயலை ஒத்துக்கொண்ட பெப்ரவரி 14 இயக்கம் இதைவிடத் தீவிரமாக ஏதேனும் செய்யலாம் என்ற அச்சம் பொது மக்களிடத்தில் உள்ளது.

ஆனால் 2 வருட பிரச்சினைகளுக்குப் பின்னர் அரசு தன்னை நிலையானதாகக் காட்டிக்கொள்ள விரும்புவதால் இந்தப் போட்டியை நடத்துவதில் உறுதியாக உள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜபாக்கியம் பவானிதேவி



வண்ணார்பண்ணை, பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜபாக்கியம் பவானிதேவி நேற்று (15.04.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா பாராசக்தி அவர்களின் அன்பு மூத்த மகளும், காலஞ்சென்ற விநாசித்தம்பி துரையம்மா அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜபாக்கியத்தின் (ஒளி, ஒலி அமைப்பாளர்) அன்பு மனைவியும், கமலாதேவி, விமலாதேவி, மகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மணியம்மா (அமரர்), உதயச்சந்திரன் (அமரர்), சந்திரசேகரம், குணசேகரம் (அமரர்) ஆகியோரின் மைத்துனியும், சச்சிதானந்தன், இராஜசிலோசனா (சாந்தி - லண்டன்), காலஞ்சென்ற பவானந்தன், பிரபானந்தன், இராஜமோகனா (ஹொலண்ட்), கிருபானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ருக்குமணிதேவி, இராஜலிங்கம் (லண்டன்), துவாம்சன் (ஹொலண்ட்), கலைமதி (லண்டன்) ஆகியோரின் மாமியும்,

சாரங்கன், சாருஜன், ரூபிகா, ரம்யா (லண்டன்), சௌமியா, சொனியா (லண்டன்), அதிசயா (ஹொலண்ட்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

85, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சச்சிதானந்தன்
சச்சி (மகன்)

(2380)

# அவுஸ்திரே...

வர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பிரதான நகரை சென்றடையும் புகலிடக் கோரிக்கையாளர்களை மனுஸ் மற்றும் பபுவாநியு கினி தீவுகளுக்கு அனுப்பி வைக்க சட்டத்தில் இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

# சிறுவர் இல்...

16 சிறுமியர்கள் வெளியேறி காணாமல் போயுள்ளனர். அது தொடர்பில் விடுதியின் பொறுப்பதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது எனவும் தெரிவித்தார்.

விடுதியின் பொறுப்பதிகாரிகள் 10 சிறுமியர்தான் வெளியேறி காணாமல்போயுள்ளனர் எனத் தெரிவித்திருந்தனர். ஆனால் பொலிஸார் 16 சிறுமிகள் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இராணுவ...

சாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் அரசாங்கம் வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும், இல்லாவிட்டால் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து முன்வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கின் இனக்குழுமத்தில் அரசாங்கம் மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய நாடாளுமன்றக் குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே சமூக மேம்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகம். அங்கு குடியியல் நிர்வாகம் கிடையாது என்பதில் உண்மையுள்ளது. எனவே அங்கு இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்து குடியியல் நிர்வாகச் செயற்பாடுகளை இராணுவத்தினர் மேற்கொள்வதைத் தடுக்க வேண்டும்.

இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கி வடக்கில் முழுமையான குடியியல் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

வடக்கில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை. அரசாங்கம் அவ்வாறானதோர் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் படிப்படியாக நடைமுறைப்படுத்திவருகிறது.

இதற்கமையவே தற்போது வடக்கில் 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது. தேசிய நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ் மக்களை அரசாங்கம் அடிமைப்படுத்தவில்லை. அம்மக்களின் அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வடக்கில் மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்த வேண்டும். இல்லாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்களுக்கு தொடர்ந்து முகம் கொடுக்க நேரிடும்.

இத்தேர்தலை நடத்துவதன் மூலமே அரசாங்கத்தின் நியாயத்தன்மையை வெளிப்படுத்த முடியும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கில் சிங்கள குடியேற்றங்களும் இலங்கை படைத்தரப்பினரின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளும் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்லாது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட கட்சியும் பொது அமைப்புகளும் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# இலங்கைக்கான அமெ...

ஜோன் ஹெரியின் வரவு செலவுத் திட்ட ஆலோசனையில் தென்னாசிய நாடொன்றுக்கான ஆகவும் கூடிய உதவிக் குறைப்பாக இது அமைவதாக கூறப்பட்டுள்ளது. இலங்கைக்கு 11 மில்லியன் டொலர் உதவி வழங்கப்பட வேண்டும் என கூறியுள்ளார். இது 2012-ம் ஆண்டு அமெரிக்காவினால் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட உதவியுடன் ஒப்பிடுகையில் 20 சதவீத வெட்டைக் காட்டுகின்றது.

நாம் வடக்கிலும் இடம்பெயர்ந்தோருக்கும் வழமையான வாழ்வுக்கு திரும்பவும் மீள் கட்டுமானத்தில் உதவவும் பெரிதும் முயற்சி செய்தோம். ஆனால் நாம் ஆதரவளிக்க முயன்ற பல திட்டங்களில் அரசாங்கம் குறிப்பாக இராணுவம் தலையீடு செய்தது. எனவே எம்மால் அந்தத் திட்டங்களை தொடர முடியவில்லை என சிரேஷ்ட இராஜாங்க திணைக்கள அதிகாரி குறிப்பிட்டார்.

இலங்கை நடுத்தர வருமானமுள்ள ஒரு நாடு. இங்கு எமக்கு திட்டமிடுதலிலும் கஷ்டங்கள் உள்ளன. எனவே தனது சொந்த மூலவளங்களைக் கொண்ட நாடான இங்குதான் நாம் உதவியை குறைக்க வேண்டும் என தனது பெயரைக் வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மாலைதீவுக்கு கணிசமான உதவி அதிகரிப்பை ஹெரி முன்மொழிந்துள்ளார். அமெரிக்க உதவியில் பெரும் பகுதி நீதித்துறைச் சீர்திருத்தம் தொடர்பான திட்டங்களுக்கே செலவளிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (எ-4)

# இலங்கைத் தமிழர்...

களை பாதுகாப்புக் காரணம் கருதி நீதிமன்றம் வெளியிட மறுத்துள்ளது.

சவுதி அரேபியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 19 பேரின் நிலைக்கெதிராக, கொங்ஹொங் சித்திரவதைக்கு இலக்காகும் வாய்ப்புள்ள அகதிகளை அவர்கள் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பாத சர்வதேசக் கொள்கையை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இலங்கையில் நடத்தப்படும் சித்திரவதைகளை வருணித்த கொங்ஹொங் நீதிமன்றம் மின் அதிர்ச்சியூட்டுதல், பெட்ரோல் புகை செலுத்தி மூச்சுவிட முடியாமல் செய்தல், இயற்கைக்கு மாறான உடலுறவுக்கு வற்புறுத்தல் போன்றவை பல குடியரசுத் தலைவர்களின் ஆட்சியினூடாக இலங்கையில் முறையாக வடிவம் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது என்று இச்செய்தியை வெளியிட்ட இனப்படுகொலைக்கெதிரான தமிழர்கள் என்ற அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

மேற்கண்ட இருவருக்கும் மார்க் டேலி, பீட்டர் பேர்ணஸ் என்ற இரு வழக்குரைஞர்கள் வழக்கு நடத்தினர். அவர்களில் பேர்ணஸ் கூறுகையில்,

இது தனக்கு மகிழ்ச்சியளித்திருப்பதாகவும், பாதுகாப்புத் தேவைப்படும் ஒருவருக்கு நீதியை வழங்க நமது நடைமுறை உதவியிருக்கிறது. இது இதைப் போன்ற மற்றையோருக்கும் உதவும் என்றார்.

சித்திரவதை மற்றும் கொடூரத் தன்மைக்கெதிரான - மனிதத் தன்மையற்ற இழிவு செய்யும் முறை அல்லது தண்டனைக்கெதிரான ஐ.நா.சாசனத்தை கொங்ஹொங் பின்பற்றத் தொடங்கியுள்ளது. (எ-4)

# வடக்கு முதலமைச்சர்...

கூட்டமைப்பின் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை பொது வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் கூட்டமைப்பின் முக்கிய சில தலைவர்கள் நீதியரசரை சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்திப்பின் போது ஒரு குறிப்பிட்ட கட்சியின் சார்பில் போட்டியிட தான் விரும்பவில்லை என்றும் பொது வேட்பாளராக அனைவரும் ஏற்றுக்கொண்டால் அது குறித்து பரிசீலிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா போட்டியிடலாமென எதிர்வு கூறப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே பொது முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரை வேட்பாளராக நிறுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக வருபவர் அரசியல், பொருளாதார துறையில் வல்லமை உள்ளவராகவும் அமையவேண்டியது இன்றியமையாததாகும். அந்த வகையில் பொது முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடி முடிவுகளை எடுக்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் மற்றொரு முக்கியஸ்தர், பொதுவேட்பாளர் தொடர்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு ஏற்பட வேண்டியது அவசியம் என்று தெரிவித்தார். (எ-4)


**A/L - முன்னோடிக் கருத்தரங்கு-2013**

**LOGIC & S.M**

வினாத்தாள்கள் I, II எதிர்பார்க்கை வினாக்கள்

ஆசிரியர் M.றொபின் B.A.(Hons), M.A(Phi), PGED

(Royal College-Colombo)

காலம்: 18,19-04.2013 வியாழன், வெள்ளி 9.00 - 1.00 மணி வரை

மேலதிக தொடர்பு: 0771753838

யா/பட்டப்படிப்புக்கள் கல்லூரி (D.C.S)

ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி முன்பாக), யாழ்ப்பாணம்.

(2377)


## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கந்தையா

(இளைப்பாறிய தபாலதிபர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் ஐயா கடையடி மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கந்தையா அவர்கள் நேற்று (15.04.2013) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஐயா கடை, மீசாலை கிழக்கு, மீசாலை.

தகவல்: தவமணி கந்தையா (மனைவி)

(சி-3003)


**கனடாவில் படிக்க உழைக்க**

அரிய வாய்ப்பு

மிகமிகக் குறைந்த கட்டணத்தில் ஆலோசனை.

25.04.2013 வரை மட்டுமே இச்சலுகை.

தவறவிடாதீர்கள்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



021 221 9016, 021 568 9090

(சி-3002)



**முக்கிய அறிவித்தல்**

**V.S.P நல்லெண்ணெய்**

அன்பான V.S.P நல்லெண்ணெய் விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவெனில், V.S.P என்று போலியான லேபில்களை பயன்படுத்தி நல்லெண்ணையாக வெளிவருகின்றன. எனவே நீங்கள் எமது தயாரிப்பான V.S.P ஐ இலகுவாக இனம்கண்டுகொள்ள பரிமளா ஸ்ரோர்ஸ், 26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன், உரிமையாளர் பொ. பாஸ்கரன் என்பவரின் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது.

ஆதலால் அன்பான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் இதனை நன்கு கவனித்து கொள்வனவு செய்து கொள்ளவும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ், 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: பொ. பாஸ்கரன் 0212229165, 0212224135.

(சி-2846)



**FALC FRENCH LANGUAGE CENTRE**

யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்

**FRENCH CLASSES**

Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).

690 க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்..

ஆரம்பம்: 20.04.13 Sat 2 pm
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)

ஆரம்பம்: 23.04.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street,
Nelliady. (சோதி வீதி முன்பாக)

T.P. 0779 789 456

English (A1,B1,IELTS), Italian, Deutsch, Sinhala வகுப்புக்களும்...

(சி-2990)



புதிய **நாவலர்** கல்வி நிலையம்

ஆனைப்பந்தி. யாழ். நகர்.

**O/L DAY CLASS**

பிரிவு-I ஆரம்பம் 17.04.2013 புதன் 8.00 மணி

அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்.

(சி-3001)



**மகா சில்க்ஸ், பியூட்டி சில்க்ஸ், கவுஸ் ஒவ் செலெக்சன் ஸ்தாபனத்தால் 14.04.2013 அன்று குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட**

**அதிர்ஷ்டசாலிகளின் விபரம்**

**மகா சில்க்ஸ் ஸ்தாபனத்தினால்**
தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலி
திரு.எஸ்.சத்தியானந்தன்
பற்றுச்சீட்டு இல.: 1116
முகவரி: 5 ஆம் கட்டை, பெரியவிளான், இளவாலை.

**பியூட்டி சில்க்ஸ் ஸ்தாபனத்தினால்**
தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலி
செல்வி கு.திஷோதா, செல்வி கு.தினோஷா
பற்றுச்சீட்டு இல.: 9698, 9696
முகவரி : மீசாலை மேற்கு, மீசாலை.

**கவுஸ் ஒவ் செலெக்ஷன் ஸ்தாபனத்தினால்**
தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலி
திருமதி.U.அகிலா
பற்றுச்சீட்டு இல.: 5473
முகவரி : கோப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

உங்களுக்கான பரிசில்களை எமது ஸ்தாபனங்களில் பெற்றுக்கொள்ளலாம்.



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

The Only Official French Language Centre in Jaffna

பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

French மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இச் சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலிய நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்க விரும்பும் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள். மேலும் தரமான CERTIFICATE ஐ பெறுங்கள்.

உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021 222 8093

61, Kachcheri-Nallur Road, Jaffna. E-mail: alliancejaffna@yahoo.com

(முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)

(2375)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org